மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள்

(11.02.2019 முதல் 09.01.2020 வரை)

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள்

(11.02.2019 முதல் – 09.01.2020 வரை)

சிறப்பு வெளியீடு எண். 39

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2020

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

பொருளடக்கம்

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
1.	பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது தொடர்பாக அளித்த விளக்கம் (11.02.2019)	1
2.	வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குதல் குறித்து அளித்த விளக்கம் (11.02.2019)	3
3.	சேலம் மாவட்டம் தலைவாசலில் ஒருங்கிணைந்த நவீன கால்நடை பூங்கா அமைப்பது குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)	5
4.	ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களின் இறப்புக்கு ஈமச்சடங்கு மானியம் வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)	8
5.	ஆந்திர மாநில அரசு, பாலாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவது தொடர்பாக அளித்த விளக்கம் (12.02.2019)	10
6.	பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)	14
7.	கஜா புயல் மற்றும் பருவமழை பொய்த்ததன் காரணமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியுதவி வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)	16

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

8. கிராமங்களில் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் பிரச்சினைகளை தீர்க்க தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம் (12.02.2019).................... 18

9. மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம் (13.02.2019).................... 20

10. கந்தன் கோட்டை நீர்த்தேக்கத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (13.02.2019).................... 22

11. நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி, வடக்குப்பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு.சரவணன் என்பவர் 15.01.2019 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தமைக்கு நிவாரணம் வழங்குவது குறித்து ஆற்றிய உரை (13.02.2019).................... 24

12. மணல் கொள்முதல் குறித்து ஆற்றிய உரை (13.02.2019).................... 25

13. சர். பிட்டி தியாகராஜர் பிறந்தநாள் விழா மற்றும் ஐராவதம் மகாதேவன் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்குவது தொடர்பான கேள்விகளுக்கு அளித்த பதில்கள் (14.02.2019).................... 27

14. தமிழ்நாட்டில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு குறித்தும், மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் அளித்த விளக்கம் (01.07.2019).................... 28

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
15.	தமிழ்நாட்டில் மருத்துவப் பட்டப்படிப்பு பயில 69 சதவிகித இடஒதுக்கீடு தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்பது தொடர்பாக அளித்த விளக்கம் (02.07.2019)	31
16.	எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு அளித்த பதிலுரை (04.07.2019)	33
17.	சேலம் உருக்கு ஆலை குறித்து அளித்த விளக்கம் (05.07.2019)	37
18.	பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்த்தி வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (05.07.2019)	39
19.	பாதாள சாக்கடைத் திட்டத்தால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பது தொடர்பாகவும், நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறைகளில் செயல்படுத்தப்படும் பணிகள் தரம் சோதனை செய்யப்படுவது தொடர்பாகவும் அளித்த விளக்கம் (08.07.2019)	42
20.	தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிமராமத்துத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (08.07.2019)	45
21.	கடல் அலையில் சிக்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வேண்டி குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மனு தொடர்பாக ஆற்றிய உரை (09.07.2019)	50
22.	முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஏழு பேர்களை விடுதலை செய்வது குறித்து அளித்த விளக்கம் (09.07.2019)	51
23.	நீட் தேர்வு குறித்து அளித்த விளக்கம் (10.07.2019)	53

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

24. திண்டிவனம் – கிருஷ்ணகிரி சாலைப் பணிகள் மற்றும் மதுரவாயல் பிரச்சினை குறித்து அளித்த விளக்கம் (10.07.2019).......... 56

25. ஆதம்பாக்கம் ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து அளித்த விளக்கம் (10.07.2019).......... 59

26. தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்ட இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாக அளித்த விளக்கம் (11.07.2019).......... 60

27. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பின் அளித்த பதிலுரை (15.07.2019).......... 62

28. தபால் துறை தேர்வில் தமிழ் மொழி இடம் பெறுவது குறித்து அளித்த விளக்கம் (15.07.2019).......... 103

29. நீர் மேலாண்மை மற்றும் குடிமராமத்துத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (15.07.2019).......... 106

30. குடிமராமத்துப் பணிகள் குறித்து அளித்த விளக்கம் (15.07.2019).......... 110

31. உய்யக்கொண்டான் வாய்க்கால் குறித்து அளித்த விளக்கம் (15.07.2019).......... 113

32. ஆழியாறு ஆற்றில் மணக்கடவு வரை மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டி நீரைத் தேக்குவது தொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதான பதில் (17.07.2019).......... 115

33. தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிப்பது குறித்து அளித்த விளக்கம் (17.07.2019).......... 116

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
34.	திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளையாற்றை சீரமைப்பது குறித்து அளித்த விளக்கம் (17.07.2019)	119
35.	காஞ்சிபுரம் ஸ்ரீ அத்திவரதர் வைபவத்திற்கான பாதுகாப்பு மற்றும் பக்தர்கள் வசதிகள் குறித்த நடவடிக்கைகள் பற்றி அளித்த விளக்கம் (18.07.2019)	120
36.	மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55இன் கீழ், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து ஆற்றிய உரை (18.07.2019)	130
37.	2019–2020ஆம் ஆண்டிற்கான காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப்பின் அளித்த பதிலுரை (19.07.2019)	134
38.	அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலங்களில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் காவல்துறையை நவீனப்படுத்தவும், அவர்கள் குடும்பத்தினர் பயனடையவும் கொண்டுவரப்பட்ட சிறப்புத் திட்டங்கள் குறித்து அளித்த விளக்கம் (19.07.2019)	161
39.	சிலைக் கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க திரு. பொன் மாணிக்கவேல் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டது குறித்து அளித்த விளக்கம் (19.07.2019)	166
40.	சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி குறித்து அளித்த விளக்கம் (20.07.2019)	171
41.	8 வழிச்சாலைத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (20.07.2019)	172

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

42. காவேரி நதிநீர் பிரச்சினை குறித்து அளித்த விளக்கம் (20.07.2019) 173

43. அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா குறித்து அளித்த விளக்கம் (20.07.2019) 176

44. மேகதாது அணை குறித்து அளித்த பதிலுரை (20.07.2019) 180

45. வெங்காய விலை உயர்வு, பணிஓய்வு மூலமாக ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் மற்றும் விவசாயிகளுக்கு அரசு செயல்படுத்திய திட்டங்கள் குறித்து அளித்த விளக்கம் (07.01.2020) 182

46. சட்டமன்ற விதி 110இன் கீழ், அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து அளித்த பதில் (07.01.2020) 184

47. முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (07.01.2020) 186

48. ஜல்லிக்கட்டு போராட்டம் விசாரணை, ஸ்டெர்லைட் விசாரணை மற்றும் புதிய நெல் ரகம் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு குறித்து அளித்த விளக்கம் (07.01.2020) 189

49. குடிமராமத்துத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (07.01.2020) 191

50. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் புதிதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள் குறித்து அளித்த விளக்கம் (07.01.2020) 196

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
51.	சட்டம் ஒழுங்கில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது குறித்தும், உள்ளாட்சி தேர்தல் குறித்தும் அளித்த விளக்கம் (07.01.2020)	197
52.	குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான கோலம் குறித்தும், நெல்லை கண்ணன் கைது குறித்தும் அளித்த விளக்கம் (07.01.2020)	201
53.	மேகதாது அணை விவகாரம் குறித்து அளித்த பதில் (08.01.2020)	202
54.	சிறந்த நல்லாட்சிக்கான பல்வேறு குறியீடுகளில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மத்திய அரசு தெரிவு செய்து அறிவித்தது தொடர்பாக அளித்த விளக்கம். (08.01.2020)	203
55.	உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் குறித்து அளித்த விளக்கம் (08.01.2020)	208
56.	விபத்துகளினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி அறிவித்தது குறித்தும், கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனை சாவடியில் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் அவர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு உயிரிழந்தது குறித்தும் ஆற்றிய உரை (09.01.2020)	211
57.	மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 06.01.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய பதிலுரை (09.01.2020)	217

✠ ✠ ✠

பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது தொடர்பாக அளித்த விளக்கம் (11.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு.செங்குட்டுவன் அவர்கள், தங்களுடைய பகுதியிலே கால்வாய் அமைக்க வேண்டும் என்று இன்றைக்கு கோரிக்கை வைத்திருக்கின்றார். ஏற்கெனவே, இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவிலே நாங்கள் அறிவித்தோம். அந்த அறிவிப்பின்படி, எண்ணெய்கோல் புதூர் அணைக்கட்டு பெண்ணையாற்றில் வரும் கூடுதல் வெள்ளநீரை, இந்த அணைக்கட்டின் இடதுபுறம் மற்றும் வலதுபுறத்தில் புதிய வாய்க்கால்கள் அமைத்து, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டத்திற்கு விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டுசெல்ல நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக ரூ.72 கோடி செலவில் நிலம் கையகப்படுத்த 01.02.2018 அன்று அரசாணை வழங்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே, அங்கே இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையை ஏற்று, உங்களுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயப் பெருமக்கள், பொதுமக்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த திட்டத்தை நிறைவேற்றி இருக்கின்றோம். நீங்கள் சில பகுதிகள் விடுபட்டதாக சொன்னீர்கள். அந்தப் பகுதியும் ஆய்வு செய்யப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், உங்களுடைய தொகுதியிலே பெண்ணை ஆற்றின் குறுக்கே போச்சம்பள்ளி தாலுகா, அரசம்பட்டி கிராமத்தில் ரூ.8.5 கோடி செலவில் தடுப்பணை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல,

பெண்ணையாற்றின் குறுக்கே பெண்டரஹள்ளி கிராமத்தில் ரூ.8.5 கோடி செலவில் தடுப்பணை கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கின்ற விவசாய பெருமக்கள் உங்களைப் போல் அரசியலில் இருக்கின்ற தலைவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் ஏற்று, இந்த தடுப்பணையும் அம்மாவுடைய அரசால் கட்டித்தரப்படும். ஆகவே, அம்மாவுடைய அரசு எப்பொழுதும் விவசாயிகள் பக்கம் இருக்கும் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குதல் குறித்து அளித்த விளக்கம் (11.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் உறுதியாக நடக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஏழை, எளிய மக்களின் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்டு, அவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

பல மாவட்டங்களில் ‘கஜா’ புயலின் தாக்கத்தினாலும், பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினாலும் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழை மக்கள், பட்டாசுத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், விசைத்தறித் தொழிலாளர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியுதவியாக தலா **2,000** ரூபாய் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இதனால், கிராமப்புறத்தில் வாழும்

சுமார் 35 இலட்சம் ஏழைக் குடும்பங்களும், நகர்ப்புறத்தில் வாழும் சுமார் 25 இலட்சம் ஏழைக் குடும்பங்களும் ஆக மொத்தம், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சுமார் 60 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் தலா 2,000 ரூபாய் சிறப்பு நிதியுதவியைப் பெறுவர். இதற்கென 1,200 கோடி ரூபாய் 2018–2019ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

❖ ❖ ❖

சேலம் மாவட்டம் தலைவாசலில் ஒருங்கிணைந்த நவீன கால்நடை பூங்கா அமைப்பது குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சித் தொடர விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும், கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை ஏற்றமடையச் செய்ய, விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன் நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் வண்ணம், "அசீல்" இனக் கோழிகளை கிராமப்புற மக்களுக்கு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் வேளாண் தொழிலின் உபதொழிலான கால்நடைத் தொழிலை மேன்மைப்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரும் வகையில், கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்புகளையும், தொழில்நுட்பங்களையும் மேம்படுத்த போதுமான நிதி ஆதாரங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண் 79–ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான 900 ஏக்கர் பரப்பில் கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன்கூடிய நவீன கால்நடை பூங்கா ஒன்று

சுமார் 396 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். 3 பிரிவுகளாக அமைய உள்ள இப்பூங்காவின் முதலாவது பிரிவில், நவீன வசதிகளைக் கொண்ட கால்நடை மருத்துவமனை, நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக்காட்டும் வகையில், கறவை மாட்டுப் பண்ணை, உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம் மற்றும் பர்கூர் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கப் பண்ணை, செம்மறி மற்றும் வெள்ளாட்டின் பண்ணை, பன்றிகள், கோழியினப் பிரிவுகள் மற்றும் நாட்டின நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகியவற்றிற்கான இனப்பெருக்கப் பிரிவுகளைக் கொண்ட கால்நடைப் பண்ணை வளாகம் அமைக்கவும், இரண்டாம் பிரிவில் பால், இறைச்சி, மீன் மற்றும் முட்டை போன்ற உணவுப்பொருட்களை பாதுகாத்து பதப்படுத்தவும், அவற்றிலிருந்து பல்வேறு உபப்பொருட்கள் மதிப்புக்கூட்டியப் பொருட்களை தயார் செய்யவும், அவற்றை சந்தைப்படுத்த வசதி ஏற்படுத்தவும், மூன்றாவது பிரிவில் பயிற்சி, விரிவாக்கம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவோருக்கான பயிலரங்கத்துடன் பல்வேறு அம்சங்கள் கொண்ட வளாகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்த நவீன பூங்கா தமிழகத்தில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி மேற்கொள்ளவும், உலக நாடுகளில் உள்ள கால்நடை மருத்துவம் படிக்கின்ற மாணவர்களுக்கும் அங்கே வந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். உலகத்தரம் வாய்ந்த இவ்வளாகம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட வளாகமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். “மரபுத் திறன்மிக்க நாட்டின

மற்றும் கலப்பின காளைகளைக் கொண்டு 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்'' என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019–2020ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த உறைவிந்து உற்பத்தி நிலையம் இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மிகப்பெரிய அளவில் இப்பூங்கா அமைக்கப்படுவதால், இதனை நிருவகிப்பதற்கு தொடர்புடைய துறை இயக்குநர்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மாண்புமிகு அம்மாவின் பெயரால் அமைந்துள்ள மீன் வள பல்கலைக்கழகத்தின் பதிவாளர்கள் ஆகியோரை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களாகக் கொண்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்படும். இத்திட்டத்தை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படுத்திட கால்நடை பராமரிப்பு கூடுதல் இயக்குநர் பதவி உருவாக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களின் இறப்புக்கு ஈமச்சடங்கு மானியம் வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈமச்சடங்கு நிதி சரியாக போய் சேரவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கு விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்தவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் இறுதிச் சடங்கு செலவுகளுக்காக இறந்தோரின் குடும்பத்திற்கு ரூ.2,500 வழங்கப்படுகிறது. இதற்காக தமிழ்நாடு அரசு ஆதிதிராவிட நலத் துறைக்கு ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்ட நிதியினை ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சி நிருவாக இயக்குநரகம், நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் சென்னை, மதுரை, ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், கோயம்புத்தூர், திருப்பூர் மாநகராட்சிகளுக்கும் நிதி பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

2018–2019ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 கோடி ரூபாயில் இதுவரை ரூ.4.67 கோடி உதவித்தொகை 18,692 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். ஈமச்சடங்கு நிதி முறையாக வழங்கவில்லை

என்ற குற்றச்சாட்டை சொல்லியிருக்கின்றார்கள். அப்படி ஏதாவது புகார் வந்தால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த ஈமச்சடங்கு நிதி உரியவர்களுக்கு உரிய நேரத்தில் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

2018–2019ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.5 கோடி ஆகவே, அதிலே மீதி இருக்கின்றது. ரூ.4.67 கோடி தான் செலவழிக்கப்பட்டு இருக்கின்றது. 18,692 நபர்கள் அதற்கு மனு செய்திருக்கின்றார்கள், விண்ணப்பம் செய்திருக்கின்றார்கள். இறந்தவர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு ஈமச்சடங்கு நிதி வழங்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதேனும் விடுபட்டிருந்தால், அவர்கள் அதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால், அவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதே உள்ளாட்சித் துறை. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சி நிருவாக இயக்குநரகம், நகராட்சி நிருவாகம் மற்றும் மாநகராட்சியைச் சேர்ந்த அதிகாரிகள் தான், இந்த ஈமச்சடங்கு நிதியை அளிக்கின்றார்கள். ஆகவே, அதில் குறைபாடுகள் இருந்தால், நீங்கள் சுட்டிக்காட்டினால், யாருக்காவது ஈமச்சடங்கு நிதி கிடைக்கப்பெறாமல் இருந்தால், அவர்களுக்கு நிதி கிடைக்கப்பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

ஆந்திர மாநில அரசு, பாலாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவது தொடர்பாக அளித்த விளக்கம் (12.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1892ஆம் ஆண்டைய மதராஸ்–மைசூர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பன்மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளில் பாலாறும் ஒன்றாகும். இந்த ஒப்பந்தத்தின்படி, மேற்பகுதியிலுள்ள மாநிலங்கள் கீழ்ப் பகுதியிலுள்ள மாநிலங்களின் முன்அனுமதி இல்லாமல், எந்த அணை கட்டுமானத்தையோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானத்தையோ அல்லது நீரைத் திருப்புவதற்கும், நீரைத் தேக்குவதற்கும் உரிய எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது.

சித்தூர் மாவட்டத்தில், குப்பம் எனும் பகுதியில், பாலாற்றின் குறுக்கே ஒரு அணையினை ஆந்திரஅரசு கட்ட உள்ளதாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில், செய்தித்தாள்களில் 04.01.2006 அன்று தகவல்கள் வெளிவந்தபோது, 05.01.2006 அன்றே, மாண்புமிகு அம்மா அவர்கள் 1892ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை சுட்டிகாட்டி, ஆந்திரஅரசு அணைகட்டும் பணியினை மேற்கொள்ளக்கூடாது என கேட்டுக்கொண்டார்கள். மேலும், மத்திய அரசும் இப்பிரச்சினையில் தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆந்திரஅரசு மற்றும் மத்தியஅரசிடமிருந்து சாதகமான பதில் வராதநிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு 10.02.2006 அன்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறு

வழக்கு தாக்கல் செய்ததன்பேரில், அணைக்கட்டும் பணிகள் தடுக்கப்பட்டன.

இந்த வழக்கில், தமிழ்நாடு மற்றும் ஆந்திர அரசு சாட்சியாளர்களின் குறுக்குவிசாரணை முடிவடைந்ததை அடுத்து, உச்சநீதிமன்றத்தால் இவ்வழக்கு ஜூலை 2019ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்பதை தங்கள் வாயிலாக பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆந்திர அரசு, பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தை தன்னிச்சையாக உயர்த்தியுள்ளதாக செய்தி வந்தவுடன், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 01.07.2016 அன்று உடனடியாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் ஆந்திர அரசின் இத்தகைய செயல் 1892ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் எனவும், உயர்த்தப்பட்ட தடுப்பணையின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரவும், கூடுதலாக நீரை தேக்கி வைக்காமல் இருக்கவும், மற்றும் இயற்கையாக தமிழ்நாட்டிற்குள் வரக்கூடிய நீரை உறுதிப்படுத்தவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கவும் கேட்டுகொண்டார்கள். இதுகுறித்து மத்திய அரசுக்கும் ஆந்திர அரசுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

ஆந்திர அரசு, 1892ஆம்ஆண்டைய ஒப்பந்தத்தை மீறும் வகையிலும், தமிழ்நாட்டின் முன் அனுமதி பெறாமலும் தன்னிச்சையாக பாலாறு மற்றும் அதன் கிளை நதிகளின் குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணைகளின் உயரத்தை உயர்த்தியும், புதியதாக தடுப்பணைகள் கட்டியதும் ஒப்பந்தத்திற்கு முரணானது எனவும், அவைகளை முன்பிருந்த நிலைக்கே கொண்டுவரவேண்டும் எனவும் போன்ற உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று, தமிழ்நாடு அரசு 18.07.2016 அன்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்தது.

மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் 07.05.2018 அன்று பாலாறு பிரச்சினை குறித்து ஆந்திரா, கருநாடகா மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தியது. இக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் நிலைப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது. பாலாற்றின் குறுக்கே சம்மந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவு பெறாமல் புதிய தடுப்பணைகளை கட்டுவதற்கு முனையக்கூடாது எனவும், இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு பிறப்பிக்கும் வரையில் ஆந்திர அரசு தடுப்பணைகளின் உயரத்தை மேலும் உயர்த்தக்கூடாது எனவும், மத்திய நீர்வள ஆதாரத் துறை செயலாளர் இக்கூட்டத்தின் முடிவில் தெரிவித்தார். மேலும், உச்சநீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை காத்திருக்க வேண்டும், எனவும் மாநிலங்களை அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில், ஆந்திர அரசு, பாலாற்றின் குறுக்கே உள்ள தடுப்பணைகளின் பழுதுபார்ப்பு மற்றும் மறு கட்டமைப்பிற்காக ரூ.41.75 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டதாக செய்தித்தாள்களில் தகவல்கள் வெளியானது. இதைத்தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 13.11.2018 அன்று ஆந்திர அரசுக்கு அனுப்பிய கடிதத்தில், தடுப்பணைகளுக்கான விவரங்களை தமிழ்நாட்டின் பரிசீலனைக்காக அளிக்க வேண்டியும் மற்றும் தமிழ்நாடு அரசு அதன் கருத்துக்களை அளிக்கும் வரையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை நிறுத்தி வைக்க வேண்டியும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், மத்திய அரசினையும், இதுகுறித்து ஆந்திர அரசுக்கு உரிய அறிவுரைகள் வழங்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆந்திரஅரசிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமிருந்தோ பதில் ஏதும் வரப்பெறாத நிலையில், பாலாற்றின் குறுக்கேயுள்ள 21 தடுப்பணைகளின் பழுதுபார்ப்பு மற்றும் மறு கட்டமைப்புப் பணிகளை உடனடியாக நிறுத்தக்கோரி, உச்சநீதிமன்றத்தில்

ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் மனு ஒன்றை **19.11.2018** அன்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ளது.

ஆந்திர அரசு, பாலாற்றின் குறுக்கே மேலும், **30** புதிய தடுப்பணைகளை கட்ட உத்தேசித்திருப்பதாக **05.02.2019** அன்று செய்தி வந்ததையடுத்து, இத்தடுப்பணைகள் கட்டுவதற்கான அனுமதியை வழங்கக்கூடாது எனவும், உச்சநீதிமன்றத்தின் நிலுவையில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையில் தடுப்பணைகள் கட்டப்படக்கூடாது எனவும், அவ்வரசின் நீர்வள ஆதாரத் துறைக்கு அறிவுரை வழங்குமாறு **06.02.2019** அன்று ஆந்திர அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பாலாறு நதிநீர் பிரச்சினையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு மிக உன்னிப்புடனும், கவனத்துடனும், சட்டரீதியாகவும், பிரச்சினையை தொடர்ந்து அணுகி வருகிறது என்றும், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வறட்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கத்தான் காப்பீட்டு திட்டத்திலே விவசாயிகளை இடம்பெற செய்திருக்கின்றோம். ஆகவே, வறட்சி வருகின்றபோது, இப்படி விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற போது, இந்த காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு இந்த இழப்பீட்டுத்தொகை பெற்றுத் தருவதற்கு தான் அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, இன்றைக்கு பார்த்தீர்களானால், திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை, 2016–2017இல் காப்பீட்டு நிறுவனத்தால் ரூபாய் 20 கோடியே 97 இலட்சத்து 20 ஆயிரம் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத்தொகையாக 22,942 விவசாயிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 16 கோடியே 93 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 17,610 விவசாயிகளின் வங்கி கணக்கில் 11 கோடியே 25 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள இழப்பீட்டுத் தொகை, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2017–2018ஆம் ஆண்டு காப்பீட்டு நிறுவனத்தால் 84 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக 724 விவசாயிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 56 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 297 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 38 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் இன்றைக்கு 68 சதவிகிதம் நேரடியாக வரவு வைக்கப்பட்டு, மீதம் உள்ள இழப்பீட்டுத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. 2018 காரிப் பருவத்தில் 2,310 பரப்பு ஏக்கர் காப்பீடு செய்யப்பட்டு, 2,024 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இது எல்லாம், இப்படி விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்படுகின்ற

போது, காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, இன்றைக்கு நிவாரணத் தொகை அளிக்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தை பற்றி கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி தான் இங்கே சொல்லி இருக்கின்றேன். மாநிலம் முழுவதும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 2016–2017ஆம் ஆண்டு காப்பீட்டு நிறுவனங்களால் 3,527 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக 12 இலட்சத்து 9 ஆயிரத்து 844 விவசாயிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இதுவரை 11 இலட்சத்து 88 ஆயிரத்து 501 விவசாயிகளுக்கு ரூபாய் 3,399 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 11 இலட்சத்து 69 ஆயிரத்து 826 விவசாயிகளின் வங்கிக்கணக்கில் 3 ஆயிரத்து 370 கோடி ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல 2017–2018ஆம் ஆண்டு, காப்பீட்டு நிறுவனங்களால் ரூ.1,128 கோடி பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக 6 இலட்சத்து 7 ஆயிரத்து 822 விவசாயிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.996 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 3 இலட்சத்து 72 ஆயிரத்து 717 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 747 கோடி ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள இழப்பீட்டுத் தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2018–2019ஆம் ஆண்டு நடப்பாண்டில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை 23 இலட்சம் விவசாயிகள் 34 இலட்சம் ஏக்கர் பயிர் சாகுபடி பரப்பில் பதிவு செய்துள்ளார்கள். எதற்காக சொல்கிறேன் என்றால், இயற்கை சீற்றத்தினால், பருவமழை பொய்க்கின்றபோது, வறட்சியால் ஏற்படுகின்ற பாதிப்பு விவசாயிகளை பாதிக்கின்றது. ஆகவே, அப்படிப்பட்ட பாதிப்பிலிருந்து விவசாயிகள் மீள்வதற்காக காப்பீட்டுத் திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தரப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

கஜா புயல் மற்றும் பருவமழை பொய்த்ததன் காரணமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியுதவி வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு.பொன்முடி அவர்கள் நான் அறிவித்தது சரியா இல்லையா என்பதை மட்டும் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏன் என்று சொன்னால், இது ஏழை மக்களுக்காக வழங்கப்படுகின்ற திட்டம். இன்றைக்கு தொழிலாளிகள் காக்கப்பட வேண்டும். ஆகவே, இன்றைக்கு பல்வேறு மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக இருப்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் மாவட்டத்தில்கூட பருவமழை சரியாக பெய்யவில்லை. ஆகவே, விவசாய தொழிலாளர்களுக்கு போதுமான வருமானம் கிடைக்கப் பெறவில்லை. அதேபோல, கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்கள் பல இடங்களிலே இன்றைக்குக்கூட போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தினாலே, வறுமையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அதையெல்லாம் ஆராய்ந்துதான் இந்த திட்டத்தை அறிவித்திருக்கிறோமே தவிர, இது தேர்தலுக்காக அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இது அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற அத்தனைபேருக்கும் கொடுக்கப்படுகின்றது. இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பார்த்துக் கொடுப்பதில்லை.

நீங்கள் தவறான கருத்தை சொல்லியிருக்கின்றீர்கள். இது ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கின்ற, உழைக்கின்ற உழைப்பாளிகளுக்கு, தொழிலாளிகளுக்கு கொடுக்கப்படுகின்ற நிதி என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதை அறிவித்தது தவறு என்று சொல்லுகிறாரா என்பதை மட்டும் தங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

❖ ❖ ❖

கிராமங்களில் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் பிரச்சினைகளை தீர்க்க தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம் (12.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீங்கள் செல்ல வேண்டும், அங்கிருக்கின்ற குறைகளை எல்லாம் நீக்க வேண்டும் என்ற கருத்தை சொன்னார். நானும் எழுந்திருக்க கூடாது என்று தான் நினைத்தேன். அவர்கள் சொல்வதைப் போலத்தான் இப்பொழுது அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களை எல்லாம் நேரடியாக அழைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் மூன்று மணி நேரம் இங்கே தலைமைச் செயலகத்திலே வைத்து குறைகளை கேட்டறிந்து, உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு மூன்று ஒன்றியத்திற்கு ஒரு துணை ஆட்சியர் நியமிக்கப்பட்டு, அந்த துணை ஆட்சியர் ஆங்காங்கே நேரடியாக கிராமங்களுக்குச் சென்று, அந்த கிராமத்திலே என்னென்ன குறைகள் இருக்கின்றது என்று கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்த அரசு அம்மாவுடைய அரசு. அதுமட்டுமல்ல, இந்த லைட், இரவிலே எரிகின்றதா என்று கண்காணிக்க உடனே செல்லவேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கின்றோம். காலையில் சென்றால் எந்தெந்த லைட் எரிகிறது, அது என்னவென்று தெரியாது. நீங்கள் வேண்டுமானால் சென்று பாருங்கள். சேலத்திலே போய் பாருங்கள், மற்ற மாவட்டத்திலே கூட போய் பாருங்கள். ஒவ்வொரு மாலை நேரத்திலும், பல்வேறு துறைகளில் இருக்கின்ற துணை ஆட்சியர்கள் மாற்றுப்பணி செய்யப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட, கிட்டத்தட்ட இரண்டு, மூன்று ஒன்றியங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கே தெருவிளக்குகள் எரியவில்லை

என்றால் உடனடியாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், ஒரு குறிப்பிட்ட சதவிகிதம், உதாரணமாக 10 சதவிகிதம் மின்விளக்கை அங்கே இருப்பு வைத்திருக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அங்கே மின் விளக்கு பழுதடைந்து விட்டால் உடனடியாக மாற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, குடிநீர் குழாய்கள் எல்லாம் சரிசெய்ய வேண்டும், எந்தெந்த பகுதியிலே குடிநீர் வரவில்லையோ அதையெல்லாம் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

அதுமட்டுமல்ல, வடக்கு மாவட்டத்திலே நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, அதேபோல வேலூர், திருவள்ளூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் பருவமழை பொய்த்ததன் காரணமாக வறட்சி நிலவுகின்றது. அப்படிப்பட்ட வறட்சி நிலவுகின்ற அந்த மாவட்டங்களுக்கெல்லாம் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. உடனடியாக குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு பிறப்பித்து, அதற்கு தேவையான நிதியையும் அம்மாவுடைய அரசால் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எங்கேயும் குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காக இந்த நிதியுதவி செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கெல்லாம் ஆங்காங்கே இருக்கின்ற ஏற்கெனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒரு துறையை சேர்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் அங்கே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று, அந்த மாவட்ட கூட்டத்தைக் கூட்டி அங்கெல்லாம் என்னென்ன பிரச்சினைகள் நிலவுகிறது என்பதை எல்லாம் ஆராய்ந்து அதை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் அரசு, அம்மாவுடைய அரசு என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம் (13.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மத்திய அரசிடம் நாங்கள் கோரிய தொகை கிடைக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது, 2007–2008ஆம் ஆண்டு ஏற்பட்ட கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக, தற்காலிக நிவாரணத் தொகையாக 449 கோடி ரூபாயும், நீண்டகால சீரமைப்பிற்காக 689.87 கோடி ரூபாயும் என மொத்தமாக 1,139.78 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கோரப்பட்டது. மத்திய அரசு வழங்கிய தொகை 142.95 கோடி ரூபாய் மட்டும்தான். அப்போது, மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தார்கள்; மத்திய ஆட்சியிலும் அங்கம் வகித்தார்கள்; மத்திய ஆட்சியிலும் அங்கம் வகித்த அவர்களுக்கே கேட்ட நிதி கிடைக்கவில்லை.

அடுத்து, 2008–2009ஆம் ஆண்டு 'நிஷா' புயலால் பாதிப்பு ஏற்பட்டபோதும், அவர்களுடைய கட்சி மத்தியில் ஆட்சியிலிருந்த கட்சியுடன் கூட்டணியில் இருந்தது. அப்போது தற்காலிக நிவாரணத்திற்காக 2,105.71 கோடி ரூபாயும், நீண்டகால சீரமைப்பிற்காக 1,683.53 கோடி ரூபாயும், என மொத்தமாக 3,789 கோடி ரூபாய் கோரப்பட்டது. ஆனால், மத்திய அரசு விடுவித்த தொகை 570.17 கோடி ரூபாய் மட்டும்தான்.

மேலும், 2010–2011ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டபோது, மத்திய அரசிடம் அப்போது ஆட்சியிலிருந்த அவர்களுடைய அரசால் தற்காலிக நிவாரணத்திற்காக கோரப்பட்ட

தொகை **2,125.82** கோடி ரூபாய்; நீண்டகால சீரமைப்பிற்காக தொகை எதுவும் கோரப்படவில்லை. மொத்தமாக **2,125.82** கோடி ரூபாய் கோரப்பட்டது. ஆனால் மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி **317.17** கோடி ரூபாய்தான். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதுபோல, யார் மத்தியில் ஆட்சியில் இருந்தாலும் சரி; அப்போது தமிழ்நாட்டில் ஆள்கின்றவர்கள் யாராக இருந்தாலும், கேட்கின்ற நிதியை மத்திய அரசு வழங்குவதில்லை.

மத்தியிலும், மாநிலத்திலும் அவர்கள் ஆட்சியில் இருக்கும் போதே கோரப்பட்ட தொகை கிடைக்கவில்லை. நாங்கள் மாநிலத்தில் மட்டும்தான் ஆட்சியில் இருக்கிறோம். மத்தியில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், தேவையான நிதியை பெறுவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. என்னென்ன தேவைகளுக்கு எவ்வளவு நிதி தேவை என்று கேட்டிருக்கின்றோமோ அதையெல்லாம் பெறுவதற்குண்டான முயற்சிகளை தொடர்ந்து நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

கந்தன் கோட்டை நீர்த்தேக்கத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (13.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கந்தன்கோட்டை நீர்த்தேக்கத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்ய முடியாத சூழ்நிலையால்தான் காலதாமதமாகி விட்டது. நிலம் கையகப்படுத்தப்பட்டு, இப்பொழுது பணிகள் நிறைவடைகின்ற நிலையில் இருக்கின்றது. உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ளும்பொழுது உங்களுடைய ஆட்சியில் கூடத்தான், வேலூரில், ஏரியில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அந்தத் திட்டம் அப்படியே நின்று போய்விட்டது. நாம் ஒரு திட்டத்தை அறிவிக்கிறோம். திட்டத்தை அறிவித்த பிறகுதான் அத்திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்துகின்றோம். ஆகவே, நிலம் கையகப்படுத்தும்பொழுது, அந்த நிலத்தினுடைய உரிமையாளர்கள் மனமுவந்து கொடுத்துவிட்டால், பிரச்சினை கிடையாது. சில பேர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். நீதிமன்றத்திற்குச் செல்லும்போது காலதாமதமாகி விடுகிறது. அவர்களை சமாதானப்படுத்தி, சமாதானக் கடிதம் பெற்று, நில இழப்பீட்டுத் தொகையைக் கொடுத்துதான் அந்த நிலத்தைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த அடிப்படையில் இப்பொழுது கந்தன்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம் நிறைவடைகின்ற நிலையில் இருக்கின்றது. இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் அது நிறைவேறிவிடும். ஆகவே, அடுத்த பருவமழையின்போது அதில் தண்ணீர் தேக்கப்படும்.

இன்னோர் இடம் திருநின்றவூர் என்று சொன்னீர்கள். அதில், தனியார் நிலம் பக்கத்தில் இருந்தது. அங்கே செங்கல் சூளை வைத்து, அதை அறுத்திருந்தார்கள். பல ஆண்டு காலமாக, உங்களுடைய

ஆட்சிக் காலத்திலும் அந்த இடத்தில் அந்த செங்கல் சூளை இருந்தது. அப்பொழுது, ஆற்றின் கரையோரமாக ஆழப்படுத்திய காரணத்தினால் அதில் தண்ணீர் அதிகமாக வந்ததால், அதிகப்படியான தண்ணீர் அந்த ஆற்றின் கரையை உடைத்துக்கொண்டுபோய், இந்தப் பக்கம் இருக்கின்ற தடுப்பையும் உடைத்துக்கொண்டு போய்விட்டதே தவிர வேறு எதுவும் கிடையாது. ஆகவே, அது ஒரு தடுப்பணை. அதில் வெள்ளம் அதிகமாக வந்தபொழுது இப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட சம்பவம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, அங்கே ஒரு தடுப்பணை கட்டுவதற்கான நடவடிக்கையும் அரசால் எடுக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

❖ ❖ ❖

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி, வடக்குப்பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு.சரவணன் என்பவர் 15.01.2019 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தமைக்கு நிவாரணம் வழங்குவது குறித்து ஆற்றிய உரை (13.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம்மாவட்டம்,வடக்குப்பொய்கைநல்லூர்கிராமத்தைச் சேர்ந்த திரு.காத்தலிங்கம் என்பவர், மின் கம்பம் நடும் பணிக்கு, அவ்வழியே சென்று கொண்டிருந்த, திரு.மாரிமுத்து என்பவரின் மகன் திரு.சரவணன் என்பவரை அழைத்து, அப்பணியினை மேற்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில், திரு.சரவணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு.சரவணன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு.சரவணன் அவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

மணல் கொள்முதல் குறித்து ஆற்றிய உரை (13.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதைப்பற்றி நான் ஏற்கெனவே இதே அவையில் தெளிவுபடுத்தி இருக்கின்றேன். எனவே, அரசுதான் இப்போது அந்த மணலை மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது. இதை யாரும் தனியாருக்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே, இன்றைக்கு நீதிமன்றத்தில் சில நேரங்களில் தடையாணை பெற்று விடுகிறார்கள். அதனால் தமிழகத்திலே ஆற்றுப்படுகையிலே இருக்கின்ற மணலை அள்ள முடியாத சூழல் ஏற்பட்ட காரணத்தினாலே, வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்வதற்கு டெண்டர் விடப்பட்டு, அந்தப்பணி நிறைவு பெற்று, இப்பொழுது வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்யப்பட்டு, இன்றைக்கு பொதுமக்களுக்கு சென்னையிலே வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எதை சுட்டிக்காட்ட விரும்புகிறார்கள் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. இப்பொழுது அரசுதான் இன்றைக்கு மணலை பொதுமக்களுக்கு தேவையான அளவிற்கு விநியோகம் செய்து வருகிறது. ஆனால் போதுமான அளவிற்கு மணல் குவாரி அமைக்க முடியவில்லை. ஏனென்று சொன்னால், பலபேர் பொதுநல வழக்கு போட்டு, நீதிமன்றத்திலே தடையாணை வாங்கி விடுகிறார்கள். அதனால் முழுமையாக மணல் கொடுக்க முடியவில்லை. இருந்தாலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து முடிந்த அளவிற்கு மணல் தேவைப்படுகிறவர்களுக்கு, அரசின் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது என்பதை தங்கள்

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, மணல் கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதில் அவர்களது வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகிறது. அந்த வாகனங்கள் மூலம் கடத்துபவர்கள் மீது குண்டர் சட்டம் பாயக் கூடிய சூழ்நிலை கூட இன்றைக்கு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினால் அமைந்திருக்கின்றது. அதன்மூலமாக கூட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் பொத்தாம் பொதுவாக சொல்லக்கூடாது. எந்த இடத்தில், இப்படிப்பட்ட பிரச்சினை நடைபெறுகிறது என்பதை சுட்டிக்காட்டினால், அங்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

❖ ❖ ❖

சர். பிட்டி. தியாகராயர் பிறந்தநாள் விழா மற்றும் ஐராவதம் மகாதேவன் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்குவது தொடர்பான கேள்விகளுக்கு அளித்த பதில்கள் (14.02.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெள்ளுடைவேந்தர் சர்.பிட்டி.தியாகராயர் அவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 27ஆம் நாள் சென்னை மாநகராட்சி வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு ஏற்கெனவே அரசு சார்பில் மாலை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

ஐராவதம் மகாதேவன் அவர்களது நூல்களை அரசுடைமையாக்க ஏற்கெனவே என்னால் அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாட்டில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு குறித்தும், மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் அளித்த விளக்கம் (01.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கிட வேண்டாம் என்று தான் இருந்தேன். தொடர்ந்து குற்றச்சாட்டுகளையே சொல்லிக்கொண்டு இருக்கிறார். அவருடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் கருநாடகத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகின்றபோது, அவர் சொன்ன கருத்தை சொல்கிறேன். அதற்கு அவர் விளக்கம் அளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன். பல்வேறு பொதுக்கூட்டத்தில் நான் பேசினேன். ஆனால், காங்கிரசிடமிருந்தோ, திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்தோ எந்த பதிலும் கிடைக்கவில்லை. அவர் கருநாடகத்தில் நாடாளுமன்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசுகின்றபோது, காங்கிரஸ் மத்தியிலே ஆட்சி அமைத்தவுடன் முதல் வேலையாக காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படும். இரண்டாவது, காவேரி மேலாண்மை ஆணையம் கலைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இப்போதே நமக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. கடந்த காலத்தில் திரு.சித்தராமையா முதலமைச்சராக இருக்கும்போது, கடுமையான குடிநீர் பிரச்சினை இருந்தபோது, 5 டி.எம்.சி. தண்ணீர் கொடுங்கள். நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரிலிருந்து திறந்துவிடுங்கள் என்று சொன்னோம், கோரிக்கை வைத்தோம், கடிதம் எழுதினேன், நானே நேரடியாக வந்து உங்களை சந்திக்கிறேன் என்று சொன்னேன். ஆனால், அதற்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. அங்கே உங்களுடைய கட்சியைச் சேர்ந்த கூட்டணி ஆட்சி தான்

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, தயவுசெய்து இவ்வளவு பேசுகின்ற நீங்கள், அந்த தண்ணீரை திறந்து விட்டால், இங்கே மேட்டூர் அணையிலிருந்து வீராணத்திற்கு தண்ணீரை கொண்டு, இங்கே நமக்கு தண்ணீரை எளிதாக வழங்கலாம். அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, நமக்கு ஏற்கெனவே கிடைக்க வேண்டிய நீர் இப்போது பிரச்சினையில் இருந்து கொண்டு இருக்கிறது. உச்சநீதிமன்றம் தெளிவான தீர்ப்பை கொடுத்திருக்கின்றது. 50 ஆண்டுகாலம் சட்டப் போராட்டம் நடத்தி, பல்வேறு போராட்டங்களை நடத்தி நம் விவசாய சங்கங்கள், எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து போராட்டம் நடத்தி, நீதிமன்றத்தின் வாயிலாக சட்டப்படி தீர்ப்பை பெற்றோம். அந்த தீர்ப்பின் அடிப்படையிலே காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது. அதை உங்களுடைய கட்சியினுடைய அகில இந்தியத் தலைவர், நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பிரச்சார பொதுக்கூட்டத்திலே கருநாடகத்திலே பேசுகின்ற போது, காங்கிரஸ் மத்தியிலே ஆட்சி அமைந்தவுடன் காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படும், காவேரி மேலாண்மை ஆணையம் கலைக்கப்படும் என்று சொன்னார்களே, இதுவரை ஒரு குரல் கொடுத்திருக்கிறீர்களா நீங்கள்? இப்போது அரசை பற்றி இவ்வளவு விமர்சனம் செய்கிறீர்கள். இப்பொழுது காவேரி மேலாண்மை ஆணையம் இருமுறை கூட்டப்பட்டு, நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று முறையாக காவேரி மேலாண்மை ஆணையம் வலியுறுத்தியும் கூட நமக்கு மாதந்தோறும் விடுவிக்க வேண்டிய அந்த தண்ணீரை கருநாடக அரசு இதுவரைக்கும் திறக்கப்படவில்லை. அதற்காக ஏதாவது பதில் கொடுத்தீர்களா? ஆனால் அரசை குறை சொல்கிறீர்கள். ஆனால் அரசை பொறுத்தவரைக்கும், இயற்கை பொய்த்துவிட்டது. நீங்கள் ஒரு விவசாயி, மனசாட்சிப்படி நீங்கள் சொல்லுங்கள், தண்ணீர் இருந்து கொடுக்கவில்லையா. ஆகவே, இதை உடனடியாக

எங்கேயும் இருந்து எடுத்து கொடுக்க முடியாது. இன்றைக்கு தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. 40 ஆண்டு காலம் 50 ஆண்டு காலம் இல்லாத வறட்சி தமிழகத்திலே நிலவுகின்றது. எந்த ஏரியிலும், நீர் நிலையிலும் தண்ணீர் இல்லை.

அதேபோல எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார். இன்றைக்கு அணைகள் எல்லாம் மிக குறைந்த அளவு தான் தண்ணீர் இருக்கின்றது. சில அணைகள் வறண்டு போய் இருக்கின்றது என்று சொன்னார். உண்மை. இப்படி இருக்கின்ற காலக்கட்டத்தில்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைக்கு மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்கி வருகின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது 7,415 எம்.எல்.டி. தண்ணீரை வழங்கினோம். இப்பொழுது 7,508 எம்.எல்.டி தண்ணீரை இன்றைக்கு நாங்கள் வழங்கிக் கொண்டு இருக்கின்றோம். எல்லாப் பகுதிகளிலும் வழங்கிக் கொண்டு இருக்கின்றோம். நீங்கள் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 4,945 எம்.எல்.டி. தண்ணீர் தான் குடிநீருக்காக அந்த அரசு வழங்கியது. இருந்தாலும், இப்பொழுது மழை பொய்த்துவிட்டது. ஏரிகள் குளங்களில் எங்கேயுமே தண்ணீர் இல்லை. வறண்டு இருக்கின்றன. நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்டது. ஆகவே, நிலத்தடி நீர் கீழே சென்ற காரணத்தினாலே மக்களுக்கு பல்வேறு அன்றாட தேவைகளுக்கான நீர் கிடைக்காத காரணத்தினாலே குடிநீருக்கு வழங்க வேண்டிய நீரை அதிக அளவிலே பயன்படுத்துகின்ற காரணத்தினாலே இந்த தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறதேயொழிய அரசைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே வழங்கப்பட்ட குடிநீர் முழுவதும் இப்பொழுதும் வழங்கிக் கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாட்டில் மருத்துவப் பட்டப்படிப்பு பயில 69 சதவிகித இடஒதுக்கீடு தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்பது தொடர்பாக அளித்த விளக்கம் (02.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உங்களுடைய தலைவர், அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளதைத்தான் சொல்லியிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு இதை கொடுத்திருக்கிறது. இதை அவைக்கு தெரிவிப்பது அரசின் கடமை. அந்த அடிப்படையிலே தான் தெரிவிக்கிறோமே தவிர, அதை ஆதரிக்கிறோம், எதிர்க்கிறோம் என்பது எல்லாம் கிடையாது. இன்றைக்கு கட்சிகளுடைய எண்ணங்களின் அடிப்படையிலே தான் அரசு செயல்படுத்தும். ஆகவே, அரசை பொறுத்தவரைக்கும் மத்திய அரசு இந்தத் திட்டத்தின் வாயிலாக இவ்வளவு சீட்டுகள் கொடுக்கிறோம் என்று சொல்லி ஒரு அறிக்கையை எல்லா மாநிலங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கும் வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். இதில் என்னவென்றால், மொத்தம் 1,000 இடங்கள் வந்தது என்று சொல்லியிருக்கிறார். அதில் 150 அகில இந்திய Quota–விற்கு போய்விடுகிறது. மீதி 850 இருக்கிறது. இந்த 850இல் 264 Open Competitionக்கு போய்விடுகிறது. மீதி 586 இடங்கள், 69 சதவிகித இடஒதுக்கீட்டில் வரும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு 586 இடங்கள் நம்முடைய இடஒதுக்கீட்டின் அடிப்படையிலே நீங்கள் நிறைவேற்றி கொள்ளலாம் என்ற கருத்தை அவர் தெரிவித்திருக்கின்றார். இதைத் தான்

அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம். இதை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளை அழைத்து என்ன செய்யலாம் என்று அனைவருடைய கருத்தின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.பொன்முடி அவர்கள் ஏதோ நாங்கள் ஏற்றுக்கொண்டதைப் போல சொல்வது எல்லாம் தவறான கருத்து. ஏனென்றால் இது அவை, பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் பதிவாகிறது. பத்திரிகையில் வெளியில் போகும். ஆகவே, அரசுக்கு மத்திய அரசு கடிதம் எழுதியிருக்கிறது. அந்தக் கடிதத்தை இன்றைக்கு அவையினுடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினுடைய தலைவர்களுக்கு எல்லாம் தெரிவிக்கின்ற அடிப்படையிலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். ஆகவே, நம்முடைய அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடைய தலைவர்களை அழைத்து இது சம்பந்தமாக என்னென்ன கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என்ற அந்த விவரத்தை எல்லாம் அவர்களிடத்திலே தெரிவித்து, அதில் ஒருமித்தக் கருத்து ஏற்பட்ட பிறகுதான் இதில் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் 69 சதவிகித இடஒதுக்கீட்டையே அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதை இந்த அவையின் வாயிலாக தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு அளித்த பதிலுரை (04.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவரது கட்சித்தலைவரைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதை யாரும் தடை செய்யவில்லை, எனக்குக் கவலையுமில்லை. ஆனால், குனிந்து பதவியைப் பெறவில்லை என்று அவர் சொன்ன வார்த்தையில் தான் பிரச்சினையே வந்தது, அவர் எங்களைப் பற்றிப் பேசுகின்றபோது, அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபொழுது என்ன பேசினார் என்பதைத் தான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். அவர் இங்கே இருந்தபொழுது பேசிய பேச்சு அவைக்குறிப்பில் பதிவாகியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்குத்தானே தவிர, புதிய செய்தி எதுவும் கிடையாது. குற்றச்சாட்டும் கிடையாது. இந்த மூன்றாண்டுகளில் எப்படியெல்லாம் நிலைமை மாறியது என்று, அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும். எங்களுடைய துணைமுதலமைச்சர் பற்றி குறிப்பிடும்பொழுது, அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தில்தான்இப்போதும்இருந்துகொண்டிருக்கிறார், இந்த இயக்கத்திலிருந்து வெளியேறவில்லை. ஆனால், மூன்றாண்டு காலத்தில் இரண்டு சின்னத்திலே போட்டியிட்ட ஒரே வேட்பாளர் யார் என்று நாட்டு மக்களுக்குத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், இப்பொழுது இருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சட்டப்பேரவையில் **02.04.2013** அன்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொண்டு வந்தபொழுது, மாண்புமிகு உறுப்பினர் செந்தில் பாலாஜி அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபொழுது இந்த அவையில் பேசியதை மட்டும் நான் வாசிக்கிறேன். எதற்காகவென்றால், இனிமேல் இருக்கின்ற இடத்திலாவது விசுவாசமாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்ல வருகிறேன். ஆகவே, அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் பேசியபொழுது Times of India பத்திரிகையில், போக்குவரத்துத் துறையில் ரூ.200 கோடி ஊழல் நடந்திருக்கிறது என்ற செய்தி வந்துள்ளது என்று பேசியதற்கு, மாண்புமிகு உறுப்பினர் செந்தில் பாலாஜி அதைப்பற்றி கடுமையாக விமர்சனம் செய்தார். அப்போது, சட்டப்பேரவையிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி வெளிநடப்பு செய்தது. வெளிநடப்பு செய்தபிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அப்பொழுது அவர் தெரிவித்த கருத்து எல்லா பத்திரிகைகளிலும் வெளிவந்தது, ஆள்கடத்தல் வழக்கில் சிக்கியுள்ள மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி என் தகுதியைப் பற்றி பேச அவருக்கு தகுதியில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். இதுகுறித்து திமுக கட்சியின் பத்திரிகையான முரசொலி பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. நாங்கள் ஒன்றும் தவறாக சொல்லவில்லை. நீங்கள் பேசியதைத் தான் சொல்கிறோமேயொழிய, கூடுதலாக எந்தக் கருத்தும் இணைக்கப்படவில்லை. குறையோ, குற்றமோ எதுவும் நாங்கள் சொல்லவில்லை. நீங்கள் தெரிவித்த கருத்தை தான் சொன்னோம். அதனால் தான் இதுகுறித்து பேசுகிறேன். ஆள்கடத்தல் பேர்வழி என்று குறிப்பிட்ட சட்டப்பேரவை

உறுப்பினர் செந்தில் பாலாஜி அவர்களைத் தான் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக நிறுத்தியிருக்கிறீர்கள் என்பதைத் தான் சொல்கிறேனேயொழிய, வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசும்பொழுது, நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை. குனிந்து, குனிந்து என்று அவர் சொல்லும்பொழுது தான் அந்தப் பிரச்சினைக்கே இடம் வருகிறது. அப்படிக் கூறினால் நாங்கள் பேசித்தான் ஆகவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது கருத்துக்களை தெரிவிக்க உரிமை இருப்பதுபோல, எங்களுக்கும் எங்கள் கருத்துக்களை தெரிவிக்க உரிமை இருக்கிறது. மேலும், உங்கள் கட்சிப் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் சொன்னேனேயொழிய, வேறு ஒன்றும் சொல்லவில்லை. நான் ஏதாவது தவறாக சொல்லியிருந்தால், அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம், பத்திரிகையில் செய்தி வரவில்லை என்று சொல்லுங்கள், விட்டு விடலாம். திரு. செந்தில்பாலாஜி சென்ற அந்த கட்சியினுடைய அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையான முரசொலி பத்திரிகையில், அந்த செய்தி வந்த காரணத்தினால்தான், அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தோமேயொழிய, வேறு ஒன்றும் இல்லை.

எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அனுபவம் வாய்ந்தவர், அவர் வழிகாட்டியாக அமைந்தால் நன்றாக இருக்கும், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று பேசுவது எந்த விதத்தில் சரியாக இருக்கும். ஆகவே, யாருடைய மனமும் புண்படாமல் இருக்கின்ற சூழலில் பேசினால் நன்றாக இருக்கும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொண்டு, நாங்கள் தவறாக எந்த செய்தியையும் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பேசிய கருத்தைத்தான் நாங்கள் பதிய வைத்துள்ளோம். எதற்காக சொல்கிறேனென்று சொன்னால், ஐந்து இயக்கத்திற்கு மாறிமாறி சென்ற காரணத்தினாலே,

இப்போது போயிருக்கின்ற இயக்கத்திற்காகவாவது விசுவாசமாக செயல்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அந்தக் கருத்தை நான் தெரிவித்தேன்.

இவ்வாறு உணர்ச்சியை தூண்டும்விதமாக பேசும்பொழுது, எல்லா மனிதர்களும் உணர்ச்சிவசப்பட்டு பேசுவது இயல்பு. நீங்களும் அதுபோலத் தான் உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர், சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார், அவை மரபு குறித்து தெரிந்தவர், அந்த மரபுகளையெல்லாம் மீறி, தேவையில்லாத கருத்தைச் சொல்லுகின்றபொழுது தான் பிரச்சினை எழுகின்றது. ஆகவேதான், அந்த பிரச்சினையை ஒட்டிச் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான் வருவாய்த் துறை அமைச்சர் தெரிவித்தாரே தவிர, அவர் தனிப்பட்ட முறையில் எந்தக் கருத்தும் சொல்லவில்லை. சட்டப்பேரவையில் பதிவு செய்த கருத்தைத்தான் தெரிவித்தாரே தவிர, வேறு எந்தக் கருத்தையும் சொல்லவில்லை என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இருக்கின்ற இடத்திலாவது விசுவாசமாக இருங்கள் என்று தான் சொல்கிறோம், வேறு ஒன்றும் இல்லை. அடுத்த முறை இங்கு வராமல் இருந்தாலே போதும்.

❖ ❖ ❖

சேலம் உருக்கு ஆலை குறித்து அளித்த விளக்கம் (05.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே சேலம் உருக்கு ஆலையை தனியாருக்கு ஒப்படைப்பதற்காக முயற்சி செய்தார்கள். அது மாண்புமிகு அம்மாவுடைய அரசால் தடுத்து நிறுத்தப்பட்டது. பல்வேறு வழிகளிலே முயற்சி செய்தார்கள். அந்த முயற்சிகள் எல்லாம் முறியடிக்கப்பட்டது. இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள், பத்திரிகையிலும் வந்திருக்கின்றது. இன்றைக்கு தனியாருக்கு தாரை வார்ப்பதற்காக டெண்டர் விடுவதற்காக பத்திரிகை செய்தி வந்திருக்கின்றது. ஆகவே, நீங்கள் சொல்லியதைப் போல எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், சேர்ந்து முதற்கட்டமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறை மத்திய அமைச்சர் அவர்களையும் சந்தித்து, இதை கைவிட வேண்டும்; இது ஒரு முக்கியமான திட்டம்; பிரதான திட்டம்; ஆகவே, இது மாநிலத்திற்கு ஒரு பொதுத்துறையாக இருக்கின்ற காரணத்தினாலே, பொதுத்துறை இப்படி ஒவ்வொன்றாக எடுக்கின்றபோது மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணம் ஏற்படும் என்பதை எல்லாம் சுட்டிக்காட்டி, இன்னும் என்னென்ன சரத்துகள் இருக்கின்றதோ அதை எல்லாம் சேர்த்து, ஒரு மனுவாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் ஆகிய அனைத்து கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து மாண்புமிகு பிரதமர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறை மத்திய

அமைச்சர் அவர்களையும் சந்தித்து அழுத்தத்தை கொடுப்போம். அதுமட்டுமல்லாமல், நாடாளுமன்றத்திலே இரு அவைகளிலும் நாம் இந்தப் பிரச்சினையை எழுப்பி, இதை தடுத்து நிறுத்துவதற்கு உண்டான ஆக்கபூர்வமான திட்டத்திற்கு எங்களுடைய அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முழு ஒத்துழைப்பு நல்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்த்தி வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (05.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான்கு ஆண்டு காலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு பால் விலை உயர்த்தப்படவில்லை என்ற ஒரு வினா எழுப்பி இருக்கின்றார். நாங்கள் பால் விலையை உயர்த்துவதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால், நீங்கள் போராட்டம் செய்யாமல் இருந்தால், நாங்கள் பால் விலையை நிச்சயமாக உயர்த்துவோம். உற்பத்தியாளர்களுக்கு உயர்த்தும்போது, நுகர்வோருக்கும் உயர்த்தித்தானே ஆக வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு அந்த விலையை உயர்த்தி கொடுக்கின்றபோது, அதற்கேற்றவாறு நுகர்வோருக்கு கட்டணம் உயரும். இது உங்களுடைய ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி, அப்போதுதான் இந்த நிருவாகம் சிறப்பாக நடக்கும். இப்போதே நிருவாகம் நஷ்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நுகர்வோருக்கு வழங்கப்படுகின்ற அந்த கட்டணமும், உற்பத்தியாளர்களுக்கு வழங்குகின்ற கட்டணத்திலும் வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற விலையிலும், நுகர்வோருக்கு கொடுக்கின்ற விலையிலும் வேறுபாடு இருக்கின்றது. அதனால்தான் இப்போது பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது அரசுனுடைய கவனத்திற்கு ஏற்கெனவே விவசாய சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கின்றது. அதை பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றோம். ஆகவே, பால்

உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்த்தி கொடுப்பதில் எந்தவித ஒரு கஷ்டமும் அரசுக்கு இல்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் எல்லாம் இதை வைத்துக்கொண்டு அரசியல் செய்வார்கள். ஏனென்றால் நுகர்வோருக்கு விலை உயர்த்த வேண்டும். நுகர்வோருக்கு விலை உயர்த்துகின்றபோது, பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள். அப்படி ஒரு கோரிக்கை எதிர்க்கட்சியிலிருந்து வரும். ஆகவே, நீங்களும் இதற்கு சம்மதித்தால் பால் உற்பத்தியாளர்களுக்கு உயர்த்த வேண்டிய தொகையை அரசு நிச்சயமாக உயர்த்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்களுக்கு விலையை அரசு உயர்த்தி கொடுப்பதிலே எந்தவித தடையும் கிடையாது. அதேவேளையில், நுகர்வோருக்கும் அதை உயர்த்தித் தான் ஆக வேண்டும். வேறு வழி கிடையாது. இல்லை என்றால் சங்கம் நஷ்டத்தில் தான் இயங்கும். இது நன்றாக உங்களுக்குத் தெரியும். எந்த ஆட்சியாக இருந்தாலும், பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்வு கொடுக்கின்ற போது, அதற்கு ஏற்றவாறு நுகர்வோர்களுக்கும் அந்த கட்டணத்தை அவர்களிடத்தில் இருந்து பெற்றுத்தந்தால் தான் அந்த சங்கம் சிறப்பாக செயல்பட முடியும். இல்லை என்றால் நஷ்டத்திற்கு வந்துவிடும். நான் ஏற்கெனவே, Chairman–ஆக மூன்றாண்டு காலம் இருந்தேன். அதனால் சொல்கிறேன். ஆகவே, இன்றைக்கு பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்த்திக் கொடுப்பதிலே எந்தவித சங்கடமும் அரசுக்கு இல்லை. உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. நம்முடைய சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததுமே பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்த்தி கொடுக்கப்படும். அதேபோல, நுகர்வோருக்கு வழங்கப்படுகின்ற பாலினுடைய விலையும் உயர்த்தி கொடுத்தால் தான் சங்கம் சிறப்பாக செயல்படும். ஏனென்றால் பல இலட்சம் பேர் பால்

உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்வு மலர, இருக்கின்ற சூழ்நிலையை நீங்கள் சொன்னீர்களே, குடிதண்ணீர் கூட இல்லை, பராமரிப்பு செலவும் அதிகமாகிவிட்டது. இன்றைக்கு அந்த கால்நடைகளுக்கு வழங்க வேண்டிய உணவுப் பொருள், தவிடு, புண்ணாக்கு, பருத்திக் கொட்டை ஆகிய கால்நடை தீவனங்களின் விலை எல்லாம் உயர்ந்துவிட்டதன் காரணத்தினாலே அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகள் அரசினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு.சக்கரபாணி அவர்கள் சொன்னதைப் போல, இன்றைக்கு அவருடைய நிலையைக் கருதி, மாண்புமிகு அம்மாவுடைய அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்த்தும். அதேபோல, நுகர்வோர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த பாலினுடைய விலையும் உயர்த்தி, யாருக்கும் நஷ்டமில்லாமல் சிறப்பாக கூட்டுறவு சங்கங்கள் நடைபெற வேண்டும். அதேபோல பொதுமக்களும் பாதிக்கப்படாத அளவிற்கு அரசு செயல்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

பாதாள சாக்கடைத் திட்டத்தால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பது தொடர்பாகவும், நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறைகளில் செயல்படுத்தப்படும் பணிகள் தரம் சோதனை செய்யப்படுவது தொடர்பாகவும் அளித்த விளக்கம் (08.07.2019)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக குழியைத் தோண்டிவிட்டு மூடவில்லை என்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, சேலத்திலே பாதாள சாக்கடை திட்டத்தை எடுத்தீர்கள். பாதியிலே விட்டுவிட்டு போய்விட்டீர்கள். அந்த பாதாள சாக்கடைக்காக எல்லா வீதிகளிலுமே குழாய்களைப் பதிப்பதற்காக குழி தோண்டினார்கள். பிறகு அதற்கு சாலையை அமைக்க வேண்டும். சாலையை அமைப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்காமலேயே போய்விட்டீர்கள். எல்லா சாலைகளுமே சிதைந்து போய் கிடந்தது. இப்பொழுது மாண்புமிகு அம்மாவுடைய அரசு தான், 140 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, எங்களுடைய சேலத்திலே உங்களுடைய ஆட்சி காலத்திலே போடப்பட்ட அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தில் எல்லாம், இப்பொழுது நாங்கள் தான் சாலையை போட்டுக் கொண்டு இருக்கிறோம். ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் அப்படித்தான். நீங்கள் செய்தது பாதாள சாக்கடை திட்டம் மட்டும்தான். ஆகவே, திட்டம் போடும் பொழுதே, அந்த திட்டத்தினால் பாதிக்கப்படுகின்ற சாலைகளை எல்லாம் சீரமைப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யாமலே நீங்கள் இருந்துவீட்டீர்கள். இருந்தாலும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு

அந்த சாலைகளை எல்லாம் சீரமைப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, சாலைகள் சீரமைப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு திட்டம் போடும் போது சரியான முறையிலே திட்டம் போட வேண்டும் என்பதற்காக தான் இதை சுட்டிக் காட்டினேன். ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டம் போடுகின்றபோதே, அந்தக் குழாய் பதிப்பதற்கு தேவையான அந்த சாலைகளை எல்லாம் மறித்து தான் குழாய்களை பதிக்க வேண்டும். அப்படி பதிக்கின்றபோது சாலை சீர்கெடும். அந்த சாலைகள் எல்லாம் சிதைந்து போய் விடுகிறது. அதற்கு நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அந்தச்சாலைகள் பல ஆண்டு காலமாக அப்படியே குண்டும் குழியுமாக இருந்தது. ஏன் என்றால், அதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது. இன்றைக்கு உலக வங்கியின் மூலமாக இந்த திட்டத்தை நிறைவேற்றினோம். அப்பொழுதே இதையும் சேர்த்திருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. இதேபோல பல மாநகராட்சிகளில் உங்களுடைய ஆட்சி காலத்திலே பாதாள சாக்கடை திட்டத்தை துவக்கிவிட்டு, பாதியிலே விட்டுவிட்டு போய்விட்டார்கள். டெண்டர் எடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்காகத் தான் சொல்கிறேன். சப்—கான்ட்டிராக்ட் விட்டுவிட்டார்கள், சப்—கான்ட்ராக்ட் எல்லாம் சரியாக வேலை செய்யவில்லை என்று, எல்லா ஆட்சியிலும் இப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது. ஏன் என்றால் டெண்டர் விடும்போது தகுதியானவர் யாராக இருந்தாலும் டெண்டர் விட்டுதான் ஆகவேண்டும். பிறகு வேலை செய்வது அவருடைய நிலைமையை பொறுத்ததுதான். சில நேரத்திலே, டெண்டர் எடுத்து விடுவார்கள். நிதிநிலை சரியில்லை என்றால் பாதியிலே விட்டுவிடுகிறார்கள். அப்படித்தான் சேலம்

மாநகராட்சியிலும் உங்களுடைய ஆட்சி காலத்திலே டெண்டர் எடுத்து பாதி வேலை செய்துவிட்டு பாதி வேலை நிறைவேறாமலே பாதியிலே விட்டுவிட்டு போய்விட்டார்கள். மீண்டும் அதை Re-Tender கொண்டு வந்து, அந்தப் பணியை செய்துகொண்டு இருக்கிறோம். ஆகவே, திட்டம் போடும்போது அந்த திட்டத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கருத்தை தான் நான் சொன்னேன் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சென்டர் மீடியன் இருப்பதாகவும் அதிலே சரியான பணி செய்யவில்லை என்ற ஒரு கருத்தை சொல்கின்றார்கள். ஆகவே, நீங்கள் எந்த இடம் என்று குறிப்பிட்டு சொன்னால், ஆய்வு செய்யப்பட்டு, அதில் ஏதாவது தவறு இருந்தால் அந்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏன் என்று சொன்னால், நெடுஞ்சாலைத் துறையை பொறுத்தவரைக்கும், தரம் சோதனை செய்வதற்கு என்று தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, ஒரு பணி முடிகின்றபோது, தரச்சோதனை செய்துதான் அந்த பணிக்கு உண்டான ஒப்பந்தத் தொகை வழங்கப்படும். பொதுப்பணித் துறையிலும் கூட இதுவரைக்கும் தரம் சோதனை செய்வதற்கு நியமிக்கப்படவில்லை. இப்பொழுது புதுப்பிரிவை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம். பொதுப்பணித் துறையில் கட்டப்படுகின்ற பணியும் தரம் சோதனை செய்த பின்னர்தான் அதற்குண்டான தொகை வழங்க வேண்டும் என்று அறிவித்திருக்கின்றோம். அதில் ஏதாவது தவறு இருந்தால், நிச்சயமாக அந்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிமராமத்துத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (08.07.2019)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

தூர் வாரினீர்கள், ஒன்று இரண்டு ஏரிகளை தூர் வாரினால் மட்டும் போதாது. மொத்தம் 14,000 ஏரிகள் இருக்கிறது. தமிழகத்தில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரிகள் 14,000. பொதுப்பணித் துறையும், உள்ளாட்சித் துறையும் சேர்த்து மொத்தம் 39,000 ஏரிகள் இருக்கிறது. இந்த அனைத்து ஏரிகளும் தூர்வாரினால் தான் பருவ காலங்களிலே பெய்கின்ற மழைநீரை முழுவதும் சேமித்து வைக்க முடியும். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அம்மாவுடைய அரசு குடிமராமத்துத் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து முதற்கட்டமாக, பரீட்சார்த்த முறையிலே இந்தத் திட்டம் சரியாக இருக்குமா, சாத்தியமாக இருக்குமா என்பதை ஆராய்வதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கி 1,519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, இதில் முழுக்க முழுக்க விவசாயிகளுடைய பங்களிப்பை அதிலே ஈடுபடுத்தி, விவசாயிகளை உட்படுத்தி, அந்த ஏரியில் பாசனம் பெறுகின்ற அந்த விவசாய சங்கத்தையே இதில் பயன்படுத்திதான், இந்த திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம். முதலிலே, ஒரு சிறு தொகையைத்தான், அதாவது ஏரிக்கு ரூபாய் 10 இலட்சம் கொடுத்து அந்த ஏரியை தூர்வாரலாம் என்ற அடிப்படையிலே துவக்கினோம். இதற்கு நல்ல வரவேற்பு இருந்த காரணத்தினாலே, விவசாயிகளும் அங்கே இருக்கின்ற பொதுமக்களும் ஆர்வத்தோடு இந்தத் திட்டத்தை இன்னும் அதிகமாக கூடுதலாக செய்ய வேண்டும் என்றும், அதுமட்டுமல்ல, இந்த நிதி போதாது, ஒரு ஏரிக்கு தூர் வாருவதற்கோ அல்லது மராமத்து செய்வதற்கோ எவ்வளவு

நிதி தேவைப்படுகிறதோ அவ்வளவு நிதியும் நீங்கள் ஒதுக்கினால் தான் இது பயனுள்ளதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே, குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக அந்த ஏரிகளை தூர் வாருகின்றபோது, அந்த ஏரிக்கு மதிப்பீடு செய்து, அந்த ஏரியை ஆழப்படுத்துவது, தூர் வாருவது, கரைகளை பலப்படுத்துவது, வரத்து வாய்க்கால்களை சுத்தப்படுத்துவது, உபரி நீர் வெளியேறுகின்ற அந்த கால்வாயை சுத்தப்படுத்துவது, மதகை சீரமைப்பது, இப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்காக, அந்த ஏரியை பராமரிப்பதற்கு சீர் செய்வதற்கு எவ்வளவு நிதி தேவையோ, அவ்வளவு நிதியும் ஒதுக்கீடு செய்து, அந்தந்த பாசன விவசாயிகள் சங்கத்திலே ஒப்படைத்து, இப்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. **2016–2017**இல் **100** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு **1,519** ஏரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, **1,513** ஏரிகளின் பணிகள் நிறைவடைந்து இருக்கின்றன. மீதமுள்ள **6** ஏரிகள் அங்கே இருக்கக்கூடிய பாசன விவசாய சங்கத்தினுடைய பிரச்சினைகளின் காரணமாக நிறுத்தப்பட்டு இருக்கின்றது. **2017–2018**இல் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக எடுத்துக் கொள்ளப்பட்ட ஏரிகளின் எண்ணிக்கை **1,511.** அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் **328.94** கோடி. ஆகவே, இத்தனை பணிகள் இன்றைய தினம் நடைபெற்று கொண்டு இருக்கின்றன. முடிக்கப்பட்டவை **1,406** ஏரிகள். மீதமுள்ள ஏரிகள் விவசாய சங்கங்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தினாலே முடிக்கப்படவில்லை. அதையும் அவர்களை ஒற்றுமைப்படுத்தி பணிகளை மேற்கொள்வற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்த ஆண்டு **2019–2020**ஆம் ஆண்டு **1,829** ஏரிகள் இந்த குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக எடுத்து கொள்ளப்பட்டு, இதற்காக **499** கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

ஏன் என்றால், ஒரே காலக்கட்டத்தில் அனைத்து ஏரிகளும் தூர்வார முடியாது. அதற்குத் தேவையான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் தான், படிப்படியாக குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக, அதிக பரப்புள்ள ஏரிகளை எல்லாம் முதலிலே எடுத்து, அனைத்து மாவட்டங்களிலுமே இந்த குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக பணி நடைபெற்று கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தத் திட்டம் மேலும் சிறப்பாக நடைபெற வேண்டும், கண்காணிப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, இதற்காக தனியாக ஒரு இந்திய ஆட்சிப் பணி அதிகாரி திரு.பாலாஜி அவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார். அவர் இந்த குடிமராமத்துத் திட்டத்திற்கு சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டமாக சென்று இந்தத் திட்டம் எப்படி நடைபெறுகிறது, இந்த திட்டத்தில் விவசாயிகள் எந்த அளவு பயன்பெற்று இருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆய்வுக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, இப்படி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவுடைய அரசு, விவசாயிகளுக்கு தேவையான நீரை வழங்குவதற்காக குடிமராமத்துத் திட்டத்தை துவக்கி, அப்பணிகள் சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது முழுக்க முழுக்க விவசாயிகளைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையிலே தான் செயல்படுகின்றது. ஏனென்றால் டெண்டர் விட்டால் கூட சரியான முறையிலே அந்தப் பணியை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, மக்களை திரட்டி, அங்கே இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்களையும், பொதுமக்களையும் திரட்டி அங்கே இருக்கின்ற ஏரிகளை அவர்கள் மூலமாக இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற இந்த அற்புதமான திட்டத்தை அம்மாவுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார். எந்தெந்த ஏரிகள் எல்லாம் தூர் வாரப்பட்டு இருக்கிறது என்பதற்கு எல்லா பட்டியலும் இருக்கிறது. அதில் எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. உங்களுக்கு வேண்டுமானால் எந்தெந்த ஏரி என்று விளக்கமாக தெளிவாக கொடுக்கிறோம். உங்களுடைய ஆட்சி காலத்திலும், அதிகாரிகள் தான் செய்கிறார்கள். அதே அதிகாரிகள் தான் எங்களுடைய ஆட்சி காலத்திலும் செய்து கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கின்றபோது, எந்தெந்த பொறியாளர்கள் இருந்தார்களோ, அதே பொறியாளர்கள்தான் எங்களுடைய ஆட்சியிலும் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஒரு சிலர் வயதுமூப்பு காரணமாக ஒய்வு பெற்று இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் அதே பணியை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பணிகளை எல்லாம் சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இந்தப் பணியில் யாரும் தலையிடக் கூடாது, எந்த குறுக்கீடும் இருக்கக்கூடாது, முழுக்க முழுக்க விவசாயிகளை பயன்படுத்தி இந்த குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிதியை அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். ஆகவே, இதற்காகத்தான் ஒரு தனி அதிகாரியை நியமித்து இருக்கிறோம். இதில் எந்த அரசியல் குறுக்கீடும் இருக்கக்கூடாது, யாருடைய சிபாரிசும் இருக்கக்கூடாது, முழுக்க

முழுக்க அந்த ஏரியின் வாயிலாக பாசனம் பெற இருக்கின்ற விவசாயிகளை உட்படுத்தித்தான் இந்தப் பணியை செய்ய வேண்டும், அவர்களிடத்திலேதான் அந்தப் பணி செய்கின்ற நிதி போகும். அது எல்லாமே பேங்க் மூலமாகத் தான் போகின்றது. செக் மூலமாக தான் போகிறது. பணமாக யாருக்கும் கொடுப்பதில்லை. ஆகவே, பதிவு செய்யப்பட்ட அந்த விவசாய சங்கத்திற்குத் தான் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு வழங்கி இருக்கின்றது. அதில் எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. ஆகவே, பதிவு செய்யப்பட்ட பாசன விவசாய சங்கங்களுக்குத் தான் இந்தப் பணியை கொடுப்பார்கள். வேறு யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். அப்படி ஏதாவது தவறு நடந்திருந்தால், அதை நீங்கள் சுட்டிக்காட்டினால், அதை விசாரித்து, அங்கே தவறு ஏற்பட்டு இருக்கின்ற பட்சத்தில், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

கடல் அலையில் சிக்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வேண்டி குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மனு தொடர்பாக ஆற்றிய உரை (09.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், லெட்சுமிபுரம் கிராமம், மண்டைக்காடு புதூர் என்னுமிடத்தில் 16.06.2019 அன்று புதூரைச்சேர்ந்த சிறுவர்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாகக் கடல் அலையில் சிக்கி திரு. சகாய ராஜன் என்பவரின் மகன் செல்வன் சகாய ரெகின், திரு. ஸ்டேன்டர் என்பவரின் மகன் செல்வன் இன்பென்டர் ரகீட் மற்றும் திரு. மிக்கேல் நாயகம் என்பவரின் மகன் செல்வன் சச்சின் ஆகிய மூன்று சிறுவர்கள் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு, சச்சின் உடல் 16.06.2019 அன்றும், சகாய ரெகின் என்பவரது உடல் 17.06.2019 அன்றும், இன்பென்டர் ரகீட் என்பவரது உடல் 18.06.2019 அன்றும் கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று சிறுவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினரின் வறிய நிலையை கருத்தில் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஏழு பேர்களை விடுதலை செய்வது குறித்து அளித்த விளக்கம் (09.07.2019)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏழு பேருடைய விடுதலையை பற்றி பேசினார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு அமைச்சரவையை கூட்டி, அனைவருடைய ஒத்த கருத்தோடு, ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். ஆளுநர்தான் முடிவெடுக்க வேண்டும். ஆனால் நீங்கள் இவ்வளவு அக்கறையோடு கேட்கின்றீர்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில், முதலமைச்சராக மறைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் இருந்தபோது, அப்பொழுது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அந்த அமைச்சரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவை இந்த நேரத்திலே சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு விட்டோம். ஏன் என்று சொன்னால், நீங்கள் இவ்வளவு அக்கறையோடு கேட்கின்ற உங்களுடைய கட்சி, அந்தக் காலக்கட்டத்தில், அந்த அமைச்சரவைக் கூட்டத்தில், நளினிக்கு மட்டும் தண்டனையை குறைக்கலாம், மற்றவர்களுக்கு எல்லாம் தண்டனையை நிறைவேற்றலாம் என்று அமைச்சரவைக்கூட்டத்திலே நிறைவேற்றப்பட்டு இருக்கின்றது. ஆகவே, எங்களை பொறுத்தவரைக்கும் எதிர்க்கட்சி ஆனாலும் சரி, மக்களுடைய குறைகளை நீக்க வேண்டும், இதில் சம்பந்தப்பட்ட அவருடைய தாயாரெல்லாம் எங்களிடத்திலே மனு கொடுத்தார்கள். ஆகவே, அவருடைய கோரிக்கையை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேதான், எங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட வகையிலே, அமைச்சரவைக்கூடி, அதில் முடிவெடுக்கப்பட்டு, மேதகு ஆளுநர் அவர்களுக்கு ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று அனுப்பி இருக்கிறோம் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்கள் சொன்னார்கள். இப்படி ஒருவருக்கு மட்டும் எப்படி தண்டனையை குறைக்க முடியும். எனவே, அதில் எல்லோரும் இருக்கிறார்கள், தண்டனை பெற்று இருக்கிறார்கள். ஒருவருக்கு மட்டும் தண்டனையை குறைத்து மற்றவர்களுக்கு முடியாது என்ற கருத்தை எப்படி ஏற்க முடியும். ஆகவே, இதை சிந்தித்து, நீங்கள் எண்ணிப் பார்த்து பேச வேண்டும். எல்லோரும் தண்டனை பெற்று இருக்கிறார்கள். நளினிக்கு மட்டும் தண்டனை குறைப்பு செய்யலாம் என்ற கருத்தை சொல்லி,நீங்கள் அதை மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறீர்கள். அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. நீங்கள் வேண்டுமானால் எடுத்து பாருங்கள். சட்டம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஆகவே, தண்டனை கொடுத்தால் எல்லோருக்கும் தண்டனை கொடுக்க வேண்டும். விடுதலை செய்ய வேண்டும் என்றால், எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும். ஆகவே, ஒருவருக்கு மட்டும் தண்டனையை குறைக்கலாம் என்று கூறிவிட்டு, மற்றவர்களுக்கு தண்டனையை நிறைவேற்றலாம் என்று குறிப்பிலே இடம்பெற்று இருக்கின்றது. அதிலே முதலமைச்சர் முதல் அமைச்சர்கள் வரை கையொப்பமிட்டு இருக்கின்றார்கள். ஆனால், உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே, எங்களுடைய அரசு அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, நாங்கள் அமைச்சரவையிலே அந்த தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்றி, மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். எங்களுடைய வேலையை நாங்கள் சரியாக செய்திருக்கின்றோம். எந்தவித குறைபாடும் இல்லை. உச்சநீதிமன்றம் அளித்திருக்கின்ற தீர்ப்பின் அடிப்படையிலே, நாங்கள் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் தீர்மானத்தை நிறைவேற்றி மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். மேதகு ஆளுநர் அவர்கள் தான் அதைப்பற்றி முடிவு செய்வார் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

நீட் தேர்வு குறித்து அளித்த விளக்கம் (10.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத்தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக்காலத்தில், இதற்கான notification–ஐ போட்டீர்களா, இல்லையா ? ஏனென்றால், அவையெல்லாம் Record இல் இருக்கிறது. record இல் இருப்பதை யாராலும் மறைக்க முடியாது. அதுதான் இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம். இன்றைக்கு இந்த அவையிலே இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டதற்கு காரணம் இதுதான். ஆகவே, நீட் தேர்வு வருவதற்கு முக்கிய பங்கு வகித்தது காங்கிரஸ் கட்சி என்பதை மறுக்க முடியாது.

ஆகவே, கேட்டதையெல்லாம் நேற்றையதினமே, இரண்டு நாட்களுக்கு முன்பாகவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக சொல்லிவிட்டார்கள். இதில் யாரும் மறைப்பதற்கே ஒன்றும் கிடையாது. ஆகவே, நீங்கள் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற காலக்கட்டத்திலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆகவே, இப்பொழுது இருக்கின்ற மத்திய அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அதை முறியடிப்பதற்காக, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற மாணவர்களினுடைய நலன் கருதி, அனைவரும் ஒருமித்த கருத்தோடு நாம் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதில் எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக்கட்சியும் சரி, அரசும் சரி இதற்காக முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே, சட்டரீதியாகவும் நாம் அணுகினோம். மத்திய அரசையும் அணுகினோம். நாங்கள் பல முறை பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்து மனு கொடுத்தோம். ஆகவே, எங்களால் எந்த அளவிற்கு

முடியுமோ, அந்த அளவிற்கு NEET தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க எந்த அளவிற்கு முயற்சி செய்ய வேண்டுமோ, அந்த அளவிற்கு முயற்சி செய்தோம். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியும் இருந்தது, பாரதிய ஜனதா கட்சி ஆட்சியும் இருக்கின்றது. ஆட்சி அதிகாரத்திலே இருந்தவர்கள் நீங்கள். நீங்கள் போட்ட notification தான் இவ்வளவு பிரச்சினையையும் உருவாக்கியிருக்கிறது என்ற விளக்கத்தைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள் என்பதை தங்கள் வாயிலாக நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

யார் யார் மீதெல்லாம் வழக்கு போட்டு, யார் யாரெல்லாம் ஜாமீன் பெற்றிருக்கிறார்கள் என்று நாட்டுக்கே தெரியும். இதை யாரும் மறைக்க வேண்டியதே இல்லை. தினந்தோறும் வாய்தா வாங்கிக் கொண்டிருப்பவர்கள் யார் என்றும் மக்களுக்குத் தெரியும். ஆகவே, இதைப் பற்றி காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் வேறு திசைக்கு மாற்ற வேண்டாம். ஏனென்றால், இதற்குள்ளேயே பேசுங்கள். ஆகவே, இதற்கு மூல காரணமே மத்தியில் நீங்கள் ஆட்சியில் இருக்கின்ற காலகட்டத்திலே NEET தேர்வை கொண்டு வருவதற்கு நீங்கள்தான் காரணம் என்பதைப் பற்றித்தான் அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதைக் கொண்டு வராமல் இருந்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கே இடம் அளித்திருக்க மாட்டார்கள். இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம், அன்றையதினம் notification போட்ட காரணத்தினாலே, இது அமலுக்கு வருகின்ற ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினாலே இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

NEET பிரச்சினை வரும்போதுதான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சொன்னார்கள். அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. இது என்ன காரணத்திற்காக – NEET தேர்வில் தமிழகத்திற்கு விலக்களிக்கக் கூடிய சூழ்நிலையிலே இப்படிப்பட்ட ஓர் தீர்ப்பை – நாங்கள் பெயர் சொல்லக்கூடாது – நீங்கள்தான் பெயர் சொல்லக் கூடாது என்று சொல்லிவிட்டீர்களே – வாதாடியதை சொல்லித்தானே ஆக வேண்டும். அப்போது நீதிமன்றத்திலே சொல்கிறார்கள். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். இன்றைக்கு Courtஇல் நிராகரிக்கப்பட்டது என்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள்கூட சொல்கிறார். ஆகவே, ஒவ்வொருவருக்கும் ஆங்கில வார்த்தைகள் மாறுபடுகிறது என்று எங்கள் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆகவே, நீங்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இது ஓர் பொதுப் பிரச்சினை. ஒரு பொதுப்பிரச்சினை என்று வருகின்றபொழுது, ஒரு முக்கியமான, ஆழமான பிரச்சினையைப்பற்றிப் பேசுகின்றபொழுது, இதிலே involve ஆனவர்களின் பெயரை சொல்லித்தானே ஆக வேண்டும். இதில் யார் involve ஆனார்கள் என்று உங்களுக்குத் தெரியும். நாம் சொன்னாலும், சொல்லவிட்டாலும் மக்களுக்குத் தெரியும். ஆகவே, இதில் என்ன தவறு இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. வாதாடினார்களா, இல்லையா ? அதற்காக வாதாடி, NEET தேர்விற்கு விலக்களிக்கக்கூடிய சூழ்நிலையிலே, அதற்கு ஆதரவான ஒரு தீர்ப்பை பெற்றுத் தந்தார்களா, இல்லையா ?

நீங்களே சொல்லுங்கள் பார்க்கலாம். நீங்களும் தமிழகத்தில் NEET வரக்கூடாது என்கின்றீர்கள். அப்படி எல்லோரும் எண்ணுகின்றபோது இதற்கு எதிராக ஒருவர் ஆஜரானால் அதை நாம் என்ன சொல்வது ? அதற்கு நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

திண்டிவனம் – கிருஷ்ணகிரி சாலைப் பணிகள் மற்றும் மதுரவாயல் பிரச்சினை குறித்து அளித்த விளக்கம் (10.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

State Support Agreement பற்றிச்சொன்னார்கள். உங்களுடைய ஆட்சிக்காலத்திலே மத்திய அரசு தகவல் அனுப்பப்பட்டது. ஆனால், நீங்கள் அதை நிறைவேற்றவில்லை. மீண்டும் அந்தக் கூட்டம் கூடுகின்றபோது தேர்தல் வந்த காரணத்தால் அப்படியே தள்ளிப்போய்விட்டது. அதற்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களை அங்கிருக்கின்ற லாரி அதிபர்கள், பேருந்து அதிபர்கள் எல்லாம் நேரில் சந்தித்து இந்த tollgate பிரச்சினை பற்றிச்சொன்னார்கள். அந்தப் பிரச்சினை சம்பந்தமாக, மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பினோம். எந்த பதிலும் வரவில்லை. இதைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். மத்திய அரசு வரைவு ஒப்பந்த உடன்படிக்கையின்படி, 2009 அன்று தமிழ்நாடு மாநில அரசுக்கு அனுப்பியது உங்களுடைய ஆட்சிக்காலத்திலே. முந்தைய ஆட்சியாளர்கள் ஆய்வு செய்வதில் காலந்தாழ்த்தியதால் அப்போது மத்திய அமைச்சர் திரு. கமல்நாத் அவர்கள் முதலமைச்சருக்கு 13.07.2009 இல் கடிதம் எழுதியுள்ளார். 30.03.2010 இல் கையெழுத்து போட வேண்டிய ஒப்பந்தம் பலமுறை தள்ளிப்போனதால் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே. மீண்டும் பல நாட்கள் இப்பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு திராவிட முன்னேற்றக்கழக அரசை கலந்தாய்வுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு, உங்களுடைய தரப்பிலிருந்து எவரும் அந்தக்கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. 09.03.2011 இல் மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாள் குறிக்கப்பட்டும், தேர்தல் நடைபெறுவதால் மத்திய அரசு இதனைத் தள்ளி வைத்தது.

அந்தக் காலம் குறித்து உங்களை அழைத்தபோது தேர்தல் அறிவித்து விட்டார்கள். அதோடு முடிந்துவிட்டது. இந்திய தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இன்னும் முடிவடையாமல் உள்ள 7 BOT திட்டப் பணிகள் மற்றும் ஒரு OMT பணிக்கு தனித்தனியே ஒத்துழைப்பு ஒப்பந்தம் SSA கையெழுத்திடுவது தொடர்பாக 22.12.2017 அன்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாநில அரசு பதிந்துள்ள திருத்தங்களின் அடிப்படையில் இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் நடந்த விவரங்கள். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகளுக்கு ஒத்துழைப்பு தருவதற்கு ஒப்பந்தம் செய்யப்படுவதுதான் மாநில அரசு ஒத்துழைப்பு ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டால் சாலையைப்பயன்படுத்தும் பொதுமக்களுக்கு சில இடங்களில் அசௌரியங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் ஒப்பந்தம் தீவிரமாக ஆராயப்பட்டது. தனியார் பேருந்து லாரி உரிமையாளர்கள் சங்கப்பிரதிநிதிகள் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் சுங்கச்சாவடி கட்டணம் குறித்து கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மக்களின் நன்மைக்காக மத்திய அரசிடம் சில கோரிக்கையை பரிசீலிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டன. அவை அந்த மாநிலம் முழுவதும் ஒரே சீரான கட்டணம், tollgate இல் அனைத்து tollgate லும் ஒரே சீரான கட்டணம். சுங்கச் சாவடியில் குறிப்பிட்ட வாகனங்களுக்கு மாதக் கட்டணம் செலுத்தி, பின் பலமுறை சென்றுவர அனுமதித்தல். ஏனென்றால், 1997, 2008 சட்டம் என்று மாறி மாறி இருக்கிறது. அதை ஒரேமாதிரியாக கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் சுங்கக்கட்டணம் உயர்த்தப்படுவதால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுங்கக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. இதை அவர்கள் ஏற்கவில்லை. தற்போதைய

நிலை தற்போது மாநில அரசின் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளாமல் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் செயல்படுத்த உத்தேசிக்கும் ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியே ஒப்பந்தம் செய்யப்படலாம் என மாநில அரசால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுவரையிலும் எந்த பதிலும் வரவில்லை.

திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலையைப்பற்றி சொன்னார்கள். அது இந்திய தேசியநெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப் படுகின்ற பணி. இப்போது அந்தப் பணியைச் செய்தவர்கள் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இப்போது மீண்டும் மறு tender விடப்பட்டு அந்தப் பணி துவங்க இருக்கிறது. திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலைக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, இன்றைக்கு அந்த ஒப்பந்தம் விடப்பட்டிருக்கின்றது. விரைவாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

அதேபோல, மதுரவாயல் பிரச்சினையைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். அது நேர்ப்பாடு. ஏற்கெனவே, நேர்ப்பாடு சரியில்லாத காரணத்தால்தான் உங்கள் ஆட்சிக்காலத்திலே கூவம் ஆற்றின் நடுவிலே தூண் அமைக்கப்பட்ட காரணத்தாலே வெள்ளம் வருகிற காலத்திலே, தண்ணீர் தடுத்து ஊருக்குள் புகுமென்ற காரணத்தினாலே, நகரத்திற்குள் புகுமென்ற அடிப்படையிலே, அதை அப்போது நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் மற்றும் அதிகாரிகளும், நம்முடைய மாநில நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளும் கலந்துபேசி, இப்போது இந்தப்பணி துவங்குவதற்குண்டான நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

ஆதம்பாக்கம் ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து அளித்த விளக்கம் (10.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதம்பாக்கம் ஏரி பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு பகுதியிலே இருக்கின்ற குப்பை கழிவுகள் அகற்றப்பட்டு உள்ளது. மேலும், ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சென்னை மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றிய பின்பு ஆழப்படுத்தி, அகலப்படுத்தி மற்றும் கரையினை பலப்படுத்தி, நீர் தேக்கி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அனகாபுத்தூரில் அடையாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட ஆற்றுப்பாலத்தின் ஒரு பகுதி அணுகு சாலை, இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஒரு ஏக்கருக்கும் குறைவாக உள்ள நிலத்தில் அமைய இருந்ததால், இந்திய விமானப்படையின் அனுமதி பெற்று, அந்த இடத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இடமாற்றம் முடிந்தவுடன், பாலத்தின் எஞ்சிய பகுதி கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாண்டு காலமாக தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார். இப்பொழுது தான் மத்திய அரசிடமிருந்து இதற்கு அனுமதி கிடைத்திருக்கின்றது. விரைவாக இப்பணி துவங்கி நிறைவு பெறும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்ட இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாக அளித்த விளக்கம் (11.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாங்கள் சொல்வதை செய்வோம், சொல்லாததையும் நாங்கள் செய்து கொண்டு இருக்கின்றோம். ஆகவே, இன்றையதினம் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 3,00,431 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்காக 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது சொன்னார்கள், கிராமத்திற்கு போகிறோம், மக்கள் எல்லோரையும் சந்திக்கின்றோம், இளையோர்களை எல்லாம் சந்திக்கின்றோம். ஆகவே, புதிய புதிய தொழில் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத் தான், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திக்கொண்டு இருக்கின்றோம். ஒவ்வொருவருக்கும் ஒரு காலகட்டத்தில் புதிய தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் வரும். அந்த ஆர்வத்தை பயன்படுத்தி தொழில் துவக்குகிறோம். ஆகவே, முதல் வருஷம் நடத்திவிட்டீர்கள், அது முடிந்த பிறகு தான் இரண்டாவது நடத்த வேண்டும் என்றால், அது நடக்காது. ஆகவே, இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை, மூன்று ஆண்டுக்கு ஒருமுறை, தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திக் கொண்டு இருக்கின்றபோது, எந்தெந்த மாநிலம் தொழில் முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலம் என்று தேர்ந்தெடுத்து, இங்கே தொழிலதிபர்கள் வருவார்கள். ஆகவே, இந்தியாவை பொறுத்தவரைக்கும், தொழில் முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு என்று இன்றைக்கு தொழிலதிபர்கள் எல்லாம் முடிவு எடுத்துதான், 3,00,431 கோடி ரூபாய் தொழில் முதலீடு செய்ய முன்வந்து, 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, ஒரு வாரத்திற்கு முன்னர் கூட பல்வேறு தொழிற்சாலைகளுக்கு நான் அடிக்கல் நாட்டினேன். இதை நான் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு அரசாங்கம் என்று சொன்னால், நீங்கள் சொல்வதைப் போல பலபேரை சந்தித்து,

இன்றைக்கு யார் யாருக்கெல்லாம் இதில் ஆர்வம் இருக்கின்றதோ, இந்தியா முழுவதும் சரி, வெளிநாட்டிலும் சரி, நம்முடைய அமைச்சர்கள், துறையைச்சேர்ந்த அதிகாரிகள், எல்லாம் வெளிநாட்டிற்கு சென்று தொழிலதிபர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் செய்வதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும், ஆகவே, நீங்கள் முன்வாருங்கள் என்று சொல்லி அழைத்ததன் பேரில்தான், இந்த தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் இவ்வளவு பேர் கலந்துகொண்டு 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு இருக்கிறது. அதைக்கூட மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் குறையாக பேசினார்கள். வீதியிலே சென்றவர்கள் போனவர்கள் எல்லாம் கோட்–சூட் போட்டு அதில் அமர வைத்தீர்கள் என்ற அந்த செய்தியை எல்லாம் பத்திரிகையிலே பார்த்தேன். அந்த தொழிலதிபர்கள் எல்லாம் எங்களை சந்தித்து வருத்தப்பட்டார்கள். ஆகவே, தொழில் முதலீட்டை அதிகமாக தமிழ்நாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பதன் அடிப்படையிலே தான், தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துகின்றோம். உங்களுடைய விருப்பப்படிதான் அரசு நடந்துகொண்டு இருக்கிறது. கிராமத்திலே இருப்பவர்களுக்கு கூட வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாகின்றபோது, அதற்கு தேவையான மானியத்தை நாங்கள் கொடுக்கின்றோம். அதுமட்டுமல்ல, சிறு தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக, பெரும்பாலான மாவட்டங்களில் அமைச்சர்களும், அதிகாரிகளும் சென்று, அங்கே நீங்கள் எவ்வளவு தொழில் முதலீடு செய்வீர்கள், 5 கோடியோ, 10 கோடியோ அல்லது 20 கோடியோ யார் முதலீடு செய்ய முன்வருகின்றார்களோ, அவர்களை எல்லோரையும் அழைத்துப்பேசி, அதற்கு தேவையான உதவிகள் அரசால் செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்து, அவர்களும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அவர்களும் உட்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பின் அளித்த பதிலுரை (15.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் இந்தியா, உலகிலேயே இரண்டாவது அதிக சாலை வலைதளங்களை கொண்டுள்ளது. சாலைப் போக்குவரத்தானது, சரக்கு மற்றும் பயணிகளின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்தல், எளிதாக அணுகுதல், செயல்பாடுகளில் இணக்கமான சூழல் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றினால் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு, அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக திகழ்கிறது. மேலும், வளர்ச்சியடைந்த, நிலையான பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், பல துறைகளில் முன்னோடியாகவும் விளங்குகிறது. வாகன உற்பத்தி, பொறியியல், தோல் பொருட்கள், ஆடை உற்பத்தி, தொழிற்சாலைகள், சுகாதாரம், சுற்றுலா மற்றும் கலாச்சார மையங்கள் ஆகியவற்றில் முன்னணி வகிப்பதுடன், விவசாய வளர்ச்சியில், நாட்டிற்கே நெற்களஞ்சியமாக உள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு 11 ஆவது பெரிய மாநிலமாக 1,30,058 சதுர கிலோ மீட்டர் மொத்தபரப்பளவு கொண்டு திகழ்கிறது. இம்மாநிலத்தின் மக்கள் தொகை ஒரு சதுர கி.மீ.க்கு 555 நபர்களாக உள்ளது. வாகனங்களின் எண்ணிக்கை 1951 ஆம் ஆண்டு 27,325 இல் இருந்து 2018 ஆம் ஆண்டு 2 கோடியே 56 இலட்சத்து 61 ஆயிரத்து 847ஆக, அதாவது 939 மடங்கு உயர்ந்துள்ளது. இம் மாநிலத்தில் 2016 இல் சாலை அடர்த்தி ஒரு இலட்சம் மக்கள்

தொகைக்கு 361 கி.மீ. ஆகவும், 100 சதுர கி.மீ.க்கு 200 கி.மீ. நீளமாகவும், இந்திய சராசரியான 170 கி.மீ. நீளத்தைவிட அதிகமானதாகவே உள்ளது. தமிழ்நாட்டில் சாலை கட்டமைப்பு 1951 இல் 32 ஆயிரத்து 307 கி.மீ. நீளத்திலிருந்து 8.08 மடங்கு உயர்ந்து 2016 இல் 2 இலட்சத்து 61 ஆயிரத்து 035 கி.மீ. ஆக உள்ளது. தற்சமயம் 66 ஆயிரத்து 39 கி.மீ. நீள சாலைகள் மத்திய மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறைகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக திகழ்கிறது. உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில், போட்டி நிலையினை உயர்த்தவும், உற்பத்தி மற்றும் செயல்திறனை அதிகரிக்கவும், சிறந்த சாலை கட்டமைப்பானது அவசியமாகிறது. பசுமையான சாலைகள், அவற்றில் பாதுகாப்பான பயணம் என்ற உயரிய இலட்சியத்துடன் மாநிலத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்கத்தோடு நெடுஞ்சாலைத் துறை செயல்படுகிறது.

நல்ல சாலை இணைப்புகள் நகர மற்றும் கிராமப்புறங்களின் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன. தமிழ்நாட்டின் சாலை மற்றும் துறைமுக உள்கட்டமைப்புகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், பராமரித்தல் ஆகியவற்றுடன் தமிழ்நாடு முழுவதும் சமநிலை சமூக பொருளாதார வளர்ச்சி அடைய நல்ல தரமான சாலை இணைப்புகள், அகலமான சாலைகள், சுற்றுச்சாலைகள், பாலங்கள், இரயில்வே கடவுகளில் மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் மற்றும் சிறு துறைமுகங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத்துறை, 11 ஆயிரத்து 169 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளையும், 11 ஆயிரத்து 612 கி.மீ. நீள மாவட்ட முக்கியசாலைகளையும் மற்றும் 36 ஆயிரத்து 624 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளையும் பராமரித்து வருகிறது. மேலும் தேசிய

நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 6 ஆயிரத்து 634 கி.மீ. இதில் 1,900 கி.மீ. சாலைகள் மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலமும், 4 ஆயிரத்து 734 கி.மீ. சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமும் பராமரிக்கப்படுகின்றன.

3 ஆண்டு சாதனைகள்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்று வரும் இந்த அரசானது, நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ், சாலை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இத்துறையின் வாயிலாக மொத்தம் ரூ.19,608.81 கோடி மதிப்பில் 20,237 கி.மீ. சாலைகளில் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 281 பாலங்கள் மற்றும் 629 சிறுபாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டன. இதுதவிர சாலை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்கு ரூ.2,991.74 கோடி செலவிடப்பட்டு 10 ஆயிரத்து 486 கி.மீ. நீளம் உள்ள சாலைகள் இடர்பாடற்ற போக்குவரத்தினை கையாள ஏதுவாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.

2018–2019ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம், திருச்சி இரயில்வே சந்திப்புபகுதியில் 115.59 கோடி ரூபாய் மதிப்பிலும், கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை பகுதியில் 41.40 கோடி ரூபாய் மதிப்பிலும் கட்டிமுடிக்கப்பட்ட இரயில்வே மேம்பாலங்கள் உட்பட மொத்தம் 2018–2019 இல் 6 இரயில்வே மேம்பாலங்கள் 247.04 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களின் திறனை மேம்படுத்துதல்

நெடுஞ்சாலைத்துறையில் கடந்த 3 ஆண்டுகளில் புதியதாக 376 உதவிப்பொறியாளர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர்

தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டனர். இவர்களின் பணித்திறனை ஆரம்ப கட்டத்திலேயே மேம்படுத்த பணி சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பாலம் கட்டுதல், சாலை அமைத்தல் ஏனைய கட்டமைப்புகளை நவீன தொழில்நுட்பத்துடன் கட்டுமானம் செய்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், நிலம் கையகப்படுத்துவது மற்றும் முன்நுழைவு அனுமதி பெறப்படுவதற்கு கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது. இதனால் அவர்கள் பணியினை முழு வேகத்தில் ஆரம்பிக்க உதவுகிறது. புதிதாக பணியில் சேரும் பொறியாளர்கள் மற்றும் பணியில் பல்வேறு நிலையில் உள்ள பொறியாளர்களுக்கும் இப்பயிற்சியினை தொடர்ந்து வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனால் பணியில் காலதாமதம் தவிர்க்கப்படும்.

2018–2019 இல் மேற்கொள்ளப்பட்ட முக்கியப் பணிகள்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நெடுஞ்சாலைத்துறை முனைப்புடன் சாலை மேம்பாட்டுப்பணிகளை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொண்டு பல்வேறு சாலைகளை சீரிய முறையில் பராமரித்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தும் மறையாமல் மக்களின் நினைவுகளில் என்றென்றும் நிற்பதற்கு காரணம் அரிய பல மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்திய காரணம்தான். அந்த வகையில் நெடுஞ்சாலைத்துறையில் 2004–2005இல் அறிமுகப்படுத்திய உன்னதமான திட்டம் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) : இத்திட்டத்தில் சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், பாலங்கள் கட்டுதல், சிறு பாலங்கள் கட்டுதல், சாலைப்பாதுகாப்பு பணிகள் மற்றும் புறவழிச்சாலைகள் அமைத்தல் போன்ற உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் சாலைகளில், கடந்த ஐந்து ஆண்டுகளில் **2014–2015** முதல் **2018–2019** வரை **21** ஆயிரத்து **357** கி.மீ. சாலைகளில் உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் பணிகள் இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளன. கோவை, சேலம், திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு பாலங்கள் கட்டப்படுகின்றன. கோயம்புத்தூர் – இராமநாதபுரம் மற்றும் சுங்கம் சந்திப்பில் மேம்பாலம், கவுண்டம்பாளையம் சந்திப்பில் மேம்பாலம், ஜி.என் மில்ஸ் சந்திப்பில் மேம்பாலம், அண்மையில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சேலம் மாநகரில் திருவாக்கவுண்டனூர் சாலை சந்திப்பு, சேலம் இரும்பு உருக்காலை சாலை சந்திப்பு, குரங்குசாவடி மற்றும் எ.வி.ஆர். ரவுண்டானாவை இணைக்கும் வகையில் சாலை மேம்பாலம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வந்ததால் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறைந்துள்ளது. மதுரையில் காலவாசல் சந்திப்பில் பாலப்பணி நடைபெறுகிறது. பரவை துவரிமான் இணைப்பு பாலம் வைகையாற்றின் குறுக்கே கட்டப்படுகிறது. மதுரை சுற்றுச்சாலை பணி விரைவில் முடிக்கப்படவுள்ளது. பாண்டி கோவில் சாலை சந்திப்பில் ஒரு பல்லடுக்கு பாலம் நடைபெறுகிறது. பாலங்கள் கட்டும் சில நேர்வுகளில் நிலம் கையகப்படுத்துவதில் சிரமம் ஏற்படும்போது கட்டுமானப்பணி தாமதப்படுகிறது. இதனை தவிர்ப்பதற்கு தனி கவனம் செலுத்தப்படுகிறது. அனகாபுத்தூரில் பாலம் கட்டப்பட்டபின் அணுகு சாலை மத்திய இராணுவ நிலத்தில் அமைய இருந்ததால் உரிய அனுமதி பெறுவதில் தாமதம் ஆகியது. இதனை களைய அப்போதைய இராணுவ அமைச்சரிடம் நானே நேரில் பேசி உரிய அனுமதி தற்போது பெறப்பட்டுள்ளது. பாலத்தின் அணுகு சாலை விரைவில் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பாலம் திறந்துவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புறவழிச்சாலைகள்

நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், கனரக வாகனங்கள் நகரப்பகுதிகளில் செல்வதால் ஏற்படும் விபத்துக்களை பெருமளவில் குறைக்கவும், வாகன எரிப்பொருள் செலவினை குறைக்கவும், புறவழிச்சாலைகள் உதவுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில் 24 புறவழிச்சாலைப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. 4 நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 42 நகரங்களில் புறவழிச்சாலைப் பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 24 புறவழிச்சாலைப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இரயில்வே மேம்பாட்டுப் பணிகள்

இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ் பாலங்கள் கட்டும் பணிகள் இரயில்வே திட்டப் பணிகளின் கீழ், இரயில்வேதுறை மற்றும் தமிழ்நாடு அரசு 50:50 நிதி பகிர்மான அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இரயில்வே திட்டப் பணிகளின் கீழ், ஒப்புதல் அளிக்கப்பட்ட 102 பணிகளில் 54 பணிகள் ரூ.1,758 கோடி மதிப்பீட்டில் கட்டுமானத்திற்கு நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டன. ஏனைய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2011 முதல் 30.06.2019 வரை மொத்தம் 69 இரயில்வே மேம்பாலம் / கீழ்பாலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கடந்த காலங்களில் இரயில்வே பாலங்கள் கட்டி முடிப்பதற்கு பல்வேறு காரணங்களால் குறைந்தபட்சம் 5 முதல் 10 ஆண்டு ஆகியது. காலதாமதத்திற்கு உரிய காரணங்கள் ஆராயப்பட்டு அவைகள் களையப்பட்டதால் தற்போது 5 ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படுகிறது. நிலம் கையகப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தால் கூட அதனை களைய தனி கவனம் செலுத்தப்படுகிறது.

நபார்டு வங்கிக் கடன் உதவித் திட்டம்

உள்ளாட்சி சாலைகள் மற்றும் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல், புதிய இணைப்புப் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் மேம்பாடு போன்ற பணிகள், நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், போக்குவரத்து அதிகமாக உள்ள உள்ளாட்சி சாலைகள், மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில் 773 பாலங்கள் 1,890 கோடி ரூபாய் மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 512 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 2,957 கி.மீ நீள உள்ளாட்சி சாலைகள் 1,490 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,384 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 446 கி.மீ. நீளச் சாலைப்பணிகள் 259 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளன.

சென்னை பெருநகர பகுதியில் மேம்பாட்டு பணிகள்

சென்னை பெருநகரப் பகுதிகளில் நாளுக்கு நாள் பெருகிவரும் வாகனப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு சாலை மற்றும் பால கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நெடுஞ்சாலைத்துறை முனைப்புடன் தனி கவனம் செலுத்தி பணியாற்றி வருகிறது. தற்பொழுது 9 முக்கிய இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவைகள் 1. கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில், 2. கொளத்தூர் இரட்டை ஏரி, 3. கொரட்டூர், 4. கீழ்கட்டளை, 5. வேளச்சேரி சந்திப்பு, 6. பல்லாவரம், 7. மேடவாக்கம், 8. வண்டலூர், 9. திருவொற்றியூர் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே நடைபெறும் பாலம் விரைவில் முடிக்கப்படும்.

இவற்றிற்கும் மேலாக சென்னை நகர வாகனங்கள் வெளியூர் செல்லும்போதும் மற்றும் புறநகர வாகனங்கள் சென்னை மாநகரத்திற்குள் நுழையும் முக்கிய இடமான பெருங்களத்தூரில்

மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது நம் அனைவருக்கும் தெரியும். இந்த போக்குவரத்து நெரிசலை தீர்வு காணும் வகையில் மிகப்பெரிய பல்லடுக்கு பாலம் ஒன்றை அமைக்க தற்போது ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்கப்படவுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பெருங்களத்தூரிலிருந்து சிங்கபெருமாள் கோவில் வரை தற்போது உள்ள 4 வழிப்பாதை 8 வழிப்பாதையாக அகலப்படுத்துவதற்கு மத்திய தரை வழி போக்குவரத்து அமைச்சகத்திடம் சிறப்பு அனுமதி மற்றும் ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது நெடுஞ்சாலைத்துறை மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் சென்னை மாநகர மக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்ளும்போது போக்குவரத்து இடையூறு இன்றி சுகமான, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளலாம். மேலும் சென்னை மாநகரத்தின் முக்கிய சாலை சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு பாலம் அல்லது பல்லடுக்கு மேம்பாலம் கட்டுவதற்கு ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II

உலக வங்கி நிதி உதவியுடன் 427 கி.மீ நீள சாலைப்பணிகள் (கடின தள புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலைகளாக அகலப்படுத்துதல்) பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் (EPC) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 579 கி.மீ நீளமுள்ள சாலைப்பராமரிப்பு பணிகள் வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலை பராமரிப்பு (OPRC) ஒப்பந்த முறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 427 கி.மீ. நீள சாலைப்பணிகள் 10 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு 9 தொகுப்புகளில் பணி நிறைவடைந்துள்ளன. 3 தொகுப்புகளாக 146 கி.மீ. நீளச்சாலைகள் (PPP) பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒரு தொகுப்பில் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்

தொடர்ச்சியாக கூடுதலாக 169.73 மில்லியன் டாலர் கூடுதல் கடன் உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 654 கி.மீ நீளச் சாலைகள் 6 ஆயிரத்து 448 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியினை செயலாக்கத்திற்கு தலைமைப்பொறியாளர் உள்ளிட்ட 588 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான ஆசிய வளர்ச்சி வங்கியுடனான கடன்ஒப்பந்தம் 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலே மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை எல்லைச் சாலை

சென்னை மாநகரத்திற்குள் கனரக வாகனங்கள் செல்வதை தவிர்க்கும் பொருட்டு எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி மாமல்லபுரம் அருகில் உள்ள பூஞ்சேரியில் முடிவடையும் வகையில் 133.38 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலையை செயல்படுத்த நிலம் கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலையில் உள்ளது. 25.11 கி.மீ நீளமுள்ள சாலை (பகுதி–1) 2 ஆயிரத்து 504.63 கோடி ரூபாய் மதிப்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி உதவி மூலம் பணி துவங்கப்படவுள்ளது.

தேசியநெடுஞ்சாலை

தமிழ்நாட்டில், 6 ஆயிரத்து 634 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன, மாநில அரசு 1,900 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளை பராமரித்து வருகிறது. மீதமுள்ள 4 ஆயிரத்து 734 கி.மீ சாலைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பராமரித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளில் திட்டம் மற்றும் திட்டம் சாராப்பணிகளின் கீழ், மத்திய நிதியுதவியுடன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நெடுஞ்சாலைத்துறையின் சீரிய முயற்சியினால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமான நிதி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு சாலை மற்றும் பால கட்டுமானப்பணிகள் நடைபெறுகின்றன. ஆண்டுத்திட்டம் 2016–2019 இன் கீழ். மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ரூ.2,662.62 கோடி மதிப்பிலான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் ரூ.2,026.60 கோடி செலவில் 819 கி.மீ. நீளமுள்ள 78 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ், ஆயிரத்து 291.26 கோடி ரூபாய் செலவில் 1,778 கி.மீ. நீளம், 279 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம்

1,076 கிலோமீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாடு கடற்கரையில் அமைந்துள்ள 18 சிறு துறைமுகங்களை தமிழ்நாடு கடல்சார் வாரியம், நிர்வகித்து, மேம்படுத்தி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டில் சிறு துறைமுகங்களின் மூலம் 9 இலட்சத்து 62 ஆயிரத்து 894 மெட்ரிக் டன் சரக்குகள், 4 இலட்சத்து 11 ஆயிரத்து 792 சரக்குப் பெட்டகங்கள் மற்றும் 201 வாகனங்கள் ஆகியவை கையாளப்பட்டு சுமார் ரூ.65.28 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கடலூர் துறைமுகம் ஆழ்கடல், அனைத்து பருவகால கப்பலணையும், துறைமுகமாக மைய அரசின் நிதியுதவியுடன் சுமார் 135 கோடி ரூபாயில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி துறைமுகத்தில் விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத்துறையினை சுற்றுலாப்பயணிகளின் வசதிகளுக்காக 100 மீட்டர் அளவிற்கு நீட்டிப்பு செய்வதற்கு 20 கோடி ரூபாய் செலவில், மைய அரசின் நிதியுதவியுடன் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுப்பணி – நீர் ஆதாரம்

உயிர்கள் நீரில் தோன்றின. அதனால்தான் நம் குருதியும், வியர்வையும், கண்ணீரும் நீர்மையாக இருக்கின்றன. உலகில் உள்ள நில அளவை விட மூன்று மடங்கு கடல் பெரியது, கடல் வளம் மகத்தானது, அவ்வளத்தைக்கொடுப்பது கூட மழைதான். ''தானும் உணவாகி, உணவை ஆக்குவதும் தண்ணீர் – மழைதான்''. மழையின்றி மனிதன் இல்லை, இந்த உலகத்தையும், மனித இனத்தையும், ஏனைய உயிரினங்களையும் அழியாமல் காப்பது மழைதான்.

பழந்தமிழர்கள் நீரை மிகவும் நேர்த்தியாக பராமரித்தார்கள். நீர் நிலைகளுக்கு அவர்கள் அளித்த பெயர்களே அதற்குச் சான்றாக விளங்குகின்றன.

அகழி, அருவி, ஆறு, ஏரி, கடல் போன்றவை நமக்குப் பழக்கமான பெயர்கள். கடலருகே தோண்டிக் கட்டிய கிணறுக்கு 'ஆழிக்கிணறு' என்று பெயர். பலவகையில் பயன்படும் நீர்த்தேக்கம் 'இலஞ்சி' (Multi Purpose Reservoir). மக்கள் பருகும் நீர் உள்ள நீர்நிலைக்கு 'ஊருணி' என்று பெயர். அடியிலிருந்து நீர் வருவது 'ஊற்று'. எப்போதும் பொசிந்து வாய்க்காலில் ஓடும் நீர்நிலை 'ஓடை'. செரளை நிலத்தில் அகச்சுவர் கட்டிய கிணறு 'கட்டுக்கிணறு'.

பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கும் பெயர் 'கம்வாய்'. இதுவே பின்னாளில் 'கண்மாய்' என்று திரிந்தது.

பாசன நீர்த்தேக்கம் உடைப்பெடுக்காமல் உறுதியாக கட்டப்படும் அமைப்பு 'கலிங்கு'. நீர் ஓடும் வழி 'கால்வாய்'. பெருங்குட்டைக்கு 'குட்டம்', சிறிய குட்டம் 'குட்டை', குளிக்கும் சிறிய நீர்நிலை 'குண்டம்', குளிப்பதற்கேற்ற சிறுகுளம் 'குண்டு'. குடைக்கிணறுக்குப் பெயர் 'குமிழி', ஆர்ட்டீசியன் கிணற்றுக்குப் பெயர் 'குமிழி ஊற்று'. ஓர் ஒழுங்கில் அமையாத கிணறு 'கூவம்'. ஆழமற்ற கிணறு 'கூவல்', பெருங்கிணறு 'கேணி'. தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை 'சிறை',

மலையில் இயற்கையாய் அமைந்த நீர்நிலை 'சுனை', 'பாசிக்கொடி' மண்டிய குளம் 'சேங்கை', தொண்டை மண்டலத்தை ஒட்டிய பகுதியில் ஏரிக்குப் பெயர் 'தாங்கல்', கோயில் அருகே உள்ள நீராடும் குளம் 'திருக்குளம்', தெப்பம் சுற்றிவரும் குளம் 'தெப்பக்குளம்', மையமண்டபத்துடன் கூடிய பெருங்குளம் நீராவி, தாமரை முதலிய நீர்த்தாவரங்கள் மண்டிக்கிடக்கும் இயற்கை நீர்நிலை 'பொய்கை', ஆற்றிடையே உள்ள அபாயமான பள்ளம் 'மடு'. ஒரு கண்ணே உள்ள சிறு மதகு 'மடை'. ஆற்று நீர் அல்லது ஊற்று நீர் நிரம்பி மிகைநீர் வெளிச்செல்லும் அமைப்பு 'வாவி'.

இப்படி ஐம்பதுக்கும் மேற்பட்ட பெயர்களை நீர்நிலைக்கு தமிழர்கள் சூட்டியிருந்தார்கள். இது அக்காலத்தில் மழை நீரை எவ்வளவு நுட்பமாக சேமித்து வறண்ட காலங்களுக்கும் பயன்படுத்தினார்கள் என்பதை நாம் உணர வழிவகுக்கிறது.

மழையை வரவேற்று நீரை சேமித்து, குளங்கள், நீர் நிலைகள், கிணறுகள் போன்ற அமைப்புகளில் நீர் மட்டத்தை உயர்த்துவதே இன்றைய தலையாய கடமை என்பதை உணரச்செய்து நீர் மேலாண்மைக்காக பெரிதும் பாடுபடுவதற்கு முனைந்துள்ளது பொதுப்பணி நீர் ஆதாரத்துறை.

"சோழ வளநாடு சோறுடைத்து

சோற்றால் மடையடைக்கும் சோழ வளநாடு"

இச்சோழ நாட்டின் வளத்திற்கு முழு முதற் காரணம் காவேரி. இன்று தாய் காவேரியின் முகம் சில காலம் காணாமல் சேய்கள் வாடும் நிலை, வருந்தும் நிலை ஏற்படுகிறது.

50 ஆண்டு கால சட்டப்போராட்டத்திற்கு பின் சத்தியத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களின் அரும்பாட்டிற்கு பின் விடிவு பிறந்தது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கருநாடகா அரசு வழங்கிட வழி வகுத்தது.

தமிழ்நாட்டில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 89 அணைகளில் 229.485 டி.எம்.சி கொள்ளவு கொண்ட 85 அணைகள் பாசனத்திற்காகவும் மற்றும் 11.057 டி.எம்.சி கொள்ளவு கொண்ட 4 நீர்தேக்கங்கள் / ஏரிகள் சென்னை மாநகர் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் 38 அணைகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள 39 ஆயிரத்து 202 ஏரிகளில் 14 ஆயிரத்து 98 ஏரிகள் நீர்வள ஆதாரத்துறையின் பராமரிப்பிலுள்ளன. இவற்றுள் 7 ஆயிரத்து 138 ஏரிகள் பாசன முறை சார்ந்தவை. 6 ஆயிரத்து 938 ஏரிகள் பாசன முறை சாராத (மானாவாரி) ஏரிகள் ஆகும்.

மொத்தமுள்ள 106 பாசன அமைப்புகள் மூலம் 14 இலட்சத்து 44 ஆயிரத்து 181 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறுகிறது. மானாவாரி ஏரிகளினால் 5 இலட்சத்து 77 ஆயிரத்து 461 எக்டேர் பயன்பெறுகிறது. ஆக மொத்தமாக 20 இலட்சத்து 21 ஆயிரத்து 642 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி பெறுகிறது.

கிடைக்கப்பெறும் நீர்வளத்தை நீர்நிலைகளில் பாதுகாத்து உரிய முறையில் பயன்படுத்திடத்தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு பின்வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

குடிமராமத்துப் பணிகள்

பழங்காலம் முதல் நம் நாட்டில் நீர் மேலாண்மை சிறப்பாக நடந்துள்ளது. நீர்நிலைகளை அமைத்தல், மழைநீரைச் சேகரித்தல், நிலத்தடி நீரை அதிகப்படுத்துதல், தடுப்பு அணைகள் அமைத்தல், ஒவ்வொரு சொட்டு நீரையும் முறையாகப் பயன்படுத்துதல் போன்ற கூறுகளை தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன.

பிட்டுக்கு மண் சுமந்த கதையில், குடிமராமத்து முறை தொன்றுதொட்டு இருந்ததை உணர்கிறோம். நீர்நிலைகளை மீட்டெடுத்து, பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர்நிலைகளைப் புனரமைக்கும் பொருட்டு பண்டைய குடிமராமத்து பணிகளுக்கு புத்துயிர் அளிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு தீர்மானித்தது.

குடிமராமத்துத் திட்டம் 2016–2017இல் துவக்கப்பட்டு 30 மாவட்டங்களில் இதுவரை 1,513 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2017–2018ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் 1,511 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 1,406 முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2019–2020ஆம் ஆண்டு குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்ள 29 மாவட்டங்களில் 499 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,829 பணிகளை மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகளை துவங்குவதற்கு பாசன சங்கங்களுடன் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

அணைகளை பலப்படுத்தி பராமரிப்பதற்காக உலகவங்கி நிதியுதவியுடன் 803 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டில், அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கத்திலுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், மொத்தமுள்ள 69 அணைகளுக்கும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 67 அணைகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (கண்காணிப்பு உபகரணங்கள் பொருத்துதல் பணிகள் தவிர) பேச்சிப்பாறை மற்றும் மணிமுத்தாறு அணைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அணைகளில்படிந்துள்ளமண் அளவுகளின் ஆய்வுமேற்கொள்ளும் பொருட்டு 56 அணைகளுக்கு 3.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 42 அணைகளில் ஆய்வு முடிக்கப்பட்டு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அணைகளில் ஆய்வுகள் முடிக்கப்பட்டு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தில், நீர்வள ஆதாரத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் மற்றும் வேளாண்பொறியியல் துறை பங்கேற்கின்றன.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தலை மதகுகளுடன் கூடிய புதிய கதவணை

கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களின் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 428 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கதவணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்தினால் 26 ஆயிரத்து 810 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யப்படுவதுடன், 4 ஆயிரத்து 411 ஏக்கர் நிலங்கள் நிலத்தடி நீர்ச்செறிவூட்டல் மூலம் பயன் பெறும்.

ஒரு வருடத்திற்கு 4 நிரப்புதலின் அடிப்படையில் 1.336 டி.எம்.சி. அடி நீர் உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கதவணையினால் சேமிக்கப்படும் நீரின் மூலம் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 31 ஆயிரத்து 221 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும். இத்திட்டத்தினால் சேமிக்கப்படும் நீர் வீராணம் ஏரிக்கு கொண்டுசெல்லப்பட்டு சென்னை மாநகர குடிநீர் தேவைக்கு பயன்படும். இத்திட்டத்தில் அமைக்கப்படும் பாலம் கொள்ளிடம் ஆற்றின் கதவணையின் இருபுறங்களில் உள்ள கிராமங்களுக்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தும். 84.72 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 12.898 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்திக்கடவு – அவிநாசி திட்டம்

கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் நீண்டகால கனவுத்திட்டமான அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டமாக 1,652 கோடி ரூபாய்க்கு மாநில நிதியின் கீழ், DBOT அடிப்படையில் செயல்படுத்த அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளுக்கும் நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கும் பாசன வசதி அளிப்பதுடன் 32 பொதுப்பணித்துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய குளங்கள் மற்றும் 971 கசிவு நீர் குட்டைகள் ஆகியவற்றின் 24 ஆயிரத்து 468 ஏக்கர் பாசன பரப்பு பயன்பெறும்.

மேலும், இத்திட்டத்தில் மின்சார பயனீட்டின் செலவை எதிர்கொள்ள, 132 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 மெகாவாட் சூரிய ஒளி மின்திட்டத்தின் கருத்துருவிற்கு நபார்டு (NABARD) நிதியுதவி பெற திட்டமிடப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், முக்கொம்பு – புதிய நீரொழுங்கி அமைத்தல் மற்றும் தற்போதைய நீரொழுங்கியை பலப்படுத்துதல்

திருச்சிராப்பள்ளிமாவட்டம், வாத்தலை மற்றும் எலமனூர் கிராமங்களுக்கு இடையே உள்ள முக்கொம்பு என்றழைக்கப்படுகின்ற மேலணை, காவேரி ஆற்றினை இரண்டாக பிரித்து தண்ணீரை பாசனத்திற்காக காவேரி ஆற்றிலும், வெள்ளநீரை கொள்ளிடம் வழியாகவும் வெளியேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டுமானமாகும். கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணையானது சர் ஆர்தர் தாமஸ் காட்டன் அவர்களால் 1836 இல் கட்டப்பட்டது. வெள்ளத்தினை திறன்பட கையாளும் பொருட்டு 1902ஆம் ஆண்டில் மேலணை அணைக்கட்டு நீரொழுங்கியாக மாற்றப்பட்டது.

2018ஆம் ஆண்டு, தென்மேற்கு பருவமழை காரணமாக கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களில் கடுமையான மழை பெய்ததன் காரணமாக மேட்டூர் அணை 23.07.2018 அன்று முழுமையான கொள்ளளவை எட்டியது. மேலும் அதிகளவில் பெறப்பட்ட நீர்வரத்து காரணமாக உபரி நீர் 23.07.2018 முதல் 01.08.2018 வரை மற்றும் 11.08.2018 முதல் 25.08.2018 வரை தொடர்ச்சியாக திறந்துவிடப்பட்டது. இது வரலாற்றில் மிக நீண்ட வெள்ளப்பெருக்கு காலமாகும். 22.08.2018 அன்று மேலணையின் தெற்கு கொள்ளிடம் பகுதியில் அமைந்திருந்த மதகு எண் 6 முதல் 14 வரை உள்ள கட்டுமானங்கள் ஒவ்வொன்றாக தொடர்ச்சியாக கீழே விழுந்தன. பின்னர் தற்காலிக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு காவேரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் உறுதி செய்யப்பட்டது.

தற்போதைய நீரொழுங்கியை பலப்படுத்துதல்

புதிய கதவணையின் கட்டுமானத்திற்கு 18 முதல் 24 மாதங்கள் தேவைப்படும் என்பதால், புதிய கதவணை முழுசெயலாக்கத்திற்கு வரும் வரை, அடுத்து வெள்ளம் ஏற்படுமேயானால் அதனை எதிர்கொள்ள மேலணையில் உள்ள தெற்கு கொள்ளிடம் கதவணையில் கீழ்ப்புறம் கூடுதல் கசிவில்லா தடுப்புச்சுவர் (Cutoff wall) மற்றும் காப்பணை அமைத்து பலப்படுத்தும் பொருட்டு அரசு 38.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மேலும் கீழ்ப்பகுதியில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஒரு புதிய நீரொழுங்கி 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது.

புதிய நீரொழுங்கி கட்டுவதன் மூலம் நான்கு முக்கிய டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 12 இலட்சத்து ஓராயிரத்து

507 ஏக்கர் பாசன பரப்பு பயனடையும். இதனுடன் புள்ளம்பாடி, பெருவளை மற்றும் அய்யன் வாய்க்கால்கள் மூலமாக திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களிலுள்ள 56 ஆயிரத்து 953 ஏக்கர் பாசன பரப்பு பயனடையும். மொத்தமாக 12 இலட்சத்து 58 ஆயிரத்து 460 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும். இந்த நீரொழுங்கி வெள்ளத்தணிப்பானாகவும் செயல்பட்டு திருச்சிராப்பள்ளி மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இரண்டு முக்கியமான நகரங்களை வெள்ள அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீர் நதியாக ஓடுகிறது, அருவியாகக் குதிக்கிறது, பனியாக பெய்கிறது, குளமாகத் தேங்குகிறது, மழையாக விழுகிறது, கடலாக சங்கமமாகிறது.

அரசுத் திட்டங்களும் ஆடுதாண்டும் காவேரியாகத் தொடங்கி மக்களை அடையும்போது ஆழ்கடலைப்போல பரந்து விரிந்து நன்மைபயக்க வேண்டும் என்பதே புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்த ஆட்சியின் நோக்கம்.

அந்த வகையில் மக்கள் நலனுக்காக,

1. பாசன வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் மூலம் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளை புணரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஏரியின் நீர் பரப்பு பகுதியில் செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகளை அமைத்தல் காவேரி கழிமுகப்பகுதி மற்றும் உப வடி நிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2. பெரம்பலூர் மாவட்டம், மருதையாற்றின் குறுக்கே 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.

3. சென்னை மாநகரத்திற்கு குடிநீர் வழங்க திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமத்தில், தேர்வாய்கண்டிகை ஏரி கட்டுமானப்பணி விரைவில் நிறைவு பெறவுள்ளது. இந்தாண்டு பருவமழை நீரைத் தேக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. மேலும் பல்வேறு மாவட்டங்களில் புதிய தடுப்பணைகள், படுகை அணைகள், தளமட்டச் சுவர்கள், அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகள் புணரமைத்தல், கடலோர பாதுகாப்புப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு அவை துரிதமாக நடைபெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும்
நீர் முறைபடுத்தும் குழு அமைப்புகள்

வரலாற்று சிறப்பு மிக்க காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் நீர் முறைபடுத்தும் குழு அமைப்புகள் மத்திய அரசிதழில் 01.06.2018 அன்று வெளியிடப்பட்டது. காவேரி நீர் மேலாண்மை ஆணையம் இதுவரை 4 கூட்டங்களை நடத்தியுள்ளது. காவேரி நீர் முறைப்படுத்தும் குழு 9 முறை கூடியுள்ளது. இக்கூட்டங்களில் தமிழ்நாட்டின் கருத்துக்கள் வலிமையாக எடுத்துரைக்கப்பட்டன.

முல்லைப் பெரியாறு அணை

அணையின் நீர்மட்டத்தை முழுக்கொள்ளளவான 152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதானப் பணிகள் முடிவடைந்தன. எஞ்சிய பணிகள் மற்றும் துண்டிக்கப்பட்ட மின்சாரம் வழங்குதல் போன்றவை கேரள அரசு தாமதிப்பதால் மற்றும் முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பரப்பு பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும் வாகன நிறுத்தத்திற்கான பணிகள் தொடங்கியதால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நிலுவையில் உள்ளன.

ஆந்திரப்பிரதேச அரசு பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை மற்றும் கட்டப்பட்ட தடுப்பணைகளின் உயரத்தை உயர்த்தியதற்கும் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உரிய நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தண்ணீர் நமக்குக்கற்று தருகிற ஆசான். நீருக்கென்று வடிவமில்லை. அது பாத்திரத்திற்கு ஏற்ப வடிவத்தைக் கொள்கிறது.

மக்களின் தேவைக்கேற்ப திட்டங்களைத் தீட்டி பாத்திரத்திற்கேற்ப வடிவெடுக்கும் நீர் போன்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அவரது பெருமை இன்றும் நிலைத்து நிற்கிறது.

அவரிடத்தில் பாடம் பயின்றதால்,

1. மகாநதி – கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – பாலாறு – காவேரி – வைகை – குண்டாறு மற்றும் பம்பா – அச்சன்கோவில் – வைப்பாறு நதிகளை இணைக்கும் திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2. கோதாவரி (ஈச்சம்பள்ளி / ஜனம்பேட்) – காவேரி (கல்லணை) இணைப்பிற்கான வரைவு விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசிற்கு அனுப்பி வைத்து அதன் மீது கருத்துக்களை கேட்டுள்ளது. இந்த வரைவுத் திட்ட அறிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்களான,

1. தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிகள் இணைப்பு திட்டம்,

2. காவேரி – அக்னியாறு – தெற்கு வெள்ளாறு – மணிமுத்தாறு – வைகை – குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டம்,

3. பெண்ணையாறு (சாத்தனூர் அணை) – செய்யாறு இணைப்பு திட்டம்,

4. பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு) – பாலாறு இணைப்பு திட்டம்,

5. காவேரி (மேட்டூர் அணை) – சரபங்கா – திருமணிமுத்தாறு – அய்யாறு இணைப்பு திட்டம்,

ஆகிய திட்டங்களுக்கு விரிவான நில அளவைகள், மட்ட அளவுகள், எடுக்கும் பணிகள், மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க இந்த அரசு முனைந்துள்ளது.

பொதுப்பணிக் கட்டடம்

பொதுப்பணிக்கட்டட துறையின் மூலம் அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப இன்றைய தொழில்நுட்பத்துடன் கலைநயமிக்க கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பழமையான, புராதான கட்டடங்களை பாதுகாக்கும் விதமாக அதன் தன்மை மாறா வண்ணம் புணரமைக்கும் பணியையும் மேற்கொள்கிறது. பொதுப்பணி கட்டடத் துறை அந்த வகையில் சென்னை மாநகர் சேப்பாக்கத்தில் அமைந்துள்ள ஹுமாயுன் மஹால், சென்னை உயர்நீதிமன்றம் போன்ற கட்டடங்கள் புணரமைக்கப்படுகிறது.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு நினைவு வளைவு குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தை மிக பிரமாண்டமாக வியக்கும் வண்ணம் சிறப்பு மிக்க வடிவமைப்புடன் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வருகிற டிசம்பர் 2019க்குள் கட்டி முடிக்கப்படும்.

கரூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா கட்டடம் சென்னை DPI வளாகத்தில் கட்டும் பணி சிறப்பாக கட்டப்பட்டு வருகிறது.

2011ஆம் ஆண்டுமுதல் நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கையினையும், 2016 முதல் பொதுப்பணித்துறையின் மானியக் கோரிக்கையினையும் இந்த அவையில் நான் அமைச்சராகவும், முதலமைச்சராகவும் தொடர்ந்து தாக்கல் செய்து வருவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இரு துறைகளிலும் மக்கள் நல பணியில் நல்ல திட்டங்களை செயல்படுத்துபவர்கள் பொறியாளர்கள் மற்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது ஏனைய பணியாளர்கள்.

நெடுஞ்சாலைத்துறை அறிவிப்புகள்

1. சென்னைப் பெருநகர பகுதியில் 9 இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு, பாலங்கள் கட்டவும் மற்றும் ஒரு இணைப்பு சாலை அமைக்கவும், ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை ரூ.2.35 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை பெருநகர பகுதியில் (i) ஹால்டா சந்திப்பு முதல் அடையார், பசுமை வழிச்சாலை மற்றும் சாந்தோம் நெடுஞ்சாலை வழியாக கலங்கரை விளக்கம் வரை, (ii) வடபழனியிலிருந்து போரூர் வரை (iii) சின்னமலை முதல் வேளச்சேரி புறவழிச்சாலை வரை, (iv) அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் சந்திப்பு, (v) வால்டாக்ஸ் சாலையில் பேசின் பால சந்திப்பு, (vi) அம்பேத்கர் கல்லூரி அருகில் வியாசர்பாடி சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் மற்றும் அடையாரில் உள்ள திரு.வி.க.பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாற்றை ஒட்டி புதிய இணைப்பு சாலை அமைக்கவும் விரிவான சாத்தியகூறு அறிக்கை ரூ.1.70 கோடியில் தயாரிக்கப்படும்.

திருமங்கலம் – முகப்பேர் சாலையில் உள்ள DAV பள்ளி மற்றும் வேலம்மாள் பள்ளி அருகில் நடைமேம்பாலம் அமைக்கவும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து பணிமனை அருகில்

சாலை மேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை ரூ.65 இலட்சத்தில் தயாரிக்கப்படும்.

2. 9 மாவட்டங்களில், 32 இடங்களில் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு ரூ.3.50 கோடி செலவில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவண்ணாமலை மாவட்டத்தில் சித்தாத்தூர், விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் மற்றும் தாயனூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பாலக்கொல்லை மற்றும் கு.கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் கீழ்பெரம்பலூர், ஈரோடு மாவட்டத்தில் பவானி மற்றும் கீழ் பவானி வாய்க்கால் பகுதியில் 9 பழமையான பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் 9 தரைப்பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், சேலம் மாவட்டத்தில் தேடாவூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காளியப்ப கவுண்டன்புதூர், திருச்சிமாவட்டத்தில் இ.புதூர், ஓமந்தூர் மற்றும் எடையாத்துமங்கலம், கிளிக்கூடு கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம், புதுகோட்டை மாவட்டத்தில் கீழ்குடி மற்றும் பெருமருதூர் கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்பெரம்பூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள 32 ஆற்று பாலங்களை புதுப்பித்து கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.3.50 கோடியில் தயாரிக்கப்படும்.

3. இரயில்வே மேம்பாலங்கள் 3 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.1.08 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 3 இரயில்வே மேம்பாலங்கள் புதிதாக கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.1.08 கோடியில் தயாரிக்கப்படும்.

4. சாலை மேம்பாலங்கள் 7 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை, கிருஷ்ணகிரிமாவட்டத்தில் ஒசூர் உள்வட்ட சாலை, ஈரோடுமாவட்டத்தில் எஸ்.எஸ்.வி.என்.பள்ளி முதல் சுவஸ்திக்கார்னர் வரை, தேனி மாவட்டத்தில் நேரு சிலை, திருப்பூர் மாவட்டத்தில் சந்தை பேட்டை, மதுரை மாநகரில் மாட்டு தாவணி பேருந்து நிலையம் மற்றும் அண்ணா பேருந்து நிலையம் ஆகிய 7 இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைக்க சாலை மேம்பாலங்கள் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

5. புறவழிச்சாலைகள் 10 நகரங்களில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், விழுப்புரம் மாவட்டத்தில் அவலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டத்தில் விருதாச்சலம், தர்மபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டாபுரம், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், திருச்சி மாவட்டத்தில் துறையூர் (பகுதி–3), தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய 10 நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

6. ரூ.155.80 கோடி மதிப்பில் 42 இடங்களில் ஆற்றுப்பாலங்கள் கட்டப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 17 மாவட்டங்களில் உள்ள 379 கிராமங்களில் வசிக்கும் 9,59,356 மக்கள் பயனடையும் வகையில், ரூ.155.80 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 42 ஆற்றுப்பாலங்கள் கட்டப்படும்.

7. 1,456 கி.மீ நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 1,456 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்து மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

8. சென்னை பெருநகர பகுதியில் 2 சாலைப்பணிகள் மற்றும் 2 மேம்பாலங்கள் ரூ.409 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் திருவான்மியூர் லேட்டிஸ் பால சாலை சந்திக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டும் பணி, கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழித்தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை பணி ஆகியவை ரூ.299 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் சென்னை இராஜீவ் காந்தி சாலையில் டைடல் பார்க் சந்திப்பில் இரண்டு "ரு" வடிவ மேம்பாலங்கள் ரூ.110 கோடி மதிப்பில் கட்டப்படும்.

9. சென்னை பெருநகர பகுதியில் 13 மேம்பாலங்கள் 2 இரயில்வே பாலங்கள் 2 நடை மேம்பாலங்கள் மற்றும் 1 ஆற்றுப்பாலம் ஆகிய 18 பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.1,122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை பெருநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் காட்டுபாக்கம், அக்கரை, அம்பத்தூர், ஆவடி, மாதவரம், இராமாபுரம், குன்றத்தூர், கைவேலி, சேலையூர், கொரட்டூர், வடபழனி – P.T. ராஜன் சாலை சந்திப்பு, மத்தியகைலாஷ் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய 13 இடங்களில் சாலை மேம்பாலம், பாடி குப்பத்தில் ஒரு உயர்மட்ட பாலம், கேந்திரிய வித்தியாலயா (FOB) மற்றும் தாம்பரத்தில் உயர்மட்ட நடைபாதை (Sky walk), கொரட்டூரில் ஒரு

இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல் மற்றும் அம்பத்தூரில் இரயில்வே மேம்பாலம் ஆகிய பணிகள் சென்னை போக்குவரத்து நெரிசலை குறைக்கும் திட்டத்தில் (Chennai City Traffic Decongestion Project (CCTDP) புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் முதற்கட்டமாக ரூ.1.122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

10. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலைகள் பராமரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலைகளை நல்லமுறையில் பராமரிப்பதற்காக செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் பராமரிக்கப்படும்.

11. பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு செல்லும் சாலைகளில் ரூ.58.50 கோடி மதிப்பில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பயன்படும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இக்கோயிலுக்கு செல்லும் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.58.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

12. சாலைப் பாதுகாப்பு பணிகள் ரூ.300 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு (CRIDP)

திட்டத்தில் ரூ.200 கோடி மதிப்பிலும், சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து ரூ.100 கோடி மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ.300 கோடி மதிப்பிலான சாலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. அலுவலகக் கட்டடங்கள் மற்றும் அலுவலக குடியிருப்புகள் ரூ.26.50 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்காக திருவாரூர் கோட்ட அலுவலகம், திருத்துறைபூண்டி, குடவாசல், முசிறி, லால்குடி, அரியலூர், பாபநாசம், திருவிடைமருதூர், சீர்காழி, நம்பியூர், மடத்துக்குளம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய இடங்களில் 12 உட்கோட்ட அலுவலக கட்டடங்கள், தரங்கம்பட்டியில் பிரிவு அலுவலகம் மற்றும் சேலம் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகுக்கு வட்டம் மற்றும் கோட்ட அலுவலகம் ஆகிய 16 கட்டடப்பணிகள் ரூ.4.60 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட சாலைத்திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகம் ஆகிய அலுவலகங்களுக்கு சென்னையில் ரூ.13 கோடி மதிப்பில் அலுவலகக் கட்டடம் மற்றும் ரூ.8.90 கோடி மதிப்பில் ஒரு தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு சென்னையில் 14 எண்ணிக்கையிலான குடியிருப்பு கட்டடங்கள் கட்டப்படும். மேலும் மழைநீர் வடிகால் சேகரிப்பு மற்றும் கழிவு நீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

14. தரக்கட்டுபாட்டு உட்கோட்டங்களுக்கு 42 வாகனங்கள் வாங்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலை மற்றும் பாலப்பணிகளின் தரத்தை ஆய்வு செய்வதற்காக 42 தரக்கட்டுப்பாட்டு உட்கோட்டங்களுக்கு ஈப்புகள் ரூ.3.90 கோடியில் வாங்கப்படும்

15. நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதற்கு 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி நிலையத்தில், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக பயிற்சிகள் அளிப்பதற்கு 26 பதவிகளில் 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

பொதுப்பணித்துறை அறிவிப்புகள்

1. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக் குறிச்சி கிராமத்தில் எலுமிச்சையாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்க கட்டுமானப் பணிகள் ரூ.110 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் சொக்கனூர் அக்ரஹாரம் கிராமத்தில் பொன்னி ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி ரூ.27 கோடி மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தமங்கலம் கிராமத்தில் ஒரு கசிவு நீர் குட்டை அமைக்கும் பணி ரூ.42 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

2. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னம்பட்டிணம் கிராமத்தில் திருவாலி ஏரியின் உபரி நீர் வழிந்தோடியான நாட்டுக்கண்ணி மண்ணியாற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சை புகலூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி ரூ.495 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

3. நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், பொடங்கம் கிராமத்தில் புல எண். 31 இல் வரட்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், செவ்வூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 8 கோடியே 50 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், சூடியூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வி.களத்தூர் கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பாண்டகப்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், வெங்களத்தூர் கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும்பணி ரூ.27 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடுமாவட்டம், பவானி வட்டம், ஜம்பை ‘அ’ கிராமம் க.ச. எண். 962/1இல் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.18 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டைமேடு கிராமத்தில்உள்ளஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும்பணி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடலூர்மாவட்டம், வேப்பூர் வட்டம், கொளப்பாக்கம் மற்றும் சேப்பாக்கம் கிராமங்களுக்கு அருகே கோமுகி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடலூர்மாவட்டம், விருத்தாசலம் வட்டம், பூதாமூர் அருகே மணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரைமாவட்டம், திருமங்கலம் வட்டம், சாத்தன்குடி கிராமத்தில் தெற்காற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திரளி கிராமத்தில் கவுண்டா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டைமாவட்டம், விராலிமலை வட்டம், மதயானைப்பட்டி கிராமத்தில் பேராம்பூர் வாரியின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து ஆவூர் கண்மாய்க்கு நீர் வழங்கும் பணி 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்த அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்து வடக்கலூர் அக்ரஹாரம் ஏரிக்கு நீர் வழங்கும் பணி 6 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மருதேரி கிராமம், அகரம் – மருதேரி பாலத்தின் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே படுகை அணை அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒட்டியம்பாக்கம் கிராமத்தில், மதுரப்பாக்கம் ஓடையின் குறுக்கே வெள்ளக்கட்டுப்பாட்டு மதகு மற்றும் படுகை அணை கட்டும் பணி 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

4. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கேசர்குலிஅல்லா அணையிலிருந்து வெள்ளக்காலங்களில் வெளியேறும் உபரி நீரை அணையின் இடது புறக் கால்வாயின் நெடுகை 5.275 கி.மீ இல் புதிய பிரிவுக் கால்வாய் அமைத்து கோட்டூர் ஜெர்தலாவ் ஏரி, திருமல்வாடி ஏரி மற்றும் தாசன் ஏரி ஆகிய 3 ஏரிகளுக்கு வழங்கும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டம், தெற்குநாடு கிராமம் கைகாண்வளவு காட்டாற்றிலிருந்து உபரி நீரை, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டம், கரியகோயில் நீர்தேக்கத்திற்கு திருப்பும்பணி 7 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் பணி ரூ.565 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம் வரட்டுப்பள்ளம் அணைக்கு மணியாச்சிப் பள்ளத்தின் வெள்ளநீரை கொண்டு செல்லும் திட்டத்திற்கு தொழில்நுட்ப திட்ட அறிக்கைதயாரிக்கும் பணி ரூ.27 இலட்சம் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி கிராமம் வரதமாநதி அணை வெள்ள நீரினை ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி

கருங்குளத்திற்கு கொண்டுசேர்க்கும் பணி ரூ.60 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

5. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் நீட்டிப்பு திட்டத்தில் நெடுகை 7.100 மீட்டரில் புதிய பிரிவுக்கால்வாய் அமைத்து காட்டூர் கிராமத்தில் உள்ள எலங்குட்டை ஏரிக்கு நீர் வழங்கும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் கடனா ஆற்றில் காங்கேயன் அணைக்கட்டின் கீழுள்ள மாறன் குளத்திலிருந்து கல்லூர் குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூ. 1 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஊர்மேலழகியான் கிராமம் வண்ணான்குளம் வழங்கு கால்வாயிலிருந்து கருங்குளத்திற்கு புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூ. 2 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் வடக்குபச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ், 7 குளங்களை சேர்ப்பதற்கு புதிய கால்வாய் அமைக்கும் பணி 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கூடலூர் கிராமத்தில் 18ஆம் கால்வாயில் நெடுகை 0 மீ முதல் 1,250மீ வரை கட் கவர் தளம் அமைக்கும் பணி ரூ.21 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், மலட்டார் ஓடையிலிருந்து அத்திக்கிணறு குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் பணி 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், சாஸ்தாவிநல்லூர் கிராமம் புத்தன் தருவை குளத்திற்கு செல்லும் கால்வாயிலிருந்து சாஸ்தாவிநல்லூர் குளத்திற்கு புதிய கால்வாய்வெட்டி தண்ணீர் வழங்கும் பணி 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், நிலையூர் நீட்டிப்பு திட்டத்தில் சோழங்குருணி கண்மாயிலிருந்து நெடுங்குளம் நெடுஞ்சாலையினை ஒட்டி சிறிய வாய்க்கால் அமைக்கும் பணி 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடையும் வகையில், நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், ஆனங்கூர் கிராமத்தில் இராஜா வாய்க்கால் மைல் **2/3** குறுக்கே பாலம் அமைக்கும் பணி **75** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்கு கரை கால்வாயின் குறுக்கே சரகம் **11.390** கி.மீஇல் பாலம் அமைக்கும் பணி **1** கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும். ஈரோடுமாவட்டம் மற்றும் வட்டம், காலிங்கராயன் வாய்க்கால் மைல் **16** இல் அமைந்துள்ள பாலத்தினை மறுக்கட்டுமானம் செய்யும் பணி **1** கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், வேட்டை பெரியாம்பாளையம் கிராமம் பவானி பகிர்மான வாய்க்கால் மைல் **1–5–300**–ன் குறுக்கே பாலம் அமைக்கும் பணி **1** கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

7. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டைவட்டத்தில், இராஜாமடம்கிராமத்தில் அக்னியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், பொன்னவராயன் கோட்டை கிராமத்தில் நசுவினி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், ஏனாதி கிராமத்தில் மகாராஜசமுத்திரம் ஆற்றின் குறுக்கே விவசாயிகள் இயக்கமும், பராமரிப்பும் செய்யும் வகையில் தடுப்பணையுடன் கூடிய ஒரு நவீன நீரேற்று பாசனத் திட்டமும் ரூ.**32** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

8. கடலரிப்பை தடுக்கும் பொருட்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், இராமேஸ்வரம் வட்டம், சாத்தக்கோன்வலசை கிராமத்தில் சீனியப்பா தர்கா அருகில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் பணி ரூ.**12** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டில் குளவாய் ஏரியினை மீட்டெடுத்து, சென்னையின் நீட்டிக்கப்பட்ட புறநகர் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் திட்டம் ரூ.**90** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

10. திருவாரூர் மாவட்டத்தில், காவேரி மற்றும் வெண்ணாறு ஆற்றில் நிலத்தடி நீர் செறிவூட்டும் **155** ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஏரிகளில் **26** நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்கும் திட்டம் ரூ.**12** கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி, வெண்ணாறு மற்றும் அக்னியாறு ஆகிய ஆறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்டும் **605** ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஏரிகளில் **99** நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்கும் திட்டம் ரூ.**49** கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

11. தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், குமரம்பட்டி கிராமத்தில், குமரம்பட்டி அணைக்கட்டினை புனரமைக்கும் பணி **4** கோடியே **50** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், வடக்கு மலட்டாற்றின் குறுக்கே அமைந்துள்ள பூவரசன்குப்பம் அணைக்கட்டினை புனரமைத்தல் மற்றும் தளவானூர் அணைக்கட்டில் தலை மதகு அமைக்கும் பணி ரூ.**5** கோடி மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், திருத்தலையூர் கிராமம் திருத்தலையூர் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரியினை சீரமைத்து சாலை பாலம் மற்றும் நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி ரூ.**1** கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடி கிராமத்தில் பாம்பனாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மண்கொரம்பினை நிரந்தர கட்டுமானமாக மாற்றி அமைக்கும் பணி, சின்னையம்பேட்டை அணைக்கட்டின் வழங்குக் கால்வாயினை புனரமைக்கும் பணி மற்றும் தானிப்பாடி அணைக்கட்டின் வழங்குகால் வாயினை மேம்படுத்தும் பணி ரூ.**5** கோடி மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வாலி கண்டாபுரம் கிராமத்தில் உள்ள வாலிகண்டாபுரம் அணைக்கட்டினை புனரமைக்கும் பணி ரூ.**80** இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ராஜகிரி கிராமத்தில் குடமுருட்டி ஆற்றில் மைல் **47/6**இல், திருமலைராஜன், குடமுருட்டி நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி

2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஊத்துக்கடவு கிராமத்தில் வெண்ணாறு மைல் 53/3–4இல் ஊத்துக்கடவு நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர்வட்டம், போடிநாயக்கனூர் கிராமம் அணை பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ராஜவாய்க்கால் அணைக்கட்டை புனரமைக்கும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டின் மேல்புறத்தில் குறுக்குச் சுவர் அமைக்கும் பணி மற்றும் கீழ்புறத்தில் உள்ள தண்ணீர் வேகத்தை கட்டுப்படுத்தும் கட்டுமானப் பணி ரூ.4 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரத்திலுள்ள சரபங்கா நதி நெடுகை 42.80 கி.மீ முதல் நெடுகை 43.30 கி.மீ வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரத்திலுள்ள சரபங்கா நதி நெடுகை 43.30 கி.மீ முதல் நெடுகை 43.80 கி.மீ வரை புனரமைத்து மேம்படுத்தும்பணி 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், நந்தன் கால்வாய் நெடுகை 0 கி.மீ முதல் 12.40 கி.மீ வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டம், கீழ்பவானித்திட்ட பிரதான வாய்க்காலின் கூகலூர் பகிர்மான வாய்க்காலின் மைல் 0/0 முதல் கடைமடை வரை புனரமைக்கும் பணி 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் விரிவாக்க கால்வாயின் நெடுகை 0 கி.மீ முதல் 2 கி.மீ வரை உள்ள பகுதிகளை புனரமைக்கும் பணி 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் உடுமலைக் கால்வாயினை நெடுகை 16.600 கி.மீ முதல் 23.170 கி.மீ வரை மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களில் விடுபட்டுள்ள பணிகளை புனரமைக்கும்பணி

3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம் பிரதான கால்வாயின் நெடுகை 36,000 கி.மீ முதல் 39.500 கி.மீ வரை புனரமைக்கும் பணி 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம் திருகண்ணமங்கை வாய்க்காலினை புனரமைக்கும் பணி ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயின் 1ஆவது கிளை வாய்க்கால் புனரமைக்கும் பணி ரூ.7 கோடி மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், நாரணதேரன்பட்டி கிராமத்தில் கேசவபுரம் கண்மாய் வழங்கு கால்வாயினை நெடுகை 1,900 மீ முதல் 2,820 மீ வரை நவீனப்படுத்தும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், தேனி மாவட்டத்தில் உள்ள பி.டி.ராஜன் கால்வாய் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் கிளைக் கால்வாயினை புனரமைக்கும் பணி ரூ.20 கோடி மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், கள்ளரதிணிபட்டி, திருமலை, நாமனூர், மேலபூங்குடி, சாளூர், சோழபுரம், நாலுக்கோட்டை கிராமங்களில் உள்ள சீல்டுகால் கால்வாய் மற்றும் கண்மாய்களை புனரமைக்கும் மற்றும் சீரமைக்கும் பணி ரூ.22 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், அந்தியூர் மற்றும் பவானி வட்டங்களுக்கு உட்பட்ட மேட்டூர் மேற்கு கரை கால்வாய் நெடுகை 19.685 கி.மீ. முதல் 43.200 கி.மீ வரை புனரமைக்கும்பணி (நெருஞ்சிப்பேட்டை முதல் பவானிவரை) ரூ.65 கோடி மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம், துறையூர் மற்றும் முசிறி வட்டம் ரெட்டியாப்பட்டி ஏரி, கரிகாலி ஏரி மற்றும் உத்தாண்டம்பட்டி ஏரிகளை புனரமைக்கும் பணி 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாளையம் கிராமத்தில், விராலிப்பட்டி குக்கிராமத்தில் உள்ள கசிவு நீர் குட்டையை புனரமைக்கும் பணி ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம் ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாயினை நவீனப்படுத்தும் பணி ரூ.19 கோடி மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம்,

மரக்காணம் வட்டம் கழுவேலி ஏரியில் கட்டமைப்பு அமைத்து கழுவேலி ஏரியினை மீட்டெடுத்து, 2 டி.எம்.சி அடி நீரினை தேக்குதல் மற்றும் கடல் நீர் உட்புகுதலை தடுக்கும் பணி ரூ.161 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

12. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்குக்கரை கால்வாய் 0/0இல் பாலம் மற்றும் தலை மதகினை புனரமைக்கும் பணி ரூ.1 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், வடசித்தூர் கிளைக்கால்வாயின் நெடுகை 14.350 கி.மீ, 14.540 கி.மீ, 15.372 கி.மீ மற்றும் 16.106 கி.மீஇல் உள்ள பாலங்களை மறுசீரமைக்கும் பணி 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள பெலான்துறை அணைக்கட்டின் அடைப்பு கதவுகள் மற்றும் அதன் உபகரணங்களை புனரமைக்கும் பணி 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள தொழூர் நீரொழுங்கியின் அடைப்பு கதவுகள் மற்றும் அதன் உபகரணங்களை புனரமைக்கும் பணி 10 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மின்னாத்தூர் பெரியகுளம் உபரி நீர் வாய்க்காலினை தூர்வாரி மின்னாத்தூர் கிராமம் முதல் கந்தர்வக்கோட்டை கிராமம் வரை தடுப்புச் சுவர் கட்டும் பணி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அக்கரை ஜெயங்கொண்டப்பட்டினம் கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி ரூ.15 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

13. திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலைச் சுற்றி உள்ள வையாபுரி மற்றும் சிறுநாயக்கன் குளங்களை புனரமைத்து, நீர்நிலைகளுக்கு வந்து சேரும் கழிவுநீர் கால்வாய்களை புனரமைத்து, 2 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி 51 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

14. கீழ்க்கண்ட புதிய பாசன திட்டங்களுக்கு விரிவான ஆய்வுப்பணிகள்மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம் கோமுகி அணையின் மேல்புறத்தில் கல்படை ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும், பொட்டியம் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும் அமைத்து கூடுதல் நீர்தேக்கம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், அன்றாய நல்லூர் கிராமம் அருகே பெண்ணையாற்றில் வெள்ளக்காலங்களில் வரும் வெள்ள மிகை நீரை பயன்படுத்தி கோரையாறு மற்றும் மலட்டாறு பகுதிகளில் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்திற்கு ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டம், சீர்காழி மற்றும் சிதம்பரம் வட்டம், அளக்குடி மற்றும் திருக்கழிப்பாலை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டு ஒரு தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நில அளவை பணிகள், மண் பரிசோதனை பணிகள் மற்றும் மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டம், கருப்பூர் மற்றும் மாதிரிவேளூர் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.43 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தூத்தூர் கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வாய்க்கை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். கரூர் மாவட்டம்,

மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர்வட்டம், ஒருவந்தூர்கிராமங்களுக்கு இடையே காவேரி ஆற்றின் குறுக்கே நெடுகை 122.24 கி.மீ.இல் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை கிராமம் மற்றும் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி கிராமங்களுக்கு இடையே காவிரி ஆற்றின் குறுக்கே நெடுகை 161.54 கி.மீ.இல் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைகுளம் கிராமத்தில் பழையாற்று நீரை நீரேற்று திட்டம் மூலம் இராதாபுரம் கால்வாய்க்கு கொண்டு செல்லும் திட்டத்திற்கு ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் ஆய்வுபணிகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஞாலம் கிராமத்தில் தடவையாற்றின் குறுக்கே சிறிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் நம்பியாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு கட்டி புதிய கால்வாய் அமைத்து, வெள்ளநீரை குட்டம் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம் இரட்டை குளத்திலிருந்து ஊத்துமலைவரை கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுபணி ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வறண்ட ஒட்டப்பிடாரம் மற்றும் எட்டையாபுரம் பகுதிகளுக்கு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபரணி, கடனாநதி, சிற்றாறு மற்றும்

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள உப்போடை மற்றும் கல்லாறு ஆகியவற்றை இணைத்து வெள்ளநீர் கால்வாய் மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், மருதூர் கீழக்கால்வாய் மற்றும் பேர் புறவழி கால்வாயினைஅகலப்படுத்தி புதிய வெள்ளநீர் கால்வாய் அமைத்து கோரம்பள்ளம் குளம் மற்றும் சாயர்புரம் தேரிப்பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தென் பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணைக்கட்டின் மழைக்கால வெள்ள உபரி நீரை நீரேற்று திட்டத்தின் மூலம் அரூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் மொரப்பூர் வட்டங்களில் உள்ள ஏரிகள் குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள்மேற்கொள்ளப்படும்.

15. பொதுப்பணித் துறையில் பின்வரும் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடயக்குடி கிராமத்தில் ஹோல்ட்ஸ்வர்த் அணைக்கட்டின் பூங்காவினை மேம்படுத்தி இணைப்புக்கட்டடம் கட்டும் பணி ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். சென்னை, பொதுப் பணித்துறையின் மண்தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டத்தின் கீழுள்ள மண்பரிசோதனை ஆய்வகங்களுக்கு உரிய நவீன பரிசோதனை கருவிகள் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். திருச்சி மாவட்டம் மற்றும் வட்டம், திட்ட உருவாக்க வட்ட அலுவலகத்தினை சீரமைக்கும் பணி ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

16. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு அலுவலகங்களுக்கு, ஆய்வகத்துடன் கூடிய கோட்ட அலுவலகக்கட்டடங்கள் கட்டும் பணி மொத்தம் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தரக்கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்களின் ஆய்வகத்திற்காக உபகரணங்கள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

17. சென்னை, அடையாறு, பசுமைவழிச்சாலையில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் குடியிருப்பு மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்பு வளாகங்களில் சுகாதார வசதி, உட்புறச்சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய மேம்பாட்டுப்பணிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

18. சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர்நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் கழிவு நீர்மறு சுழற்சி மற்றும் மறு உபயோகத்திற்கான அமைப்பு ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர்நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் மழைநீர் வடிகால், சேகரிப்பு மற்றும் மேற்பரப்பு வடிகால் அமைப்பு ரூ.70 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

19. மதுரையில் உள்ள பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலைய துணைஇயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலியில் உள்ள மின் கோட்டம் மற்றும் மின் உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல்லில் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், பழனியில் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

20. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செயற் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினத்தில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் குடியிருப்புகள் ரூ.1 கோடி மதிப்பீட்டிலும், திருவாரூரில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் குடியிருப்புகள் ரூ.1 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

❖ ❖ ❖

தபால் துறை தேர்வில் தமிழ் மொழி இடம் பெறுவது குறித்து அளித்த விளக்கம் (15.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்கள் தெளிவாக சொன்னார்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களும் தெளிவாக சொன்னார். இந்த உத்தரவை போட்டது மத்திய அரசாங்கம். மத்திய அரசாங்கத்திலே வாதாடக்கூடிய ஒரு வாய்ப்பை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் தந்திருக்கின்றார்கள். அங்கே வாதாடுவதிலே என்ன தவறு என்று உங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அங்கே அந்தப்பிரச்சினையை எழுப்புகின்ற போது தான், என்ன பதில் கிடைக்கும் என்பது நமக்கு தெளிவாக தெரியும். ஆகவே, தெளிவாக தெரிந்த பிறகு ஒரு முடிவு எடுத்தால் அது சரியாக இருக்கும். அந்த அடிப்படையிலே தான், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அந்த கருத்தை தெரிவித்தார். நீங்கள் ஒரு முடிவோடு வந்திருக்கிறீர்கள். எப்படியாவது இந்த அவையிலிருந்து வெளிநடப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே இருந்தால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. எங்களை பொறுத்தவரைக்கும், உங்களுக்கு என்ன உணர்வு இருக்கின்றதோ, அதே உணர்வு எங்களிடத்தும் இருக்கின்றது. ஆகவே, அந்த உணர்வின் அடிப்படையிலே, நீங்கள் ஒரு காலத்திலே சொன்னீர்கள், 37 பேர் இருந்து என்ன சாதித்தீர்கள் என்று எங்களை கேட்டீர்கள். மத்தியிலே பிரச்சினை வருகின்றபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டீர்களே என்ன சாதனை செய்தீர்கள் என்று கேள்வி எழுப்பினீர்களே, அதே

கேள்வியைத் தான் நாங்களும் எழுப்புகின்றோம். நீங்கள் 37 பேர் வெற்றி பெற்று மக்கள் உங்களை அனுப்பி இருக்கிறார்கள். எதற்காக ? மத்தியிலே ஒரு பிரச்சினை வருகின்றபோது, அந்த பிரச்சினையை நாடாளுமன்றத்திலே எழுப்பி அதை தீர்வு காண்பதற்குத் தான் மக்கள் உங்களை தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, அங்கே குரல் கொடுக்கின்றபோது, நீங்களும் குரல் கொடுங்கள், நாங்களும் குரல் கொடுக்கின்றோம். அப்பொழுது என்ன பதில் வருகின்றது என்பதை தெரிந்து, அதற்கு ஏற்றவாறு நாம் நம்முடைய அவையிலே ஒரு நல்ல முடிவை எடுக்கலாம் என்பதை தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அதில் என்ன வேறுபாடு இருக்கிறது ? ஆகவே, நீங்கள் பொறுக்கமாட்டீர்களா ?

நீங்கள் எப்படி உணர்வுபூர்வமாக இதை அணுகுகின்றீர்களோ, அதே உணர்வுபூர்வமாக நாங்களும் அணுகுகின்றோம். நல்ல தீர்வு காண வேண்டும் என்பதற்காகத்தான், இந்த செய்தியை சொல்லுகின்றேன். ஆகவே, மத்தியிலிருந்து நமக்கு இருக்கின்ற கருத்துக்கு என்ன கருத்து தெரிவித்தார் என்ற அடிப்படையை தெரிந்து, இங்கே அந்த பிரச்சினையை தீர்த்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த கருத்தை தெரிவித்தார். ஆகவே, இதில் உங்களுக்கு என்ன நிலை இருக்கின்றதோ, அதே நிலைப்பாட்டில் நாங்களும் இருக்கின்றோம் என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தேடி, தேடி பார்த்தார்கள், கடைசியில் இதை எடுத்துக்கொண்டு, இதை காரணமாக வைத்து, வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள். ஆகவே, உண்மையிலே உணர்வு பூர்வமாக இதற்கு தீர்வு காண

வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான், நீங்கள் Zero Hour–லே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலே மாண்புமிகு நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக இந்த பதிலை சொன்னார்கள். அதற்கு பிறகு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் தெளிவாக சொன்னார்கள். நானும் தெளிவாக சொல்லி இருக்கின்றேன். இதில் எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. ஆகவே, இன்றைக்கு தமிழிலே தேர்வு எழுதுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, நம்முடைய தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மத்தியிலே இருக்கின்ற காரணத்தினாலே, மத்தியிலே இருக்கின்ற அரசு தான் இந்த உத்தரவை போட்டு இருக்கின்றது. ஆகவே, இந்த உத்தரவை நாம் ரத்து செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே அங்கே குரல் கொடுத்தால்தான் இதற்கு தீர்வு காணப்படும். அந்த அடிப்படையில்தான் நான் சொன்னேன். ஆகவே, இவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த செய்தியை சொல்லி வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள். எங்களை பொறுத்தவரைக்கும், அவர்களுக்கு என்ன உணர்வு இருக்கின்றதோ, அதேபோல 100 மடங்கு உணர்வு எங்கள் பகுதியிலே இருக்கின்றது. ஆகவே, தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற விதத்திலே நாடாளுமன்றத்திலே, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்புவார்கள். இரு அவைகளிலும் குரல் எழுப்புவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இதற்கு ஒரு முடிவு கட்டுகின்ற வரை எங்களுடைய அரசு தொடர்ந்து போராடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

நீர் மேலாண்மை மற்றும் குடிமராமத்துத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (15.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீர் மேலாண்மைத் திட்டத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை காட்டிலும், கூடுதலான நிதியைத்தான் நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம். குறைவான நிதி அல்ல. அதுமட்டுமல்ல, நீர் மேலாண்மையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை என்ற அமைப்பையே நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். ஏன் என்று சொன்னால், இன்றைக்கு தலைமை பொறியாளர்களோ, கண்காணிப்பு பொறியாளர்களோ பார்த்தீர்களானால், மூன்று மாத காலம் அல்லது ஆறு மாத காலம் பதவியில் இருப்பார்கள், பின்னர் ஓய்வு பெற்று விடுவார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கு தெரியும், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தார். மீண்டும் ஒரு தலைமை பொறியாளர் வருவார், ஒரு கண்காணிப்பு பொறியாளர் வருவார். ஆகவே, திட்டங்களை முழுமையாக செயல்படுத்த முடியாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை என்ற தனி அமைப்பை உருவாக்கி, அதற்கென்று திறமையான, இதில் நல்லமுறையிலே பணியாற்றக் கூடிய ஓய்வு பெற்ற பொறியாளர்களை நாங்கள் நியமித்து, அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து, எந்தெந்த பகுதியிலே உபரியாக இருக்கின்ற நீர் வீணாகிறதோ, அதை எல்லாம் ஆய்வு செய்து கண்டறிந்து, அரசுக்கு தகவல் கொடுத்து,

அந்த அடிப்படையிலே அரசு அதனை செயலாக்கம் செய்கிறது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, குடிமராமத்து என்ற திட்டத்தை மாண்புமிகு அம்மாவுடைய அரசு தான் துவக்கி இருக்கிறது. பல ஆண்டுகாலமாக கிட்டத்தட்ட 85 ஆண்டு காலம் நம்முடைய மேட்டூர் அணையில் தூர்வாரப்படாமல் இருந்தது. இப்பொழுது மாண்புமிகு அம்மாவுடைய அரசால் தான் தூர் வாரப்படுகிறது. உடனடியாக அங்குள்ள எல்லா வண்டல் மண்ணையும் அள்ளி, வெளியே எங்கே கொண்டு கொட்டுவீர்கள். நாங்களே அந்த வண்டல் மண்ணை அள்ளிக் கொள்கிறோம். நீங்கள் விலையில்லாமல் கொடுங்கள் என்று அங்கே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் கோரிக்கை வைத்தார்கள். சுமார் 50 மைல் சுற்றளவு உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம், அந்த மேட்டூர் அணையில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக இடுகிறார்கள். என்னுடைய தோட்டத்திற்கு கூட அங்கிருந்து தான் அள்ளிக் கொண்டு வந்தேன். நீங்கள் உடனடியாக ஒரே ஆண்டில் அள்ளிவிட்டால், எங்களுடைய நிலத்தினுடைய இயற்கை வளம் போய்விடும். ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் குறைகின்றபோது நாங்கள் வண்டல் மண்ணை அள்ளிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, நானே நேரடியாக சென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோடு, சட்டமன்ற உறுப்பினர்களோடு, அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாய பெருமக்களோடு அந்தத் திட்டத்தை துவக்கி வைத்தேன். இப்பொழுது அந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கின்ற விவசாய குடிமக்கள் அந்த மேட்டூர் அணையில் படிந்துள்ள வண்டல் மண்ணை அள்ளி தங்கள் விவசாய நிலத்திற்கு இயற்கை உரமாக இடுகின்றார்கள். அதனால் இந்த ஆண்டு நல்ல விளைச்சலும் கிடைத்திருக்கின்றது. இதைத் தொடர்ந்து, விவசாயிகள் வண்டல் மண்ணை அள்ளும் திட்டத்தையும் நாங்கள் துவக்கி வைத்திருக்கின்றோம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிமராமத்து பற்றி சொன்னார்கள். பொதுப்பணித்துறையில் 14,095 ஏரிகள் பராமரிக்கப்படுகிறது. இதில் 100 ஏக்கருக்கு மேல் பாசன பகுதிகள் உள்ள ஏரிகள் அதிகமாக இருக்கிறது. குடிமராமத்துத் திட்டத்தை பொறுத்தவரைக்கும் முதற்கட்டமாக, பரீட்சார்த்த முறையிலே 100 கோடி ரூபாய் செலவில் துவக்கப்பட்டது. இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது? இந்தத் திட்டம் சிறப்பாக இருந்தால், மேலும் விரிவுபடுத்தலாம் என்று கருதி, முதலில் 100 கோடி ரூபாயில் மாண்புமிகு அம்மாவுடைய அரசால் 1,519 ஏரிகள் எடுத்து கொள்ளப்பட்டன. இதில் 1,511 ஏரிகள் இன்றைக்கு பணிகள் நிறைவு பெற்று இருக்கின்றன. அங்கே இருக்கின்ற விவசாயிகளும், பொதுமக்களும், இந்த திட்டம் சிறப்பான திட்டம், இந்த திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டார்கள். முதற்கட்டமாக, இந்தப் பணியை துவக்குகின்றபோது பரீட்சார்த்த முறையிலே ஒரு ஏரிக்கு 5 இலட்சம், 10 இலட்சம் ரூபாய் என்றுதான் ஒதுக்கினோம். ஆனால், அங்கே இருக்கின்ற விவசாயச் சங்கத்தை சேர்ந்தவர்கள், ஆயக்கட்டுகாரர்கள் எல்லாம் இது போதாது, அந்த ஏரிக்கு எவ்வளவு தொகை செலவழிக்கத் தேவையோ, அந்த ஏரியை பராமரிப்பதற்கு, கரைகளை பலப்படுத்துவதற்கு, அதேபோல மதகுகளை சரி செய்வதற்கு, வரத்து வாய்கால்களை சுத்தப்படுத்துவதற்கு உபரிநீர் வெளியேறக்கூடிய வாய்க்கால்களை சுத்தப்படுத்துவதற்கு, இதற்கு போதுமான நிதியை நீங்கள் மதிப்பீடு செய்து, அந்த ஏரிக்கு தேவையான நிதியினை முழுவதும் அளித்தால் இந்த குடிமராமத்துத் திட்டம் சிறப்பாக இருக்கும் என்று அந்த விவசாய சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மாவுடைய அரசு மீண்டும் அந்த திட்டத்தை விரிவுபடுத்தியது. அதன் வாயிலாக 328 கோடி ரூபாய் செலவில், 29 மாவட்டங்களில் 2017–2018இல் 1,511 குடிமராமத்து

பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதேபோல, இன்றைக்கு மீண்டும் இந்த குடிமராமத்துத் திட்டத்திற்கு இந்த ஆண்டு கிட்டத்தட்ட 1,829 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. இதற்காக 499.68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இதில் விவசாயச் சங்கத்தை சேர்ந்தவர்கள், ஆயக்கட்டுகாரர்கள் இவர்களை எல்லாம் ஈடுபடுத்தி, அவர்கள் பங்களிப்பாக 10 சதவிகிதம் அளிக்க வேண்டும் அல்லது உழைப்பை கொடுக்க வேண்டும். ஏதாவது ஒரு விதத்தில் 10 சதவிகிதத்தை அளித்தார்களே ஆனால், அவர்களுக்கு, அந்த பாசன சங்கத்திற்கு, குடிமராமத்துத் திட்டப் பணியை அவர்களிடத்திலே ஒப்படைத்து, அந்தப் பணி நிறைவேற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, இத்திட்டத்தில் எங்காவது, ஏதாவது தவறு நடந்தால், அதனை சுட்டிக்காட்டினால், அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும். அதுமட்டுமல்ல, இதை கண்காணிப்பதற்காக, இந்த திட்டம் சிறப்பாக மேலும் நடைபெற வேண்டும் என்பதற்காக, அம்மாவுடைய அரசு நான் முன்பே சொன்னதைப் போல, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் திரு.பாலாஜி அவர்களையும் இதில் நேரடியாக ஈடுபடுத்தி இருக்கின்றோம். மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், ஆங்காங்கே மாவட்டங்களில் நடைபெறுகின்ற குடிமராமத்துப் பணிகளை நேரடியாக பார்வையிட்டு, யாருடைய தலையீடும் இல்லாமல், முழுக்க முழுக்க விவசாயிகளை பயன்படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்களை கேட்டு கொண்டு இருக்கின்றோம். அதுமட்டுமல்ல, மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், செயலாளர் அந்தஸ்து உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்து இந்தப் பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

குடிமராமத்துப் பணிகள் குறித்து அளித்த விளக்கம் (15.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடிமராமத்து பணிகளை மேற்கொள்ள விவசாய சங்கத்தினை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கத்தில் உரிய ஏரியினால் பயனடையும் விவசாயிகள் 51 விழுக்காடு அல்லது அதற்கு மேலாகவோ, உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட விவசாய சங்கத்திற்கு மட்டுமே குடிமராமத்து பணிகள் வழங்க முடியும்.

மேற்கண்டவாறு அமைக்கப்பட்ட விவசாய சங்கங்கள் ஏதாவதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மட்டுமே வங்கி கணக்கினை துவங்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு அமைக் கப்பட்ட விவசாய சங்கத்திற்கு மட்டுமே, நியமன அடிப்படையில் குடிமராமத்துப் பணிகள் உரிய அலுவலர்களால் வழங்கப்படும். அனைத்து விவசாய சங்கங்களும் சங்கப்பதிவு செய்தவுடன், வருமானவரி நிரந்தரக் கணக்கு எண், சரக்கு மற்றும் சேவை வரி (GST) எண்ணை, சரக்கு மற்றும் சேவை வரி தகவு (GST Portal), மாநில வரிகள் துறையின் வாயிலாக பதிவு செய்து பெறவேண்டும்.

- ❖ பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட வேண்டும்.
- ❖ பாசன அமைப்பு முறை மேலாண்மை சட்டம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்கள் ஐந்தரை ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

- ❖ ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பாசன சங்கங்களின் உறுப்பினராக இருந்து தற்போது நிலத்தை விற்று நில உரிமையாளராக இல்லாத பட்சத்தில், சங்கத்தில் உறுப்பினராக தொடர இயலாது.
- ❖ ஏற்கெனவே பாசன சங்கத்திற்காக துவங்கப்பட்ட வங்கிக் கணக்கை தற்போது நடைபெறும் குடிமராமத்துப் பணிகளுக்கு பயன்படுத்தக்கூடாது. குடிமராமத்துப் பணிகளுக்கென்று தனியாக வங்கி கணக்கு துவங்கப்பட வேண்டும்.
- ❖ குடிமராமத்து பணிகளுக்கு நடப்பு விலை விவரப் பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு விலையில் 90 விழுக்காடு தொகை அரசால் வழங்கப்படும்.

விவசாய சங்கங்கள் தங்களுடைய 10 சதவீத பங்களிப்பை பணமாகவோ அல்லது பணியாளர்களாகவோ அல்லது பொருளாகவோ அளிக்க வேண்டும். பணமாக செலுத்தினால் அரசுக் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விவசாய சங்கங்கள் தங்களுடைய 10 சதவீத பங்களிப்பை பணமாக செலுத்தும் பட்சத்தில், அரசால் வழங்கப்படும் 15 விழுக்காடு முன்பணத் தொகையானது அரசாணை எண். 283, பொதுப்பணி (டபிள்யு2) துறை, நாள் 29.10.2018 இன் படி, விவசாய சங்கங்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

விவசாய சங்கத்தினர் தங்களுடைய 10 சதவீத பங்களிப்பை பொருளாக அளிக்கும் பட்சத்தில், அவர்கள் அளித்த பொருளை மதிப்பீடு செய்து 10 விழுக்காடு பங்கு அரசுக்கு செலுத்தப்பட்டுவிட்டது என்பதை உறுதி செய்தபின், முன்பணமான 15 விழுக்காடு தொகை விவசாய சங்கத்தினர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

விவசாய சங்கத்தினர் தங்களுடைய 10 சதவீத பங்களிப்பை பணியாளர்களாக அளிப்பதாக இருந்தால், மதிப்பீட்டில் 10 விழுக்காடு அளவுக்கு ஈடாக பணியினை விவசாய சங்கங்கள் முடித்ததை உறுதி செய்த பின் முன்பணமான 15 விழுக்காடு தொகை விவசாய சங்கத்தினர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் 15 விழுக்காடு முன்பணமானது மூன்று தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

வேலைகளின் முடிவுத்தன்மைக்கு ஏற்ப பட்டியல் தயாரித்து விவசாய சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும். வேலைகள் முடித்தவுடன் இறுதிப் பட்டியல் தயார் செய்து விவசாய சங்கத்திற்கு பணம் வழங்கப்படும். மேலும் நடைமுறையிலுள்ள முறையான சரக்கு மற்றும் சேவை வரி (GST) தொகையினை, பணிப்பட்டியலில் கீழ்கண்ட விகிதங்களில் பிடித்தம் செய்து விவசாய சங்கங்களின் சரக்கு மற்றும் சேவைவரி கணக்கில் செலுத்தப்படும்.

பணிகளின் தன்மை	**சரக்கு மற்றும் சேவை வரி (GST) பிடிக்கப்பட வேண்டிய விழுக்காடு**
பணியின் மொத்த ஒப்பந்த தொகையில் மண் வேலையின் பங்கு மட்டும் 75 விழுக்காட்டிற்கும் மேலாக இருந்தால்	5 விழுக்காடு
பிற பணியினங்களுக்கு	12 விழுக்காடு

❖ ❖ ❖

உய்யக்கொண்டான் வாய்க்கால் குறித்து அளித்த விளக்கம் (15.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உய்யக்கொண்டான் வாய்க்காலானது திருச்சி மாநகராட்சி பகுதியில் புத்தூர் முதல் திருவரம்பூர் வரை சுமார் 7 கி.மீ. நீளம் 15 மீ. அகலத்தில் பயணிக்கிறது. இந்த மாநகராட்சி பகுதியில் 34 இடங்களில் கழிவுநீர் கலக்கிறது. இதில் முக்கியமாக, கண்டோன்மெண்ட், ஆழ்வார்தோப்பு, பாலக்கரை, எடத்தெரு, வரகனேரி, அரியமங்கலம் மற்றும் திருவெறும்பூர் ஆகியவை கழிவுநீர் கலக்கும் முக்கிய இடங்களாகும்.

திருச்சி மாநகராட்சியின் பாலக்கரை பகுதியில் திட மற்றும் திரவக் கழிவுகள் வாய்க்காலில் கலப்பதை தடுப்பதற்காக 2015–2016ஆம் ஆண்டில் 1,500 மீட்டர் நீளத்திற்கு வாய்க்காலின் இருபுறமும் தடுப்புச்சுவர்கள் மற்றும் கம்பிவேலி அமைக்கும் பணி 11.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பதால் படரும் ஆகாயத்தாமரை மற்றும் செடிகொடிகளை வாய்க்காலில் நீர் விநியோகம் செய்யப்படும்போது செடிகொடிகளின் வளர்ச்சியினை பொறுத்து குறித்த கால இடைவெளியில் (குறைந்தபட்சம் மூன்று முறை) அகற்றப்பட்டு வருகிறது. வாய்க்காலில் படரும் ஆகாயத் தாமரைகளை அகற்றுவதற்காக நடப்பாண்டு ரூ.17.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி மாநகராட்சியின் மூலம் முதற்கட்டமாக AMRUT (அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மாற்றத் திட்டம்) திட்டத்தின் கீழ்

ரூ.344 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சியின் மையப்பகுதி, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் முழுமையாக செயல் வடிவத்திற்கு வரும்பொழுது உய்யக்கொண்டான் வாய்க்காலில் கழிவு நீர் கலப்பது முழுமையாக தடுக்கப்படும்.

திருச்சி மாநகராட்சி பகுதியில் கோரையாறு வடிகால் உய்யக்கொண்டான் ஆற்றில் விழுந்து குடமுருட்டியாக காவேரியில் கலக்கிறது. உய்யக்கொண்டான் வாய்க்காலில் 26ஆவது கி.மீட்டரில் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் தொட்டிப்பாலம் அமைக்கப்பட்டு வெள்ளசேதம் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டதுடன் பாசனத்திற்கு தடையின்றி தண்ணீர் வழங்குவதும் உறுதி செய்யப்பட்டது.

❖ ❖ ❖

ஆழியாறு ஆற்றில் மணக்கடவு வரை மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டி நீரைத் தேக்குவது தொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதான பதில் (17.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, வால்பாறை சட்டமன்றத் தொகுதி மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத்தொகுதிகளில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட நீர்பிடிப்புப் பகுதிகளில் கூடுதலாகப் பெய்யும் மழை நீர் கடலில் கலப்பதை தடுக்கும் விதமாக, மழை நீரை சேமித்து பயன்படுத்தும் வகையில் மேலும் கூடுதலாக தடுப்பணைகள் கட்டுதல் குறித்தான கருத்துருக்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

மேலும், ஆழியாறு ஆற்றில் மணக்கடவு வரை மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டி நீரைத் தேக்குவது தொடர்பான கருத்துருக்கள் கேரளா மாநில அரசோடு பேசி ஒப்புதல் பெறப்பட்டபின் மேல்நடவடிக்கை தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிப்பது குறித்து அளித்த விளக்கம் (17.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது ஒரு முக்கியமான பிரச்சினை. உணர்வுபூர்வமான பிரச்சினை. தமிழ்நாட்டில் இருக்கின்ற மாணவர்களுடைய நலன்கருதி எல்லோரும் ஒருமித்த கருத்தோடு, நாம் இந்த நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். தமிழகத்திலே நீட் தேர்வு இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே தான், நாம் இவ்வளவு வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டு இருக்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அழுத்தம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு முறையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்திக்கின்ற போது Memorandum கொடுத்திருக்கின்றோம். நேரடியாகவும் இதை தெரிவித்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்துவிட்டு வந்த பிறகு, அவரிடத்திலே என்ன Memorandum கொடுத்தோம் என்பதை அதையும் தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் நாங்கள் கொடுத்து இதை அழுத்தம் கொடுத்தோம் என்பதை தெளிவாக சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். எப்பொழுது எல்லாம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைக்கின்றதோ, அப்போது எல்லாம், நீட் தேர்வு தமிழகத்தில் இருக்கக்கூடாது, நீட் தேர்வினால் கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலே நீட் தேர்விற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி கொண்டிருக்கிறோம் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்து

கொள்கிறேன். இப்பொழுதுகூட, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், என்ன காரணம் என்று தெரிந்தால் தான், அதை நிவர்த்தி செய்வதற்கு வழிவகை ஏற்படும். மீண்டும் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்புவோம், எந்த காரணமும் இல்லாமல் இதே மாதிரி ரத்து செய்தால் என்ன செய்ய முடியும். ஆகவே, காரணம் என்னவென்று அவர்கள் தெரிவித்தால் தான், நாம் அந்த காரணத்தை சுட்டிக்காட்டி இந்த மசோதாவை நிறைவேற்றி அனுப்புகிறோம். அதில் ஏதாவது குறைபாடு இருந்தால், அதை சுட்டிக்காட்டி, இன்ன இன்ன குறைபாடுகள் என்று சொன்னால், அதற்கேற்றவாறு மீண்டும் திருத்தம் கொண்டுவந்து மசோதா தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால், இதற்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும். அந்த அடிப்படையிலே தான், அவர் சொல்லுகிறாரே தவிர, இது நீதிமன்றத்திற்கு சென்று விட்டதன் காரணத்தினாலே, நீதிமன்றத்தில் இந்த மசோதா என்ன காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது என்று பதில் இதுவரைக்கும் வரவில்லை. பலமுறை கடிதம் எழுதப்பட்டுவிட்டது. அந்தக் கடிதத்திற்கு இதுவரை மத்திய அரசிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. நீதிமன்றத்திலே அவர்கள் நேற்றைய தினம் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இப்பொழுது மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு, அதற்கும் பதில் வரவில்லை என்றால் சிறப்புக் கூட்டம் கூட ஒன்று கூட்டலாம். ஒன்றும் தவறு கிடையாது. ஆகவே, நம்முடைய மாணவர்களுடைய நலன் மீது உங்களுக்கு எப்படி அக்கறை இருக்கின்றதோ, அதே அக்கறை எங்களிடத்திலும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இது ஒட்டுமொத்த தமிழகத்திலே இருக்கின்ற மாணவர்களுடைய நலன்கருதி எடுக்க வேண்டிய முடிவு என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது தான் நீதிமன்றத்திலே இதை தெரிவித்திருக்கின்றார்கள். நேற்றைய தினம் என்னவென்று தெரிவித்திருக்கின்றார்கள். திருப்பி அனுப்பப்பட்டு இருக்கிறது என்று தான் சொல்லி இருக்கிறார்களே தவிர, என்ன காரணத்திற்காக திருப்பி அனுப்பப்பட்டது என்று இதுவரையிலும் எந்த தகவலும் கிடைக்கவில்லை. ஏன் என்றால் நீதிமன்றத்திலே இப்படிப்பட்ட ஒரு செய்தியை சொல்லி, நீதிமன்றத்தின் வாயிலாக பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்திருக்கிறது. ஆகவே, நீதிமன்றத்திலே வருகின்ற செய்தி என்ன காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டது என்ற விவரத்தை கேட்பதற்கு தான் இந்த விவரத்தை சொன்னேன்.

❖ ❖ ❖

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளையாற்றை சீரமைப்பது குறித்து அளித்த விளக்கம் (17.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆயக்குடி கிராமத்தில், நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பில் உள்ள வெள்ளையாற்றின் கரையில் மக்கள் வசித்து வருகின்றார்கள். இந்த நிலையில், ஆசிய வளர்ச்சி வங்கி மைய திட்டத்தின் மூலம் வெள்ளையாறு சீரமைக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த வெள்ளையாற்றின் கரையில் வசிப்பவர்களை மறுகுடியிருப்பு செய்யும் நோக்கில், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், திட்டாணிமுட்டம் என்ற கிராமத்தில், அரசு புறம்போக்கு நிலத்தில் பொதுப்பணித்துறையின் மூலம், முதல் பகுதியாக 72 குடியிருப்புகளும், இரண்டாம் பகுதியாக 82 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 6 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இந்த நிலையில், ஆயக்குடி கிராமம், அரபாத் நகரில் குடியிருப்பவர்களை பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை மூலம் முறையாக கணக்கீடு செய்து, அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்து, மறுகுடியமர்த்தப்படுவார்கள் என்பதை இந்தப் பேரவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு பாலம் வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அங்கே பாலம் பழுதடைந்திருப்பதாக தெரிவித்திருக்கின்றார்கள், அதையும் அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும். இரயில்வே மேம்பாலத்தை பற்றி சொல்லி இருக்கின்றார்கள். அதையும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றார்கள். இதை அரசு ஆய்வு செய்து பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

காஞ்சிபுரம் ஸ்ரீ அத்திவரதர் வைபவத்திற்கான பாதுகாப்பு மற்றும் பக்தர்கள் வசதிகள் குறித்த நடவடிக்கைகள் பற்றி அளித்த விளக்கம் (18.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில் அத்திவரதரை தரிசிக்க வருகை தருகின்ற பக்தர்களுக்கு தேவையான வசதி குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதைப் பற்றி, இந்த அவையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கேள்விக்கு நான் இங்கே விளக்கம் அளிக்கின்றேன்.

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள அனந்தசரஸ் குளத்திலிருந்து 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை எழுந்தருளும் ஸ்ரீ ஆதி அத்திவரதர், தற்போது 01.07.2019 முதல் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். இந்த வைபவம் 17.8.2019 வரை நடைபெறவுள்ளது.

கலந்தாய்வு கூட்டங்கள்

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்கள் தலைமையிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், தனித்தனியாக 19.04.2019, 04.05.2019, 11.06.2019, 15.06.2019 ஆகிய நாட்களில் முன்னேற்பாடு தொடர்பான கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், 27.06.2019 அன்று தலைமைச்செயலகத்தில் உயர்மட்டக்கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்து துறைகளின் முன்னேற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன.

பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வசதியாக தரிசனம் செய்ய கீழ்க்கண்ட முன்னேற்பாடுகள் அரசால் செய்யப்பட்டுள்ளன.

❖ பொதுமக்களை மழையில் இருந்தும், வெயிலில் இருந்தும் பாதுகாக்க, அவர்கள் வரிசையில் நிற்கும் பகுதிகளில், சுமார் 1,200 மீட்டர் நீளத்திற்கு தற்காலிக நிழற்கூடம் ஏற்படுத்தப்பட்டு, அதில் மின் விளக்குகள், மின் விசிறி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ கோயிலின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் நிரந்தர மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளன.

❖ அதிகரித்து வரும் கூட்டத்தை கருத்தில் கொண்டு, இராஜ கோபுரத்தின் இடப்பகுதியில் அமைந்துள்ள தோட்டப் பகுதியில் சுமார் 8,000 நபர்கள் நின்று செல்லும் வகையில் பிரம்மாண்ட பந்தல் அமைக்கப்பட்டு உள்ளது.

❖ மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் வருவோர் ஆகியோருக்கு தனியே ஒரு சிறப்பு வழி அமைக்கப்பட்டு, அவர்கள் விரைவில் தரிசனம் செய்து வருகின்றனர். அங்கே 150 சக்கர நாற்காலிகள் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

❖ கிழக்கு இராஜ கோபுரம் முதல் பிரகாரம் வரை 8 பேட்டரி கார்கள் மற்றும் 2 மோட்டார் வாகனங்கள் இயக்கப்படுகின்றன.

❖ அர்ச்சனையுடன் கூடிய சிறப்பு தரிசனத்திற்கு இணைய தளம் மூலமாக முன்பதிவு செய்யப்பட்டு, மேற்கு கோபுரம் வழியாக தினமும், காலையில் 1 மணி நேரமும், மாலையில் 1 மணி நேரமும் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள்

❖ இவ்விழாவில் ஸ்ரீஅத்திவரதரை தரிசிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அதிகளவில் பக்தர்கள் தினசரி வருகை புரிந்து வருகின்றனர்.

❖ நாள் ஒன்றுக்கு சுமார் 1 இலட்சம் முதல் 1.50 இலட்சம் பக்தர்கள் வரையும், விடுமுறை நாட்களில் சுமார் 2 இலட்சம் பக்தர்கள் வரையும் ஸ்ரீ அத்திவரதரை தரிசிக்கின்றனர்.

❖ 17.07.2019 அன்று வரை சுமார் 22 இலட்சம் பக்தர்கள் ஸ்ரீ அத்திவரதரை தரிசித்துள்ளனர்.

❖ 18.07.2019 வியாழக்கிழமை அன்று மாலை 4 மணி நிலவரப்படி 1.7 இலட்சம் பக்தர்கள் தரிசனம் செய்திருக்கின்றார்கள். இன்றைய தினம் திருவோணம் நட்சத்திரம் என்ற காரணத்தினாலே அதிகப்படியான பக்தர்கள் இன்றைக்கு சாமி தரிசனம் செய்ய வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு,

❖ இதுவரை, 1,92,982 பேருந்து, வேன், கார் போன்ற வாகனங்கள் மூலம் பக்தர்கள் தரிசனத்திற்கு காஞ்சிபுரம் வந்து சென்றுள்ளனர்.

❖ இவ்விழா சிறப்பாக நடைபெறும் வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளன. அதன்படி, வடக்கு மண்டல காவல்துறைத் தலைவர் அவர்களின் மேற்பார்வையில் ஒரு காவல்துறை துணைத் தலைவர், 7 காவல் கண்காணிப்பாளர்கள், 4 காவல் கூடுதல் கண்காணிப்பாளர்கள், 40 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 98 காவல் ஆய்வாளர்கள், 3,300 காவலர்கள் தினந்தோறும் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

❖ மேலும், அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில் வளாகத்திலேயே ஒரு சிறப்பு காவல் கட்டுப்பாட்டறை, 9 காவல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ 13 கண்காணிப்பு கோபுரங்கள், 27 குற்றத்தடுப்பு பிரிவுகள், வெடிகுண்டு கண்டறிந்து தடுக்கும் 10 குழுக்கள் அமைக்கப்பட்டதுடன், 46 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, 24 மணிநேரமும் கண்காணிக்கப்படுகிறது.

❖ தேசிய சமுதாயப் பணி மாணவர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் பக்தர்களுக்கு குடிநீர் வழங்குதல், வரிசையை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளில் காவல்துறைக்கு துணையாக பணியாற்றி வருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள்

❖ போக்குவரத்து நெரிசல் ஏற்படாவண்ணம் 3 தற்காலிக பேருந்து நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் நகரத்தில் பல்வேறு இடங்களில் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டும், பேருந்து வழித்தடங்கள் முறைப்படுத்தப் பட்டுள்ளன.

❖ 3 தற்காலிக பேருந்து நிலையத்தில் இருந்து கோயிலுக்கு பக்தர்களை ஏற்றி செல்ல 30 சிற்றுந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ வசதிகள் ஏற்பாடு

❖ பொதுமக்களின் வசதிக்காக 10 சிறப்பு மருத்துவ முகாம்களும், 20 நடமாடும் மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

❖ இம்முகாம்களில் 200 மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணிபுரிகின்றனர். தேவையான மருந்துகள் போதிய அளவில் இம்முகாம்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

❖ இதுவரை 17,000 நபர்கள் இம்முகாம்களை பயன்படுத்தியுள்ளனர்.

❖ 108 ஆம்புலன்ஸ் உடன் கூடிய 10 தற்காலிக மருத்துவ அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பத்து சின்டெக்ஸ் தொட்டிகளில் உப்பு சர்க்கரை கரைசல் வைக்கப்பட்டு, பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

❖ அதிக அளவில் மக்கள் வருவதை கருத்தில்கொண்டு 14.07.2019 முதல் 10 இருசக்கர ஆம்புலன்ஸ் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக அதிகமாக மக்கள் வந்து சென்றாலும், தொற்று நோய் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கையாக ப்ளீச்சிங் பவுடர் தெளிப்பது, கொசு மற்றும் ஈ வராமல் தடுக்க மருந்து தெளிப்பது போன்ற நடவடிக்கை தினந்தோறும் செய்யப்படுகிறது.

❖ காஞ்சிபுரத்திலுள்ள உணவகங்களில் உள்ள உணவுப் பண்டங்களின் மாதிரிகள் தினமும் எடுக்கப்பட்டு, அவற்றின் தரம் சரிபார்க்கப்படுகிறது.

தீயணைப்பு முன்னேற்பாடுகள்

❖ ஐந்து தீயணைப்பு வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு, துணை இயக்குநர் தலைமையில் 250 தீயணைப்பு வீரர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

குடிநீர் மற்றும் கழிவறை வசதி

❖ கோயிலுக்கு உட்புறத்தில் இரு சுத்தகரிப்பு இயந்திரங்களும், வெளிப்புறத்தில் நான்கு சுத்தகரிப்பு இயந்திரங்களும் பொருத்தப்பட்டு நகரில் உள்ள பிற முக்கிய பகுதிகளில் ஆறு புதிய இயந்திரங்களும் பொருத்தி குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

❖ கோயிலுக்குள் இரண்டாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் கோயில் வெளிப்புறத்தில் 10 இடங்களிலும் நகரின் 85 முக்கிய பகுதிகளிலும் நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ வரிசையில் காத்திருக்கும் பக்தர்களின் வசதிகளை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு 50 மீட்டர் இடைவெளியில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டு, அதை டம்ளர் கொண்டு தன்னார்வலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

❖ காஞ்சிபுரம் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களில் நீர் மாதிரிகள் எடுத்து, கிண்டி கிங் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் சோதனை முடிவுகள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ கோயிலை சுற்றியுள்ள நான்கு மாட வீதிகளில் ஆண், பெண் இருபாலருக்கும் தலா 11 வீதம் 22 தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கோவிலை சுற்றியுள்ள பகுதியில் 110 கழிப்பிடங்கள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன.

❖ காஞ்சிபுரம் நகரத்தில் சின்ன காஞ்சிபுரம் பகுதியில் கூடுதலாக 36 எண்ணிக்கையிலும், பெரிய காஞ்சிபுரம் பகுதியில் கூடுதலாக 92 எண்ணிக்கையிலும் நகரும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ அதிக அளவில் வருகின்ற பக்தர்கள் வசதிக்காக 08.07.2019 முதல் கோவில் வளாக பகுதியில் 20 கழிப்பறைகளும், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு தனியே 5 கழிப்பறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ ஒவ்வொரு நாளும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் பக்தர்கள் விட்டுச் செல்கின்ற குப்பைகள், இரவு 11 மணி முதல் காலை 4 மணி வரை சுகாதார பணியாளர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

சிறப்பு விபரங்கள்

❖ இந்த வைபவ நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைத்தலைவர், கண்காணிப்பாளர் மற்றும் இதர துறை அலுவலர்கள், தினமும் இரவில், அன்றன்று கண்டறியப்பட்ட குறைகள் என்னவென்று ஆய்வு செய்து, அடுத்த நாள் நிவர்த்தி

செய்து, பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவைப்படும் கூடுதல் வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

❖ இது மட்டுமல்லாது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசுத் துறை செயலர்களும், துறைத் தலைவர்களும் அவ்வப்போது காஞ்சிபுரத்திற்கு சென்று, பொது மக்களின் குறைகளை கேட்டு அறிந்து, அதனை உடனுக்குடன் நிவர்த்தி செய்து, கூடுதல் வசதிகளை செய்து தருகின்றனர்.

❖ எனவே, இந்த வைபவம் தொடங்கிய நாள் முதல் கடந்த 17 நாட்களாக அருள்மிகு ஸ்ரீ அத்திவரதர் வைபவ நிகழ்ச்சி விரிவான முன்னேற்பாடுகள் காரணமாக, பொது மக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சுமுகமாக, சிறப்பான தரிசனம் செய்து வருகின்றனர். இன்றுவரை, எவ்வித அசம்பாவிதமும், தொற்றுநோய்களும் பரவாவண்ணம், மாவட்ட நிருவாகமும், காவல்துறையினரும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையும், சுகாதாரத்துறையும், பிற துறையினரும் செவ்வனே கடமையாற்றி வருகின்றனர்.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும், அவ்வப்போது எடுத்து வரும் சிறப்பு நடவடிக்கைகளுக்கும், பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சிறப்பாக அருள்மிகு ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்து வருகின்றனர் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அருள்மிகு அத்திவரதரை, திருவோணம் நட்சத்திரமான 18.07.2019 அன்று தரிசனம் செய்ய சுமார் 1.7 இலட்சம் பக்தர்கள் வந்திருந்தனர். அருள்மிகு அத்திவரதரை தரிசனம் செய்ய வருபவர்களில் பெரும்பாலானவர்கள் 50 வயதைக் கடந்தவர்கள்.

ஆவடியைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மனைவி திருமதி. நாராயணி (வயது 55), அருள்மிகு அத்திவரதரை தரிசனம் செய்தபின்

வீடு திரும்பும்போது, உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், தமிழ்நாடு அரசு அமைத்திருந்த மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்றார். இவரை பரிசோதித்த மருத்துவர்கள், இவருக்கு ஏற்கெனவே இரத்தக் கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் உள்ளது எனவும், சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார் எனவும் தெரிவிக்கின்றனர்.

சென்னை, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திரு. நாராயணசாமி என்பவரின் மகன் திரு. நடராசன் (வயது 61), அருள்மிகு அத்திவரதர் தரிசனம் முடித்து வீடு திரும்பும் சமயத்தில் உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அரசு அமைத்திருந்த மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்றார். இவரை பரிசோதித்த மருத்துவர்கள், இவருக்கு கடந்த 4 வருடங்களாக தீவிர இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய் இருந்ததாகவும், அதற்கென சென்னை ஓமந்தூரார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் எனவும், இன்று தரிசனத்திற்குப் பிறகு உடல் நலம் குன்றியதால், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கின்றனர்.

ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த திரு.சோமசேகர ராவ் என்பவரின் மனைவி திருமதி கெங்கலட்சுமி (வயது 61) அருள்மிகு அத்திவரதரை தரிசனம் செய்து முடித்து, வீடு திரும்பும்போது, உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அரசு மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்றார். இவரை பரிசோதித்த மருத்துவர்கள், இவர் தீவிர இரத்தக் கொதிப்பு நோயாளி எனத் தெரிவித்தனர். இவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சேலத்தைச் சேர்ந்த திரு.வைகுண்டன் என்பவரின் மகன் திரு.ஆனந்த் (வயது 47) ஏற்கெனவே வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர். இவருக்கு இன்று வலிப்பு ஏற்பட்டவுடன், காஞ்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேலும், 03.07.2019 அன்று ஆந்திர மாநிலம், ராஜமுந்திரியைச் சேர்ந்த திரு.சக்தி அஜய்குமார் (வயது 22) என்பவர், அருள்மிகு அத்திவரதரை தரிசனம் செய்தபின், மூலவர் தரிசனமும் முடித்துவிட்டு, படிக்கட்டில் இறங்கும்போது, கால் தவறி விழுந்ததனால், மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அவரை உடனடியாக 108 ஆம்புலன்ஸில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

என்னுடைய உத்தரவின் பேரில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களும், சுகாதாரத் துறை செயலாளர் அவர்களும் மற்றும் அத்துறை இயக்குநர்களும் காஞ்சிபுரத்திற்கு நேரில் சென்று, அங்கு செய்யப்பட்டிருந்த மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளை ஆய்வு செய்து, மருத்துவ வசதிகளை உறுதி செய்தனர்.

மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே, உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவிப்பதோடு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன். அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆனால், கூட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற காரணத்தினாலே, அங்கே முதியவர்கள், உடல்நலக்குறைவு இருக்கின்றவர்களும், காஞ்சிபுரம் அத்திவரதரை தரிசனம் செய்ய வருகின்ற காரணத்தினாலே, இப்படிப்பட்ட நிகழ்வு ஏற்படுகின்றது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித்தலைவர் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள்,

கர்ப்பிணிப் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தவர்கள், உடல்நிலை குன்றியிருக்கின்றவர்கள் எல்லாம் இந்த தரிசனத்திலிருந்து தயவுகூர்ந்து தவிர்த்து கொள்ள வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார். ஏன் என்று சொன்னால், கூட்டம் மிகுதியாக இருக்கின்றது. இன்றைக்கு 1.75 இலட்சம் பேர் தரிசனம் செய்ய வந்திருக்கின்றார்கள். பல மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, இப்படி இருக்கின்றவர்கள் எல்லாம், இந்த தரிசனத்தை தவிர்க்க வேண்டும் என்று ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு அம்மாவுடைய அரசு தரிசனம் செய்கின்ற அனைத்து பக்தர்களுக்கும் தேவையான வசதியை, முன்னேற்பாடு வசதிகளை செய்து கொடுக்கின்றது என்பதைத் தெரிவித்து, திருப்பதியில் கூட ஏழுமலையானை தரிசிப்பதற்கு நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் பேர் தான் வருகிறார்கள். எல்லா ஏற்பாடுகளும் அங்கே இருக்கின்றன. ஆனால் நம்முடைய காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் அத்திவரதரை தரிசிக்க இவ்வளவு மக்கள் கூட்டம் வரும் என்று எதிர்பாக்கவில்லை. இருந்தாலும் இருக்கின்ற கூட்டத்தை சரிசெய்து, அனைவரும் தரிசனம் செய்ய வேண்டும் என்ற நிலையிலே, அதற்கு போதிய வசதிகள் முழுவதும் செய்யப்பட்டு இருக்கின்றது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55இன் கீழ், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து ஆற்றிய உரை (18.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சாரம் தாக்கி, பாம்பு கடித்து, நீரில் மூழ்கி மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்தோர் குடும்பங்களின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு நிவாரணம் வேண்டி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.எஸ்.மூர்த்தி, திரு.த.மனோதங்கராஜ், திரு.எஸ்.ஆஸ்டின், திரு.துரைசந்திரசேகரன், திரு. எஸ். ஈஸ்வரன் ஆகியோரிடமிருந்து கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வரப்பெற்றுள்ளன. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், திருமதி வி.கஸ்தூரி வாசு, திரு.கே.என். விஜயகுமார், திரு.சி.வி.சேகர், திருமதி எஸ். விஜயதரணி, திரு.எஸ். ஈஸ்வரன், திரு.பி.பலராமன், திரு.எட்டிமடை ஏ.சண்முகம் ஆகியோரிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இக்கோரிக்கைகளை பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கின்றேன்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஓடத்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. லோகநாதன் என்பவரின் மகன் திரு. சிவபாலன்; இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சாயல்குடி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ரேவதி என்பவரின் கணவர் திரு. விஜயராமலிங்கம்;

நாமக்கல் மாவட்டம், பரமத்தி–வேலூர் வட்டம், பில்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.கணேசன் என்பவரின் மகன் திரு.முத்துகிருஷ்ணன்; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், அர்த்தநாரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.தங்கவேல் என்பவரின் மகன் திரு.காளிதாஸ்;

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், கல்லம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராமச்சந்திரன் என்பவரின் மகன் திரு.ராதாகிருஷ்ணன்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பெருஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி என்பவரின் கணவர் திரு. விஸ்வநாதன் மற்றும் திரு.குமார் என்பவரின் மகன் செல்வன் தட்சணாமூர்த்தி;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மற்றும் நகரத்தைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் என்பவரின் மகன் திரு.ரெங்கசாமி;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மாவுத்தம்பதி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஸ்டெல்லா என்பவரின் மகள் சுவாதி; ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பொன்னவராயன் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்ரமணி என்பவரின் மனைவி திருமதி செண்பகவள்ளி என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர்வட்டம், காத்தாட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் செல்வன் ராஜன் என்பவர் பள்ளி சென்று விட்டு வீடு திரும்பும் போது, பலத்த காற்றின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மணக்கரம்பை கிராமத்தைச்சேர்ந்த திரு.கருணாநிதி என்பவரின் மகன் திரு. தம்பூட்டு (எ) திருமுருகன்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.வள்ளிநாயகம் என்பவரின் மகன் திரு.மணிகண்டன் மற்றும் அவரது மனைவி திருமதி மீனாட்சி செல்வி;

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், முகலிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சந்திரகலா என்பவரின் மகன் திரு.மணிகண்டன் மற்றும் திருமதி கீதா என்பவரின் மகன் திரு.மோகன்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், வைரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கருப்பன் என்பவரின் மகன் திரு.செல்வக்குமார்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், மாதம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.நஞ்சப்ப கவுண்டர் என்பவரின் மகன் திரு.கே.என் பழனிசாமி;

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், கணக்கம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.மணி என்பவரின் மகன் செல்வன் பார்த்திபன்;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், செண்பகாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.அருணாச்சலம் என்பவரின் மகன் திரு. கருத்தப்பாண்டியன் ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வில்லுகுறி கிராமத்தைச் சேர்ந்த திருமதி வீணா என்பவரின் கணவர் திரு.வேணுகுமார் என்பவர் திருவள்ளூர் பழவேற்காடு கடலில் குளித்துக் கொண்டிருந்த போது, தலையில் பலத்த காயமடைந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஆலம்பள்ளம், வாடியக்காடு பகுதியைச் சேர்ந்த திரு.முனிகிருஷ்ணன் என்பவரின்

மகன் சிறுவன் தருண் என்பவர் நாய் கடித்து, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 22 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு.சிவபாலன், திரு.விஜயராமலிங்கம், திரு.முத்துகிருஷ்ணன், திரு.காளிதாஸ், திரு.ராதாகிருஷ்ணன், திரு.விஸ்வநாதன், செல்வன் தட்சணாமூர்த்தி, திரு.ரெங்கசாமி, செல்வி சுவாதி மற்றும் பாம்பு கடித்து உயிரிழந்த திருமதி செண்பகவள்ளி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்தும்; சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்த செல்வன் ராஜன் என்பவரின் குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும்; சாலை விபத்தில் உயிரிழந்த திரு.மணிகண்டன் மற்றும் அவருடைய மனைவி திருமதி மீனாட்சி செல்வி, திரு.மணிகண்டன், திரு.மோகன், திரு.தம்பூட்டு என்கிற திருமுருகன், திரு.செல்வக்குமார் செல்வன் பார்த்திபன், திரு.பழனிசாமி, திரு.பார்த்திபன், திரு.கருத்தப்பாண்டியன்; கடலில் மூழ்கி உயிரிழந்த திரு.வேணுகுமார், நாய் கடித்து உயிரிழந்த சிறுவன் தருண் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

2019–2020ஆம் ஆண்டிற்கான காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப்பின் அளித்த பதிலுரை (19.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாமானிய மக்களின் சாம்ராஜ்யத்தில், சந்தோசம் என்கிற ஒற்றைச் சொல் அரங்கேறிட, சந்தனமாய் கரைந்து உழைத்த சாதனைத்தாய்! திராவிடத்து அரசியலை, அரை நூற்றாண்டு காலம், தன்னைச் சுற்றியே சுழல வைத்த, உலகத் தமிழினத்தின் ஒப்பில்லா விலாசம்! யாரென்று தெரியாதவர்களையும், ஊர் நின்று பார்த்திட, வாழ்வில் உயர்வளித்திட்ட ஒப்பில்லா ஒளிவிளக்கு! படித்தவருக்கும், பாமரருக்கும், படிப்பு எதற்கு என்று அடக்கி வைக்கப்பட்ட பாவையருக்கும் என, இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு, பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியம் தந்த ஒப்பில்லா பாசத்தாய்! பிறந்தவர் அனைவரும் சிறந்தவர் ஆவதில்லை! சிறந்தவர் அனைவரும் மக்கள் மனங்களில் நிறைந்தவர் ஆவதில்லை! மக்கள் மனங்களில் நிறைந்தவர் எல்லாம் மனித நெஞ்சங்களில் நிரந்தரம் ஆவதில்லை! ஆனால், பிறந்து, சிறந்து, நிறைந்து உலகத் தமிழினத்தின் உள்ளத்திலும், இல்லத்திலும் நிரந்தரமாய் நிறையாசனம் இட்டு அமர்ந்திருக்கும் எங்கள் அம்மாவுக்கு இவ்வுலகில் நிகர் எவருமில்லை! அம்மாவிற்கு நிகர் அம்மா அவர்களே! நம்மை எல்லாம் வழி நடத்தும் அம்மா தெய்வத்தை வணங்குகின்றேன்.

"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

அதாவது, அச்சமின்மை, ஏழைகளுக்கு உதவுதல், அறிவு, ஊக்கம் என்ற நான்கு குணங்களும் குறையாது இருப்பவரே சிறந்த அரசர் என திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

இதுபோன்ற தலைமைப் பண்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்று, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் வாரிசாக, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்திற்குப் பொறுப்பேற்று, தனக்கு ஏற்பட்ட பல்வேறு தடைகளை வெற்றிப் படிகளாக்கி, "தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்" என்ற இலட்சியத்துடனும், 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற தாரக மந்திரத்துடனும், "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும், மக்களின் உயர்விற்கும் தன் வாழ்நாள் முழுவதும் கடுமையாக பணியாற்றி, தமிழ்நாட்டு மக்களால் "அம்மா" என அன்புடன் போற்றப்படும் தங்கத் தாரகை, இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது பதிலுரையை துவக்குகிறேன்.

கரடுமுரடான பாதையிலும் கால்கடுக்கப் பயணம்செய்து, வலியைத் துறந்து, கண்ணியம் தவறாமல் மக்களைக் காக்கும் மகத்தான பணியில் கடமை தவறாமல் ஈடுபடுபவர்கள் காவல்துறைப் பணியாளர்கள்.

இரவைப் பகலாக்கி, விழிகளை விளக்காக்கி கண் துஞ்சாது, பசி நோக்காது, இயற்கை உபாதைகளைக்கூட தள்ளிப்போட்டு, மக்கள் நலனுக்காகப் பாடுபடும் காவல்துறையினரால் நம் தாயின் கருப்பையின் கதகதப்பில் இருப்பதைப்போல பாதுகாப்பாக

இருக்கிறோம். களவு போனாலும், கொலை ஆனாலும் கண்டுபிடிப்பதற்காக உயிரைத் துச்சமெனப் பணயம் வைத்து, மூலைமுடுக்குகளில் எல்லாம் தேடிக் கண்டுபிடித்து குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்தும் சாகசப் பணியை ஆற்றுபவர்கள் அவர்கள். திருவிழாக்களில், பொதுக் கூட்டங்களில், பண்டிகைகளில், கடைவீதிகளில் பொதுமக்களிடையே தடித்த வார்த்தைகளால் தகறாறு ஏற்படும்போதும், உணர்ச்சிப் பெருக்கெடுக்கும் கலவரங்கள் நடக்கும்போதும் தன்னலத்தைத் தூக்கி வைத்து பொதுநலத்தை மனதில் வைத்து சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்கும் அரும்பணி ஆற்றுபவர்கள் அவர்கள். காணாமல்போன பொருளைக் கண்டுபிடிப்பதிலிருந்து, தொலைந்துபோன மனிதர்களை அறிந்து கொண்டுவருவது வரை, அவர்கள் செய்யும் பணிகள் கணக்கற்றவை. கதவுகள் பூட்டுகளால் அல்ல, காவலர்களால் பாதுகாக்கப்படுகின்றன. தமிழகக் காவல்துறைக்குக் காவலராய் இருந்து, அவர்தம் கவலைகளைத்துடைத்து, சரித்திர சாதனைகளுக்குப் பளபளக்கும் பதக்கங்கள் அணிவித்து, பொன்னாடை போர்த்தி, புகழ்மாலை சூட்டி, அவர்தம் பதற்றத்தைத் தணித்து, மகத்துவத்தை அளித்து, வசதிகளை வழங்கி, விருதுகளை விநியோகித்து, பெருமையினைச் சேர்த்து பேருவகை கொள்வது இந்த அரசு. அவர்கள் தங்கள் பணியை ஆற்ற எதிர்கொள்ளும் இன்னல்களை எல்லாம் முழுமையாக அறிந்து அவற்றை அவ்வப்போது துடைத்து எறிந்து அவர்கள் இதழ்களில் புன்னகையைப் பொருத்தி அழகுபார்க்கின்ற அரசு அம்மாவின் அரசு. அதன் விளைவாகத் தமிழகம் இன்று தழைத்தோங்கும் அமைதிப் பூங்கா. குற்றங்கள் குறைந்து, களவுகள் மறைந்து, விபத்துகள் சுருங்கி, சமூக விரோதிகளை சட்டத்தின் பிடியில் நிறுத்தி பாரதத் திருநாட்டில் பாதுகாப்பான அமைதி மாநிலமாய் தமிழகம் இன்று திகழ்கிறது.

"The rule of law should be respected, so that the basic structure of our democracy is maintained and further strengthened" என்று நமது மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், சட்டத்தின் மாட்சிமையைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மாநிலம், பொருளாதார வளர்ச்சியின் உச்சத்திற்கு செல்லவும், அம்மாநில மக்கள் அனைத்து வகையிலும் மேம்பாட்டை அடையவும், அம்மாநிலத்தில் அமைதி நிலவுவது மிகவும் அவசியமானதாகும். ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு முக்கியமாக விளங்குவது காவல்துறையினரின் பணியாகும். பொதுமக்களின் உயிருக்கும், உடமைக்கும், தனி மனித பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளித்து, மனித சமுதாயத்தை நெறிப்படுத்தி, கட்டுக்கோப்பு கலையாமல் சமுதாயத்தைப் பாதுகாக்க, அரசால் வகுக்கப்படும் சட்டங்களை அமல்படுத்துபவர்கள் காவல்துறையினர். காவல்துறையினர், சுதந்திரமாகவும், நேர்மையாகவும், சிறப்பாகவும், மனித நேயத்தோடும், எவ்வித குறுக்கீடுமின்றி அவர்களது பணிகளை செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதுடன், அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுக்கின்றது.

மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு பராமரிப்பது குறித்தும், காவல்துறையினர் நடவடிக்கைகள் குறித்தும், சில சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டும், வரவேற்பும் தந்திருக்கினற்னர். ஒரு சிலர் நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றார்கள். அதே சமயத்தில், ஒருசிலர் குறைகளையும், விமர்சனங்களையும் முன்வைத்துள்ளனர். விமர்சனங்களை கூறுபவர்கள்பற்றி நினைக்கும்போது, பேரறிஞர்

அண்ணா அவர்களின் வாழ்க்கையில் நடந்ததாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இம்மாமன்றத்தில் குறிப்பிட்ட கருத்து ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள், நண்பர்களுடன் காரில் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேச்சாளர் ஒருவர், அண்ணா அவர்களுக்கு எதிராக கடுமையாக பேசிக்கொண்டிருந்ததை கேட்டு, அவ்விடத்தில் காரை நிறுத்தி பேச்சு முழுவதையும் கேட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றுள்ளார். காரிலிருந்த நண்பர் ஒருவர் இதுகுறித்து கேட்டபோது, அண்ணா அவர்கள் பதில் எதுவும் சொல்லாமல் இருந்துள்ளார். சிறிது தூரம் சென்றவுடன், அதே சாலையில் ஒரு மாட்டு வண்டியை கார் முந்திச் சென்றபோது, மாட்டு வண்டியை ஓட்டியவர் கார் ஓட்டுநரை திட்டியுள்ளார். அப்போது அண்ணா அவர்கள், வேகமாக செல்லும் காருக்கு ஈடாக மாட்டுவண்டியால் செல்ல முடியவில்லை. அந்த கோபத்தினால்தான் மாட்டுவண்டி ஓட்டுநர் வசைபாடுகிறார். அவருக்கு சமமாக நாமும் வசைபாடி, பிரச்சினை செய்து, பிரயாணத்திற்கு தடை ஏதும் ஏற்படுத்தாமல், செல்லவேண்டிய இடத்தை அடையவேண்டுமென்றும், மாட்டு வண்டிக்காரரின் நிலைமையில்தான் அந்த பேச்சாளர் இருக்கிறார் என்றும், “நமது வளர்ச்சியை தீர்மானிப்பதில், முக்கிய அளவுகோல், பிறரது நியாயமற்ற வசை” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், நல்ல செயல்கள், நல்ல திட்டங்கள், நமது வளர்ச்சி, நமக்கு எதிராக வசைபாடுகிறவர்களை கவனிக்க வைத்திருக்கிறது. நம்மால் அதுபோன்று வரமுடியவில்லையே என்ற ஆதங்கம் அவர்களிடையே இருந்து வருகிறது.

அது கோபமாக மாறுகிறது; கடுஞ்சொல்லாக பேச வைக்கிறது. நமது அரசு, இயற்கைப் பேரழிவுகள், கடும் வறட்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சமாளித்து, நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வந்தபோதிலும், அரசியலமைப்புச் சட்டம் அளித்துள்ள பேச்சுரிமை, கருத்துரிமை போன்ற உரிமைகளை சிலர் தவறாகப் பயன்படுத்தி, அரசுக்கு எதிராகவும், காவல்துறையினருக்கு எதிராகவும், 'விடிந்தால் போராட்டம், பொழுது சாய்ந்தால் அறிக்கை' என்று அளவில் வதந்திகளை பொதுமக்களிடையே பரப்பி, தங்கள் சுயநலத்திற்காக மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் பற்றியும், தொழில் மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி குறித்தும், இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலம் பற்றியும் துளியும் சிந்திக்காமல், 'அரசு அறிவிக்கும் திட்டங்கள் எதையும் செயல்படுத்தவிடாமல் தடுப்பதுதான் தங்களது தலையாய பணி' என்ற கோட்பாட்டுடன் செயல்பட்டு வருகின்றனர்.

மக்களுக்கு பயனளிக்கக்கூடிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு அளித்தால் அவைகளை நிறைவேற்றவும், அரசு திட்டங்களில் உள்ள குறைகளைக் குறிப்பிட்டால் அவற்றைக் களையவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எப்பொழுதும் தயாராக உள்ளது.

கடந்த 8 ஆண்டுகளாக அரசு அளித்து வரும் அறிவுரைகளாலும், எடுத்து வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளாலும், குற்றச் செயல்களில் ஈடுபடுவர்கள்மீது காவல்துறையினர் கடும் நடவடிக்கைகள் எடுத்து, குற்றநிகழ்வுகளை தடுத்து, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள், மதம் மற்றும் வகுப்பு பூசல்கள், பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயல்கள் ஏதுமின்றி, தமிழ்நாட்டில் தொடர்ந்து அமைதி காத்து

வருகின்றனர். கடந்த காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட கும்பகோணம் மகாமகம், காவேரி மஹாபுஷ்கரம், தாமிரபரணி மஹாபுஷ்கரம் போன்ற நிகழ்வுகள் எந்தவொரு சிறு அசம்பாவிதமுமின்றி அமைதியாக நடந்து முடிந்ததும், அண்மையில் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் ஏதுமில்லாத வகையில் நடந்து முடிந்ததும், தற்போது, நடைபெற்று வரும் காஞ்சிபுரம் அத்திவரதர் சேவைக்கு எதிர்பார்த்ததைவிட தினந்தோறும் பலமடங்கு கூட்டம் அதிகரித்தும், வரும் பக்தர்கள் கூட்டத்தை திறம்பட கையாள்வதும், மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு சிறப்பான முறையிலே பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு சிறந்த சான்றுகளாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அவர் வழியில் நடைபெற்று வரும் இந்த அரசும், காவேரி பிரச்சினை, பெரியார் அணை பிரச்சினை போன்றவற்றில் பறிகொடுக்கப்பட்ட மாநிலத்தின் உரிமைகளை சட்டப் போராட்டங்களின்மூலம் மீட்டெடுத்தது. கெயில் நிறுவனம் விவசாய நிலங்களில் குழாய் பதிக்கும் திட்டம், ஹைட்ரோ கார்பன் மற்றும் மீத்தேன் எடுக்கும் திட்டம் போன்ற திட்டங்களில் விவசாயிகளின் பக்கம் திடமாக நின்று, அதன்படி விவசாயிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், தானே புயல், வர்தா புயல், ஒக்கி புயல் மற்றும் கஜா புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களின்போதும் உடனடியாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, பொதுமக்களின் நலனைக் காப்பதில் மிகவும் அக்கறை கொண்ட அரசாக செயல்பட்டது அனைவரும் அறிந்ததே. அத்தருணங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைந்து எடுத்த நடவடிக்கைகளை நடுநிலையாளர்களும், ஊடகங்களும், பொதுமக்களும் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

கடந்த 8 வருடங்களாக காவல்துறையினர் மேற்கெண்டுவரும் முன்னெச்சரிக்கை, குற்றத் தடுப்பு, குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டனை பெற்றுத் தருதல், தடுப்புச் சட்டங்களின்கீழ் காவலில் வைத்தல் போன்ற நடவடிக்கைகளினால் மாநிலத்தில் பெரும்பாலான குற்றங்கள் தொடர்ந்து குறைந்து வருகின்றன. இதை நான் கூறவில்லை. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. உதாரணத்திற்கு கடைசியாக வெளிவந்த தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கையின்படி, நமது மாநிலத்தில் வன்குற்றங்கள் 10,844 ஆகும். ஆனால், கேரளாவில் 13,548 வழக்குகளும், கருநாடகாவில் 19,648 வழக்குகளும், குஜராத்தில் 11,829 வழக்குகளும், ஒடிசாவில் 19,092 வழக்குகளும், அரியானாவில் 14,392 வழக்குகளும், ராஜஸ்தானில் 16,223 வழக்குகளும் தாக்கலாகியுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் வழக்குகள் குறித்து இங்கே தெரிவித்தார்கள். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் குற்றங்கள் குறைந்துதான் இருக்கின்றன என்பதை பெருமிதத்துடன் சொல்கின்றேன். அதே அறிக்கையின்படி, நமது மாநிலத்தில தாக்கலான சொத்து சம்பந்தமான குற்றங்கள் கடந்த 2016ஆம் ஆண்டு 23,650 மட்டுமே ஆகும். ஆனால், நமது அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசத்தில் 25,311 வழக்குகளும், தெலங்கானாவில் 27,946 வழக்குகளும், கருநாடகாவில் 37,873 வழக்குகளும், மகாராஷ்டிராவில் 94,826 வழக்குகளும் மற்றும் ராஜஸ்தானில் 53,402 வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. இப்புள்ளி விவரங்களிலிருந்து மாநிலத்தில் குற்றங்கள் தாக்கலாவதும், குற்ற விகிதமும் மற்ற மாநிலங்களைவிட மிகக் குறைவாக இருந்து வருகிறது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

கடந்த 8 ஆண்டுகளாக கொலை உள்ளிட்ட சொத்து சம்பந்தமாக தாக்கலான 1,75,297 வழக்குகளில் 1,23,499 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதாவது, 71 சதவிகித வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் களவுபோன 66.5 சதவிகித சொத்துகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தில் 2016ஆம் ஆண்டைய புள்ளிவிவரத்தின்படி களவு போன சொத்துகளை மீட்பதில் 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய 4 ஆண்டுகளில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும் காவல்துறையினர் தொடர்ந்து குற்றங்கள் மற்றும் கொடுங்குற்றங்களில் ஈடுபட்டு வருபவர்களை விரைந்து கைது செய்து, தேசிய பாதுகாப்புச் சட்டம் உட்பட பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின்கீழ் தடுப்புக் காவலில் வைத்து வருகின்றனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெற்று வரும் இவ்வரசு, பெண்களின் நலனைக் காப்பதிலும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடப்பதைத்தடுப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருவதால், நமது மாநிலத்தில் கடந்த 8 ஆண்டுகளாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருமளவில் குறைந்து வருகின்றன.

உதாரணமாக, தி.மு.க. ஆட்சியின் இறுதியில் 2010ஆம் ஆண்டு நடந்த வரதட்சணை தொடர்பான இறப்புகள் 165 ஆகும். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவிக்கு வந்த பின்னர் இவ்வழக்குகள் படிப்படியாக குறைந்து, கடந்த 2018ஆம் ஆண்டு 55 வழக்குகள் மட்டுமே

தாக்கலாகியுள்ளன. இவ்வழக்குகள் 66.7 சதவிகிதம் குறைந்துள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

சிறுமி மற்றும் பெண்கள் கடத்தல் வழக்குகள் 2010ஆம் ஆண்டு 1,464 ஆக இருந்தது. 2018ஆம் ஆண்டு 907 ஆக, 38 சதவிகிதம் குறைந்துள்ளது. பெண்களுக்கெதிராக தாக்கலாகும் மொத்த குற்றங்களும் நமது மாநிலத்தில் குறைவாகவே இருந்து வருகிறது. உதாரணமாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள கடைசி புள்ளி விவர அறிக்கையின்படி நமது மாநிலத்தில், பெண்களுக்கெதிரான குற்ற விகிதம் 10.7 ஆகும். இது தேசிய சராசரி விகிதத்தை விட 40.7 குறைவாகும். இக்குற்றவிகிதம் நமது அண்டை மாநிலமான கேரளாவில் 53.4 ஆகவும், ஆந்திர பிரதேசத்தில் 60.4 ஆகவும், ஒடிசாவில் 77.7 ஆகவும், தெலங்கானாவில் 82.3 ஆகவும் உள்ளது.

மேலும், தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கையின்படி, இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த மெட்ரோ நகரங்களில் சென்னை முதல் நகரமாகவும் பெருநகரங்களில் 20 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் நகரங்களில் கோயம்புத்தூர் முதல் நகரமாகவும் உள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு காணாமல் போன 1,232 சிறுவர்கள் மற்றும் 3,041 சிறுமிகளில், 1,089 சிறுவர்களையும், 2,795 சிறுமிகளையும் கண்டுபிடித்து அவர்களது பெற்றோர் அல்லது உறவினர் வசமும் மற்றும் காப்பகங்களிலும் காவல்துறையினர் ஒப்படைத்துள்ளனர். இவ்வாண்டு 31.05.2019 வரை காணாமல் போன 433 சிறுவர்களில் 301 பேரையும், 1,437 சிறுமிகளுள் 1,086 பேரையும் மீட்டுள்ளனர்.

இரயில் நிலையங்கள் மற்றும் இரயில்களில் பெற்றோர்களால் தவற விடப்படும் குழந்தைகளை மீட்டு, அவர்களது பெற்றோர்களுடன் சேர்க்கும் நோக்கில், ‘உதயம்’ என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 2018ஆம்ஆண்டு மட்டும் 2,590 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட அடிப்படைவாத மற்றும் பயங்கரவாத இயக்கங்கள் நமது மாநிலத்தில் வேரூன்றாதவாறு தடுக்க காவல்துறையினருக்கு அரசு போதுமான அறிவுரைகளை வழங்கியதன் அடிப்படையில், காவல்துறையினர், மாநிலத்தில் தடை செய்யப்பட்ட அத்தகைய இயக்கங்களின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து, தேசிய புலனாய்வு முகமையுடன் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக, பயங்கரவாதச் செயல்களை தடுத்து வருகின்றனர்.

கோயம்புத்தூர் தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டு, கடந்த 20 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த குற்றவாளி ரஷீத் என்பவர் 10.09.2018 அன்று சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதே இதற்குச் சான்றாகும்.

நீண்ட கடற்கரையை உடைய நமது மாநிலத்தின் கடலோரப் பகுதி வழியாக பயங்கரவாதிகள் தமிழ்நாட்டிற்குள் நுழையாதவாறு தடுக்க, காவல்துறையினர், இந்திய கடலோர பாதுகாப்புப் படை மற்றும் இந்திய கடற்படையினருடன் இணைந்து கடல் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.

மாநிலத்தில் ஏற்பட்டு வரும் பொருளாதார வளர்ச்சி காரணமாகவும், தொழில்துறை முன்னேற்றம் காரணமாகவும், நாளுக்கு நாள் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து சீரான தடையில்லா போக்குவரத்தை ஏற்படுத்த தேவையான

அனைத்து நடவடிக்கைகளையும் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சாலை விபத்துகளின் காரணங்கள் குறித்து ஆராய்ந்து, அவற்றை தவிர்ப்பதற்காக RADMS என்ற மென்பொருள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தியதாலும், மோட்டார் வாகன சட்டத்தை கடுமையாக அமல்படுத்தியதாலும், கடந்த 3 ஆண்டுகளாக வாகன விபத்துகள் நடப்பதும், விபத்துகளில் உயிரிழப்பதும் குறைந்து வருகின்றன. கடந்த 2016ஆம் ஆண்டு மாநிலத்தில் 71 ஆயிரத்து 431 விபத்து வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

இவ்வழக்குகள் 2017ஆம் ஆண்டு 65 ஆயிரத்து 562 ஆகவும், 2018ஆம் ஆண்டு 63 ஆயிரத்து 920 ஆகவும் குறைந்துள்ளன. 2016ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2018ஆம் ஆண்டு 10.50 சதவிகித விபத்துகள் குறைந்துள்ளன.

இதேபோன்று, வாகன விபத்துகளில் 2016ஆம் ஆண்டு 17 ஆயிரத்து 218 பேர் உயிரிழந்தனர். 2018ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 216 பேர் உயிரிழந்துள்ளனர். 2016ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2018ஆம் ஆண்டு 29 சதவிகித உயிரிழப்புகள் குறைந்துள்ளன.

மேலும், போக்குவரத்து விதிகளை மீறுபவர்களிடமிருந்து "E-Challan System" என்ற பெயரில் அதே இடத்தில் அபராதம் வசூலிக்கும் திட்டம் சென்னையில் கடந்த ஆண்டு அமல்படுத்தப்பட்டு, இதற்கான 352 E-Pos இயந்திரங்கள், 2.79 கோடி ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் வெற்றியடைந்ததை அடுத்து, மாநிலம் முழுவதும் இத்திட்டம் 28.06.2019 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 750 E-Pos இயந்திரங்கள் வாங்கப்பட்டு உபயோகத்திற்காக அளிக்கப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் தொலைநோக்குப் பார்வையின்றி, தங்கள் சுய விளம்பரத்திற்காகவும், அரசியல் காரணங்களுக்காகவும், மத்திய, மாநில அரசுகள் எத்திட்டத்தை அறிவித்தாலும் அதிலுள்ள நன்மை, தீமைகளை ஆராயாமல், குறை கூறி எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் போராட்டங்களில் ஈடுபட்டு, நாட்டில் பல்வேறு துறைகளில் 'முன்னோடியான மாநிலம்' என்று பெயர் பெற்று வந்த நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றனர். இதையே சமீபத்தில் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரும், "போராட்டம் தேவை தான், ஆனால் எதற்கெடுத்தாலும் போராடக் கூடாது" எனக் குறிப்பிட்டிருந்தார். "போராட்டமே வாழ்க்கை, குறை கூறுவதே வாடிக்கை, உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டே உயிர் மூச்சு" என்றுள்ள சிலருக்கு இதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

"இல்லாமை நீக்க வேண்டும்;
தொழில் ஆக்கம் வேண்டும்;
இங்கு எல்லோரும் வாழ வேண்டும்
முன்னேற என்ன வேண்டும்
நல் எண்ணம் வேண்டும்
தன் உழைப்பாலே உண்ண வேண்டும்"

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல் வரிகளுக்கிணங்க, மாநிலத்தின் சிறப்பான எதிர்காலத்தையும், வளர்ச்சியையும் மனதில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நல்ல திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திவரும் என்பதை இத்தருணத்தில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு காவல்துறையினர் அனைத்துவிதமான காவல் பணிகளிலும் திறமையாக செயல்பட்டு, நாட்டிலேயே பிற மாநில காவல்துறையினருக்கு முன் உதாரணமாக இருந்து வருகின்றனர். உதாரணமாக, ‘இந்தியா டுடே’ பத்திரிகை, பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நமது நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களையும் ஆய்வு செய்து, 2018ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்படும் முதன்மை மாநிலம் தமிழ்நாடு எனவும், குறுகிய காலத்தில் இச்சாதனை செய்ததற்காகவும் தனித்தனியாக 2 விருதுகளை வழங்கியுள்ளது.

2017ஆம் ஆண்டில், கோவை மாநகர், ஆர்.எஸ். புரம் காவல் நிலையம் நாட்டிலேயே முதலாவது சிறந்த காவல் நிலையமாகவும், சென்னை, அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாவது சிறந்த காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டு, பாராட்டுப் பெற்றுள்ளன. மேலும், கடந்த 2018ஆம் ஆண்டில் தேனி மாவட்டம், பெரியகுளம் காவல் நிலையம் எட்டாவது சிறந்த காவல் நிலையமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் சென்னையில் நடைபெற்ற 61ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில், தமிழ்நாடு காவல்துறை 18 தங்கப்பதக்கங்கள், 10 வெள்ளி பதக்கங்கள், 5 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 33 பதக்கங்கள் உட்பட 7 கோப்பைகள் மற்றும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் தமிழ்நாடு காவல்துறை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு ஹரியானாவில் நடைபெற்ற இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டியில், நமது காவல்துறையினர் பங்கேற்று தொடர்ந்து 6ஆவது முறையாக ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற்று, அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றது. மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரில் வழங்கப்பட்டுவரும் ஜெ.ஜெ. கோப்பையையும் வென்றுள்ளனர்.

2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற தேசிய குற்ற ஆவண காப்பக மாநாட்டின்போது அகில இந்திய அளவில், தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் "குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைபின்னல் முறை" என்ற வலைபின்னல் திட்டத்தை நாட்டிலேயே மிகச் சிறப்பாக செயல்படுத்தியதற்கு தமிழ்நாடு விருது பெற்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

உலக அளவில் பெருகிவரும் தீவிரவாத மற்றும் பயங்கரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள், சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள கலாச்சார சீரழிவுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியால் அதிகரித்துவரும் சைபர் குற்றங்கள் மற்றும் சமுதாய ஒழுக்க நெறிகளில் ஏற்பட்டுவரும் சீர்குலைவுகள் ஆகியனவற்றை திறமையாக எதிர்கொள்ளும் விதமாக நமது காவல்துறையின் செயல் திறன்களை அதிகரிக்கும் நோக்கில், அவர்களுக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப வசதிகளையும் செய்து தரவும், தேவையான பயிற்சிகளை அளிக்கவும் தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, கடந்த 8 ஆண்டுகளாக காவல்துறைக்கான நிதியைத் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த 2010ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, காவல்துறைக்கு 2,962 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், இந்த அரசு நிதியைத் தொடர்ந்து உயர்த்தி வந்து, இவ்வாண்டு 8,084.80 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், கடந்த 2011ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு 05.07.2019 வரை 786.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, நவீன ஆயுதங்கள், சிறப்பு வாகனங்கள், நுண்ணறிவுப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறைகளுக்கான உபகரணங்கள், தொலைத் தொடர்பு உபகரணங்கள், சிறப்பு பயன்பாட்டிற்கான உபகரணங்கள் போன்றவை வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு முதல் 2,942.35 கோடி ரூபாய் மதிப்பில் 551 காவல் நிலையங்கள், 18 ஆயிரத்து 648 காவல் குடியிருப்புகள், காவல் ஆணையரகங்கள், மாவட்ட காவல் அலுவலகங்கள், பிற அலுவலகங்கள், தங்குமிடங்கள், மருத்துவமனைகள் மற்றும் இதர கட்டடங்கள் என 326 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு, காவல்துறையினர் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், 63 காவல் நிலையங்கள், 5 ஆயிரத்து 851 காவல் குடியிருப்புகள் மற்றும் 46 இதர அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 29 காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினால் கணினிவழிக் குற்றங்கள் பெருகி வருவதை எதிர்கொள்ள காவல்துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அலகு என்றளவில் மொத்தம் 649 பணியிடங்கள் இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 3.71 கோடி ரூபாய் செலவில் சைபர் அரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன்மூலம் காவல்துறையினர் பிற அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றுடன்

ஒருங்கிணைந்து செயல்பட உள்ளனர். குழந்தைகள் கடத்தப்படுவதை தடுப்பதற்காக, ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு பிரிவு என்ற அளவில், 43 குழந்தை கடத்தல் தடுப்புப் பிரிவுகள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சிறப்பு காவல் படை 13ஆம் அணி, தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையாக மாற்றப்பட்டு, அப்படையினருக்கு 15 கோடி ரூபாய் மதிப்பில் உபகரணங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கி, அப்படையினருக்கு தகுந்த பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இம்மீட்புப் படையினர் 'கஜா' புயலின்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மிகவும் உதவியாக இருந்தனர்.

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமை கேமராவுடன்கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் (சி.சி.டி.வி.) பொருத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் கேமராக்கள் பொருத்த தேவையான முக்கிய இடங்களாக ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 390 அரசு மற்றும் தனியார் கட்டடங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுள் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 690 கட்டடங்களில் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் சென்னை மாநகரத்தில் 59 ஆயிரத்து 627 பொது கட்டடங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுள் 46 ஆயிரத்து 865 கட்டடங்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே, 747 காவல் நிலையங்களில் உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது போக,

மீதமுள்ள 820 காவல் நிலையங்களிலும், பிற பொது இடங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் கேமராக்கள் பொருத்த அரசால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

50 மீட்டர் தூரத்திற்கு ஒரு சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்பட்ட பின்னர், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபட தயங்கி வருகின்றனர். அதையும் மீறி, குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் காவல்துறையினரால் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படுகின்றனர். உதாரணத்திற்கு, 2017ஆம் ஆண்டு முதல் 2019 ஜூன் மாதம் வரை சங்கிலி பறிப்பு தொடர்பாக 1,190 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,066 வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து 2.5 கோடி ரூபாய் மதிப்பிலான தங்க நகைகள் கைப்பற்றி புகார்தாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் செயின் பறிப்பு பற்றி இங்கே சொன்னார்கள். ஆகவே, குற்றவாளிகளை கண்டுபிடிப்பதிலே நம்முடைய காவல்துறை அதிகாரிகள் சிறந்து விளங்குகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

கடந்த 2018ஆம் ஆண்டில் ஜூன் மாதம் முடிய நடந்த சங்கிலி பறிப்பு வழக்குகள் 258 ஆகும். ஆனால், இந்த ஆண்டில், 2019 ஜூன் மாதம் வரை 135 வழக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளன. அதிலும், 109 வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நகைகள் மீட்டு, புகார்தாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காவல்துறையினரின் விரைவான நடவடிக்கை மற்றும் சி.சி.டி.வி. கேமராக்கள் அதிக அளவில் பொருத்தப்பட்டதால், பெருமளவில் சங்கிலிப் பறிப்பு குறைந்துள்ளது என்பதை இதன்மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மத்திய அரசின் உதவியுடன் மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கவும், நற்குடிமகன்களாக விளங்கவும், உடல் திறனை பேணவும், சமூக நலனில் அக்கறை கொண்ட எதிர்கால குடிமகன்களாக உருவாக்க ஏதுவாக, “மாணவர் காவல் படைத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை 2016–2017ஆம் நிதியாண்டு முதல் துவக்கி, மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளாக 11 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 1,117 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அனைத்து நவீன தொலைத் தொடர்பு வசதிகளுடன், ”மாநிலத் தலைமை காவல் கட்டுப்பாட்டு அறை” ஒன்று 11.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் என 24.04.2012 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததற்கிணங்க, 04.06.2018 அன்று என்னால் துவக்கப்பட்டது. பொதுமக்கள் மாநிலத்தில் எப்பகுதியில் இருந்தாலும், இக்கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிக்கலாம். இக்கட்டுப்பாட்டு அறையில் 30–6–2019 வரை 41 இலட்சத்து 34 ஆயிரத்து 471 அழைப்புகள் பெறப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காவல்துறையில் தொலைத் தொடர்பு வசதியை மேம்படுத்த, நவீன தகவல் தொடர்பு உபகரணங்களுடன்கூடிய டிஜிட்டல் மொபைல் ரேடியோ வசதி 49.40 கோடி ரூபாய் செலவில் 10 மாவட்டங்களில் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. இவ்வசதி, படிப்படியாக பிற மாவட்டங்களுக்கும் ஏற்படுத்தித் தரப்படும்.

நெருக்கடி நேரங்களில் காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் சுகாதாரத் துறை போன்ற துறைகளை பொதுமக்கள் தொடர்பு கொண்டு தங்களுக்குத் தேவையான உதவியை பெற 15.65 கோடி ரூபாய் செலவில் “மாநிலத் தலைமை காவல் கட்டுப்பாட்டு அறையை” மாநில நெருக்கடி நேர செயலாற்றும் மையமாக” உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் மாநிலம் முழுவதும் பொது மக்கள் 112 என்ற எண்ணை தொடர்பு கொண்டு உதவியை பெறலாம்.

சென்னை மாநகரில் காவல்துறையினர் கைபேசியில் இயங்கக்கூடிய ஃபெஸ்டேகர் (Face Tagger) என்ற செயலி (App) ஒன்றை உருவாக்கியதன்மூலம் காவலர்கள் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று சென்னை மாநகரில் அவசர காலத்தில் 100 என்ற எண்ணை டயல் செய்யாமலேயே “காவலன் எஸ்.ஓ.எஸ்” என்ற அவசரப் பாதுகாப்புச் செயலியை தொடுவதன் மூலமாக அவர்களது இருப்பிடத் தகவலுடன் மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொள்ளும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இம்முறையில் பதிவு செய்துள்ள நபர்களுக்கு இருப்பிடத் தகவலுடன் எச்சரிக்கை குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படும். ஒருவர் அவசர காலங்களில் இந்த செயலியை பயன்படுத்துவதன்மூலம் உடனடியாக காவல்துறையினர் அவர் உள்ள இடத்திற்கு விரைந்து

சென்று தேவையான உதவியை அளிக்க முடிவதால், இது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பல்வேறு சிரமங்களுக்கிடையே தங்கள் குடும்பங்களைப் பற்றி எண்ணிக்கூட பார்க்க நேரமின்றி காவலர்கள் தங்கள் கடமைகளை செய்து வருகின்றனர் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் இவ்வரசு அறிந்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் நாட்டிற்கே முன்னுதாரணமாக இருந்து வருகிறது.

காவல்துறையினரின் பல்வேறு பணிகள் மற்றும் அதிலிருந்து வரும் சவால்கள் குறித்து அறிந்த இவ்வரசு, காவல்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை அவ்வப்போது நிரப்பி வருகிறது. அந்தவகையில், காவல்துறையில் 30.06.2019 நிலவரப்படி, அனைத்துப் பதவிகளிலும் அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1,24,769 ஆகும். இதில், பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை 1,15,075 ஆகும். காலியாக உள்ளது 9,694 இடங்கள் மட்டுமே ஆகும். அக்காலிப் பணியிடங்களில் தற்போது 969 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 8,427 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

காலியாகவுள்ள இடங்களை நிரப்ப 226 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்களும், 179 விரல்ரேகை பிரிவு உதவி ஆய்வாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியில் இருந்து வருகின்றனர். கடந்த 8 ஆண்டுகளில் காவலர் முதல் காவல்துறை இயக்குநர் வரை பல்வேறு பதவிகளில் 64,510 பேர்களுக்கு பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2011–2012 முதல் 2018–2019 வரை காவல்துறைக்கான மானியக் கோரிக்கையின்போதும் மற்றும் பிற சமயங்களின்போதும்

அறிவித்த மொத்த அறிவிப்புகள் 786 ஆகும். அவற்றுள் 616 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 163 அறிவிப்புகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வரசு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் 99.1 சதவிகித அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, காவல்துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உதாரணமாக, 50 சதவீத மானிய விலையில் நியாய விலை கடைகளில் காவல் ஆளிநர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள், அனைத்து சீருடைப் பணியாளர்களுக்கும், ஓய்வு பெற்ற பணியாளர்களின் குடும்பத்தினருக்கும் தமிழ்நாடு காவலர் அங்காடி திட்டத்தின்கீழ் குறைந்த விலையில் பொருட்கள், தமிழ்நாடு அரசு சிறப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் 12ஆம் வகுப்பு அரசு பொது தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற காவல் ஆளிநர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, காவல் பணியாளர்களுக்கு வருடம் ஒரு முறை முழு உடல் மருத்துவ பரிசோதனை, போன்ற நலத் திட்டங்கள் வழங்கப்படுவதுடன் அவர்களின் பணிச் சுமை காரணமாக ஏற்படும் மன அழுத்தத்தினைப் போக்க சிறப்பு ஏற்பாடாக, காவலர் நிறைவாழ்வுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் பெங்களூருவில் உள்ள நிம்ஹான்ஸ் (National Institute of Mental Health and Neuro Science) நிறுவனத்துடன் இணைந்து 10 கோடி ரூபாய் செலவில் உளவியல் ரீதியான பயிற்சியை அளிக்கும் திட்டம் நாட்டிலேயே நம் மாநிலத்தில் முதன்முதலாக துவக்கப்பட்டு இதுவரையில் 35,082 காவலர்களும், 37,352 காவலர்களின் குடும்ப உறுப்பினர்களும் பங்கேற்று பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியை

தங்களுடைய மாநிலத்தில் செயல்படுத்த மற்ற மாநில காவல்துறையினரும், மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் மத்திய காவல் படையினரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

காவல்துறையினருக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன் அவர்களுக்கு பணியின்போது ஏற்படும் மன அழுத்தத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பல்வேறு படிகளும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு காவல்துறையில் பத்து ஆண்டுகள் எவ்வித தண்டனையுமின்றி பணிபுரிந்துவரும் காவலர் முதல் தலைமைக் காவலர் வரையிலான காவல்துறையில் பத்து ஆண்டுகள் எவ்வித தண்டனையுமின்றி பணிபுரிந்துவரும் காவலர் முதல் தலைமைக் காவலர் வரையிலான காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் தகுதி வாய்ந்த அனைவருக்கும் உடனடியாக கிடைக்கும் வகையில், இப்பதக்க எண்ணிக்கையை ஆண்டொன்றுக்கு **1,500**லிருந்து **3,000**ஆக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘‘வீழ்வேன் என்று நினைத்தாயோ மனம் பல களம் கண்டாலும், தோல்வி பல என்னிடம் வந்தாலும், வெற்றி எனைக் கடந்து சென்றாலும், சோர்ந்து போய் நான் பல வேடிக்கை மனிதரைப் போல வீழ்வேன் என்று நினைத்தாயோ மன உறுதி எனக்கொன்றும் மாற்றாந்தாய் அல்ல, தோல்வி எனைக் கொல்லும் காலனும் அல்ல, வெற்றி எனக்கொன்றும் போதைப் பொருளல்ல நான் மயங்குவதற்கு’’—வெற்றியோ, தோல்வியோ எனது குறிக்கோள் மக்கள் நலன் காக்க பணியாற்றுவதுதான். எங்களது அரசு மக்களை நாடிச் செல்லும் அரசு.

''எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே
உன்னை இடற வைத்து
தள்ளப் பார்க்கும் குழியிலே
அத்தனையும் தாண்டி
காலைமுன் வையடா—நீ
அஞ்சாமல் கடமையிலே கண் வையடா''

என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பாடியதற்கு ஏற்ப, மாறி வரும் சூழ்நிலையில், பொதுமக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, சவால்களை சந்திக்கக்கூடிய செயல்திறன் பெற்ற ஒரு அமைப்பாக காவல்துறையை மாற்றி, மாநிலத்தில் பொது அமைதியைப் பாதுகாத்து, தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று, நாட்டிலேயே சிறந்த மாநிலமாக திகழும் வகையில், காவல்துறை பணியாற்ற தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும் என்றும், காவல்துறையினர் மேற்கொள்ளும் சட்ட ரீதியான பணிகளுக்கு எவ்வித இடர் வரினும், அவற்றை களைந்து, காவல்துறையினருக்கு பக்க பலமாக இவ்வரசு இன்றுபோல் என்றும் உறுதியாக இருக்கும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் மாறிவரும் இன்றைய சூழலை சமாளிக்க, நவீன ஊர்திகள் மற்றும் உபகரணங்கள், தீயணைப்பு வீரர்களுக்கு தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளில் மேம்படுத்தப்பட்ட பயிற்சித் திறன் போன்றவற்றை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சிறப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

2011–2012ஆம் ஆண்டு முதல் **2018–2019**ஆம் ஆண்டு வரை இத்துறைக்கான மானியக் கோரிக்கையின்போது **78** அறிவிப்புகள்

வெளியிடப்பட்டு, அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 62 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டும், மீதமுள்ள அறிவிப்புகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டும், விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு வரவுள்ளன.

2018ஆம் ஆண்டில் 4,269 அரசு கட்டடங்களுக்கு தீத்தணிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும், 8,993 கட்டடங்கள் தீப்பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது தவிர, பல்வேறு மருத்துவமனைகளில் அவசர காலங்களில் செயல்படுவது குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்துறை 22,601 தீ விபத்து அழைப்புகளில் 292.84 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், 69 மனித உயிர்களையும் காப்பாற்றியதோடு, 25,525 மீட்பு அழைப்புகளில் 4,610 மனித உயிர்களையும் இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றி, துறையின் அடிப்படை நோக்கமான ‘காக்கும் பணி எங்கள் பணி’ என்பதற்கேற்ப செயலாற்றி வருகின்றது.

மனித உயிர்களை மட்டுமின்றி, விலங்குகளின் உயிர்களையும் மீட்பது போன்ற பணிகளை வெற்றிகரமாக செய்து வருகிறது. வருங்காலத்திலும் அனைத்து விதமான ஆபத்துகளையும் நவீன முறையில் முன்கூட்டியே தடுக்கவும், பேரிடர் மேலாண்மையில் முன்கூட்டிய நடவடிக்கை எடுக்கவும், பேரிடர் மேலாண்மையில் உயரிய இலக்கை எட்டிடவும் இத்துறையின் செயல்திறன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கீழ் மிகவும் சிறப்பாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறை பணியாளர்களின் பணித் தரத்தை மேம்படுத்த ஏதுவாக கடந்த ஓராண்டில் பல சீரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துள்ளது. உதாரணத்திற்கு, வீரமரணமடைந்த தீயணைப்பு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகை

ரூ.5 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது. நிரந்தர ஊனமடைந்தவர்கள், கடும் காயமடைந்தவர்கள், சிறு காயமடைந்தவர்களுக்கு கருணைத்தொகைகள் இரட்டிப்பாக உயர்த்தி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறை பணியாளர்களுக்கு எதிர்பாரா மருத்துவ நல நிதிக்கு ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் ரூபாய் அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதன்மூலம் இரண்டு தீயணைப்பு வீரர்களின் கொடும் தீக்காயங்களுக்கு தக்க சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்களின் உயிர் காக்கப்பட்டது.

பணியில் இருக்கும்போது மரணமடையும் காவல் துறையினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதே நிவாரணத் தொகையை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாற்றுவோருக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டு இதுவரை 92 நபர்களின் குடும்பத்தினர் பயனடைந்துள்ளனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இத்துறைப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு மற்றும் முதுநிலை நிர்ணயிப்பதில் இருந்து வந்த தேக்க நிலை, 1,000த்திற்கும் மேற்பட்ட பணியிடங்களை தரம் உயர்த்துவதன் மூலம் அவர்களது நெடுநாளைய கனவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

3,980 தீயணைப்போருக்கு தீப்பாதுகாப்பு உடைகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அவசியத்தை கருதியும், அத்துறையினரின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்றும் இரண்டு கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் உருவாக்கப்படும். காவல்துறையினரும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரும் நம் அனைவரின் எதிர்பார்ப்புக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ற வகையில் சட்டப்படி

தங்கள் கடமைகளை செவ்வனே செய்து, வருங்காலத்திலும் அனைவரின் பாராட்டுதல்களைப் பெறுவார்கள் என்பது உறுதி. காக்கிச்சட்டைக்கு அடையாளமாகி, கடமையாற்றுவதற்கு எடுத்துக்காட்டாகி, பறிகொடுத்தவர்களின் கண்ணீரைத் துடைத்து, உடைமை இழந்தோரின் வேதனை அகற்றி, சட்டம் ஒழுங்கு சரியாமல் காத்து, களவை ஒடுக்கி, குற்றங்களை தடுத்து, ஏழை, எளியோரின் உரிமைகள் காத்து, சாதிச்சண்டைகளற்ற மத மோதல்களற்ற, ஆணவக்கொலைகளற்ற, அடக்குமுறைகளற்ற சமுதாயம் படைத்து தமிழகம் முழுவதும் அமைதி தழுவ காவல்துறையினர் அனைவரும் தாங்கள் சீருடை அணிந்த சிப்பாய்கள் என்பதை உணர்ந்து, சமத்துவம்—மகத்துவம் பெறும் வகையில், உலகுக்கே கலங்கரை விளக்கமாக நம் மாநிலத்தை மாற்ற வேண்டும் என்கின்ற கோரிக்கையோடு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினுடைய புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன். காலத்தினுடைய நேரம் கருதி, தலைப்புகளை மட்டும் நான் வாசிக்கின்றேன். மற்றவைகளை அவைக் குறிப்பிலே பதிவு செய்துக்கொள்ளவேணுமாய் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

❖ ❖ ❖

அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலங்களில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் காவல்துறையை நவீனப்படுத்தவும், அவர்கள் குடும்பத்தினர் பயனடையவும் கொண்டுவரப்பட்ட சிறப்புத் திட்டங்கள் குறித்து அளித்த விளக்கம் (19.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே காவல்துறைக்கு என்னென்ன நன்மைகள் செய்தார்கள் என்பதை பட்டியலிட்டுக் காட்டினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலத்திலும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலும் காவலர்களுக்கு ஏராளமான நன்மைகள் செய்யப்பட்டு இருக்கிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

1977 – 1987 வரைக்கும்

❖ 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் துவக்கப்பட்டது.

❖ பின்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989 இல் அது நிறுத்தப்பட்டது. பின்பு 1991ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீண்டும் தமிழக முதலமைச்சராக அரியணையில் அமர்ந்தவுடன், அது மீண்டும் துவக்கப்பட்டது.

❖ சிலை கடத்தல் பிரிவு 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

❖ காவலர்களுக்கு மானிய விலையில் பொருட்கள் முதன் முறையாக வழங்கப்பட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான்.

1991–1996

❖ 1991ஆம் ஆண்டு காவல் துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத் துறையினருக்கென தனியாக சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் தான்.

❖ 13.04.1992 அன்று 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' (All Women Police Station) துவக்கி வைக்கப்பட்டதும் மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சிக் காலத்தின் தான்.

❖ 1993ஆம் ஆண்டு "சிறப்பு இலக்குப்படை" (Special Task Force) ஏற்படுத்தப்பட்டது.

❖ 1994ஆம் ஆண்டு 'கடலோர பாதுகாப்புக் குழுமம்'**(Coastal Security Group)** ஏற்படுத்தப்பட்டது.

2001–2006

❖ 'நெடுஞ்சாலை ரோந்து முறை' (Highway Patrol System) அறிமுகப்படுத்தப்பட்டது.

2011–2018

❖ காவலர்களுக்கு சொந்தவீடு வேண்டும் என்ற அடிப்படையிலே, காவலர்கள் மற்றும் சீருடைப் பணியாளர்களுக்கு உங்கள் சொந்த இல்லம் திட்டம், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவு திட்டம். அந்த திட்டத்திலே மேலக்கோட்டையூர் கிராமத்திலே 7.60 ஏக்கரில் 2,673 வீடுகள் காவல்துறையினரின் குடும்பங்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், அதை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக கீழக்கோட்டையூரில் 52.40 ஏக்கரில் அங்கேயும் காவலர்களுக்கு சொந்த இல்லம் திட்டத்தின் மூலமாக வீடு கட்டுவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து,

அதுமட்டுமல்லாமல் இந்த சொந்த இல்லத் திட்டத்தை மேலும் 10 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்த வேண்டும் என்று இன்றைக்கு அரசு திட்டமிட்டு இருக்கின்றது. அது ஏற்கெனவே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அந்த திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

❖ காவல் பணியாளர்களின் ஆரோக்கியத்தை பேணிக் காக்க வருடம் ஒருமுறை முழுஉடற் மருத்துவ பரிசோதனை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி திட்டத்தின் கீழ் இயற்கை எய்தும் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை 1 இலட்சத்திருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

❖ காவலர்கள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 1 இலட்சத்திருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை துவக்கப்பட்டது.

❖ ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டத்தின் கீழ் சுமார் 1.20 இலட்சம் தமிழ்நாடு காவல் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளது.

❖ காவலர்களுக்கு பணிச்சுமை மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக ஏற்படும் மன அழுத்தத்தை போக்க பெங்களூருவில் உள்ள நிம்ஹான்ஸ் (National Institute of Mental Health And Neuro Science - NIMHANS) நிறுவனத்தினருடன் இணைந்து உளவியல் ரீதியான பயிற்சி வகுப்பு துவக்கப்பட்டுள்ளது. இதற்கு 10 கோடி ரூபாய் அரசு வழங்கப்பட்டுள்ளது. காவலர்கள் பணிநிமித்தமாக இருக்கின்றபோது, மன உளைச்சலுக்கு ஆளாகின்ற

போது, நிம்ஹான்ஸ் என்ற நிறுவனத்தின் மூலமாக அவர்களுக்கு அந்த மனஅழுத்தத்திலிருந்து விடுபடுவதற்காகவும் அவர்களது குடும்பத்தில் இருக்கின்றவர்களும் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்காகவும் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் கூடுதல் இயக்குநர் தலைமையில் பிரத்யேகமாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ அதுமட்டுமல்லாமல், பணியின் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு உயிரிழந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு 10 இலட்சம் ரூபாயும், அதேபோல, இரண்டு கண்கள், இரண்டு கால்கள், இரண்டு கைகள் இழந்தால் அவர்களுக்கு 4 இலட்சம் ரூபாயும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு வழங்கி வருவதோடு, தொடர்ந்து காவலர்களுக்காக ஏராளமான திட்டங்களை வாரி வழங்கி கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ அதேபோல, பணி உயர்வு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள், தமிழ்நாட்டில் தற்போது 150 பணிநிலைப் பதவிகள் (Cadre Post) இந்திய காவல் பணியில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 69 பதவிகள் காவல் துறை இயக்குநர், கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறைத் தலைவர் மற்றும் காவல் துறை துணைத் தலைவர் நிலையிலான பதவிகளாகும். இப்பணியிடங்களில், இந்திய காவல் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 81 பணியிடங்கள் காவல் கண்காணிப்பாளர் நிலையிலான பதவிகளாகும். இவற்றில் 47 பணியிடங்களில் இந்திய காவல் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 32 பணியிடங்களில் (10 மாவட்டங்கள், 14 துணை ஆணையர்கள் மற்றும் 8 சிறப்பு பிரிவுகள்) தமிழ்நாடு காவல் பணியில் நேரடியாக துணைக்காவல் கண்காணிப்பாளர்களாக / நேரடி காவல் உதவி

ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் (31 துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் 1 உதவி ஆய்வாளர்) தற்போது பதவி உயர்வில் காவல் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 2 பணியிடங்கள் காலியாக உள்ளன. பணிநிலை பதவிகளில் இந்திய காவல் பணி அல்லாத அதிகாரிகளை நியமிக்க விதிகளில் இடமுள்ளது. மேலும், 32 அதிகாரிகளின் நியமனம் அந்தந்த பதவிகளின் பணிநிலைகளை கருத்தில் கொண்டும், நிர்வாகக் காரணங்களாலும் நியமிக்கப்பட்டவை. தற்பொழுது பணிநிலைப் பதவிகளில் (Cadre Post) இந்திய காவல் பணி அதிகாரிகள் 58 விழுக்காடும், இந்திய காவல் பணி அல்லாத அதிகாரிகள் 40 விழுக்காடும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பணிநிலைப் பதவிகளில் நிருவாகக் காரணங்களுக்காக இந்திய காவல் பணியில் அல்லாத அதிகாரிகளை நியமிப்பது நடைமுறையில் இருந்துள்ளது. குறிப்பாக, 2006 முதல் 2011 முடிய உள்ள காலத்தில் 48 பணிநிலைப் பதவிகளில் (21 மாவட்டங்கள், 17 துணை ஆணையர்கள் மற்றும் 10 சிறப்பு பிரிவுகள்) இந்திய காவல் பணியில் அல்லாத அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, வழக்குக்கு சென்றால்கூட, தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டு இருக்கின்றது. குறிப்பிட்ட காலத்திலே, குறிப்பிட்ட ஆண்டு நிறைவடைந்தவுடன், அனைத்து மட்டங்களில் இருக்கின்ற காவல்துறை அதிகாரிகளுக்கும் பணி உயர்வு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

சிலைக் கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க திரு. பொன் மாணிக்கவேல் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டது குறித்து அளித்த விளக்கம் (19.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் 1983ஆம் ஆண்டு சிலை திருட்டு தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களில் இருக்கின்ற விலை மதிப்பற்ற சிலைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அந்த காலகட்டத்திலேயே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், திருக்கோயில்களில் உள்ள உலோகச் சிலைகள், ஆபரணங்கள், உண்டியல் மூலம் கிடைக்கப் பெற்றவை மற்றும் இதர விலை உயர்ந்தவைகளைப் பாதுகாத்திட, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒரு தனி அமைப்பை – திருக்கோயில் பாதுகாப்புப் படை என காவல்துறையில் ஏற்படுத்தி, கிரேடு 2 நிலையிலுள்ள 1,000 காவலர்களையும், 3,000 முன்னாள் இராணுவத்தினரையும் தமிழ்நாட்டிலுள்ள பல திருக்கோயில்களில் நியமித்தார்கள்.

திரு. பொன். மாணிக்கவேல் அவர்கள் சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் கடந்த 2012 முதல் 2015 வரை காவல் துறை துணைத் தலைவராகவும், 2015 முதல் 30.11.2018 வரை இத்துறையின் தலைவராகவும் பணியாற்றினார். ஏற்கெனவே அவர் அந்தச் சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் தான் பணியாற்றி கொண்டு இருக்கிறார். புதிதாக இல்லை. 2012ஆம் ஆண்டிலிருந்தே அவர் பணியாற்றி வருகிறார். 01.12.2018 முதல் இதே பிரிவின் சிறப்பு அதிகாரியாக

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டு, ஏன் என்றால் அங்கிருந்து பல ஆண்டுகாலமாக அதே சிலை தடுப்பு பிரிவிலே இருந்த காரணத்தினாலே, அவர் பணி உயர்வு வருகின்ற போது இரயில்வே துறைக்கு மாற்றப்பட்டார். இருந்தாலும் 01.10.2018 முதல் இதே துறையின் சிறப்பு அதிகாரியாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டு நாளது வரை சிறப்பு அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார்.

மேற்கண்ட காலகட்டத்தில் 31 சிலை கடத்தல் வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் 13 வழக்குகளில் மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார். மீதமுள்ள வழக்குகள் விசாரணையில் உள்ளன. இது தவிர, பல்வேறு காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட 333 சிலை கடத்தல் தொடர்பான வழக்குகள் மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவின்படி, காவல் துறை இயக்குநர் அவர்களால் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. இவருடைய பணிக் காலத்தில் 7 வழக்குகளில் மட்டுமே நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்துள்ளார். 2012லிருந்து 2018வரைக்கும் 6 வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை பெற்றுள்ளனர். 1983 முதல் 10.02.2012 வரை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவில் 259 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. சராசரியாக, அந்த 28 வருட காலகட்டத்தில், 9 வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் பதியப்பட்டுள்ளன. இவருடைய பணிக் காலத்தில் சராசரியாக வெறும் 4 வழக்குகள் தான் பதியப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி திரு.பொன். மாணிக்கவேல் சிலை திருட்டு மற்றும் கடத்தல் தடுப்புப் பிரிவின் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டு, அப்பிரிவிற்கு அவர் கோரியபடி 4 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 7 துணை கண்காணிப்பாளர்கள், 18 ஆய்வாளர்கள், 45 உதவி ஆய்வாளர்கள், 13 சிறப்பு உதவி

ஆய்வாளர்கள் மற்றும் 125 இதர காவலர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு, அவர்கள் அப்பிரிவில் அறிக்கை செய்து அயற் பணியாக பணியாற்றி வந்தனர்.

உச்சநீதிமன்ற உத்தரவின்படி சிறப்பு அதிகாரிக்கு நிதி மற்றும் வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பாக அரசாணைகளை அரசு வெளியிட்டுள்ளது.

சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட காவலர்கள் எண்ணிக்கையானது 1 – காவல் துணை கண்காணிப்பாளர், 5 – காவல் ஆய்வாளர்கள், 3 – உதவி ஆய்வாளர்கள் மற்றும் 20 – இதர காவல் ஆளினர்கள் ஆகும். உயர் நீதிமன்ற ஆணைக்கிணங்க 204 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட காவலர்களின் எண்ணிக்கையை விட 600 சதவீதத்திற்கும் அதிகமாக, குறிப்பாக உதவி ஆய்வாளர் முதல் கூடுதல் துணை கண்காணிப்பாளர் வரை இதற்கும் அதிகமான சதவீதத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கான செலவானது, கடந்த 01.04.2017 முதல் 21.07.2017 வரை 24 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் ஆகும். இந்த செலவானது 21.07.2017 முதல் 30.11.2018 வரை 22 கோடியே 76 இலட்சத்து 43 ஆயிரத்து 35 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் பிற காவல் பிரிவில் இருந்து சிலை திருட்டு தடுப்புப் பிரிவிற்கு அயல்பணியாக வந்த காவலர்களின் சம்பளம் மற்றும் வாகன எரிபொருள் செலவும் அடங்கும்.

சிலை திருட்டு தடுப்புப் பிரிவின் சிறப்பு குழுவிற்கு 31 நான்கு சக்கர வாகனங்களும், 29 இரு சக்கர வாகனங்களும், 15 வாக்கி டாக்கி கருவிகளும், 2 VHF கருவிகளும், 15 கணினிகள், 12 UPS, 12 பிரிண்டர் (கலர் பிரிண்டர் உட்பட), 5 வீடியோ கேமிரா,

10 ஸ்டில் கேமிரா மற்றும் தேவையான மரச்சாமான்களும் சிலை திருட்டு கடத்தல் தடுப்புப் பிரிவின் சிறப்பு அதிகாரி காவல் துறை தலைவர், சிலை திருட்டு தடுப்புப்பிரிவின் பொறுப்பு அதிகாரியாக இருந்தபோதே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சிலை திருட்டு தடுப்புப் பிரிவு சிறப்பு அதிகாரி மற்றும் அவர்களின் தனிக் குழுக்கள் தங்குவதற்கு கமேண்டோ பள்ளி, திருச்சிராப்பள்ளி மற்றும் காவல் துறை துணைத்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் பழைய முகாம் அலுவலகம் வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணம் நவீன கட்டுப்பாட்டு அறையில் 2 அறைகளும் மற்றும் ஒரு பெரிய ஹாலும் மற்றும் கிண்டியிலுள்ள பொருளாதார குற்றப் பிரிவில் சிறப்பு அதிகாரிக்கு அலுவலகமும் வழங்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறப்பு முகாமிற்கு ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு கணினி உதவியாளரும் அவருக்கு அன்றாடப் பணிகளில் உதவி புரிந்திட வழங்கப்பட்டுள்ளது. எனவே, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தேவைக்கேற்ப அவ்வப்போது அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. பொன் மாணிக்கவேல் அவர்களே தனது 19.03.2018 தேதியிட்ட கடிதத்தில் தன் பிரிவுக்கு தேவை எதுவும் இல்லை என எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு மீது விசாரணை மேற்கொண்ட உச்ச நீதிமன்றம் 12.04.2019 தேதியிட்ட தனது உத்தரவில், தமிழ்நாடு அரசின் மேல்முறையீட்டு மனு பகுதி அளவு ஏற்கப்பட்டு உள்ளதாகவும், அதன்படி சிலை கடத்தல் மற்றும் தடுப்புப் பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநர் திரு. அபய் குமார் சிங், இ.கா.ப., அவர்கள், அப்பிரிவின் தலைமைப் பொறுப்பில் தொடர்வார் என்றும், வழக்குகளின் விசாரணை குறித்து அவ்வப்போது காவல்

துறை கூடுதல் இயக்குநரிடம், சிறப்பு அதிகாரி திரு. பொன் மாணிக்கவேல் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், திரு.பொன் மாணிக்கவேல் தன்னிச்சையாக கைது நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் மாண்புமிகு நீதிபதிகள் தெரிவித்தனர் என இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

10.06.2019 அன்று, சிலை தடுப்புப் பிரிவு சிறப்பு அதிகாரி திரு. பொன். மாணிக்கவேல் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளார் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அனைத்து வசதிகளும் அவருக்கு செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே **2012**லிருந்து அவர் சிலை தடுப்பு பிரிவிலே அங்கே பணிபுரிந்து கொண்டிருக்கிறார் என்பதையும், இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். சிலை கடத்தல் தடுப்பு பிரிவு அந்த துறைக்கு தேவையான அனைத்து வசதிகளும் அம்மாவுடைய அரசு செய்து கொடுக்கும் என்பதையும் இந்த தருணத்திலே தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி குறித்து அளித்த விளக்கம் (20.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதே கோரிக்கையை இருபக்கமும் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை மேலும் 50 இலட்சம் ரூபாய் உயர்த்தி, ரூ.2½ கோடியிலிருந்து ரூ.3 கோடியாக வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

8 வழிச்சாலைத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (20.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தொலைக்காட்சியில் வந்த செய்தியைச் சொன்னார்கள். அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.தயாநிதி மாறன் அவர்கள், 8 வழிச்சாலை மறுபடி வர வேண்டுமென்று பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். 8 வழிச்சாலையைப் பொறுத்தவரையில், விதிகளுக்குட்பட்டுதான் நாங்கள் செய்து வருகிறோம். அவர்களது ஆட்சிக் காலத்திலும் நடந்தது. அவர்களது கட்சியைச் சேர்ந்தவர் மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தார். அந்தக் காலக்கட்டத்திலும், சுமார் 734 கி.மீ. அளவிலான சாலைப் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அப்போதும் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. சாலைகள் அவசியம் தேவை. நாளுக்குநாள் போக்குவரத்து வாகனங்கள் அதிகரிக்கின்ற காரணத்தால், அதற்கேற்றவாறு சாலைகள் அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது மத்திய அரசின் திட்டம். மத்திய அரசு, இத்திட்டத்தை தமிழகத்தில் கொண்டு வருவதாகச் சொன்னது. ஒரு திட்டத்தைக் கொண்டுவரும்போது, அதை நாம் வரவேற்றோம். ஆகவே, மாநில அரசைப் பொறுத்தவரையில், உட்கட்டமைப்பு மிகவும் முக்கியம். புதிய புதிய சாலைகள் வந்தால்தான், புதிய புதிய தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே, 8 வழிச் சாலைத் திட்டம், தற்போது Express Way திட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது.

❖ ❖ ❖

காவேரி நதிநீர் பிரச்சினை குறித்து அளித்த விளக்கம் (20.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரி பிரச்சினை, இது ஒரு மிக உணர்வுபூர்வமான பிரச்சினை. காவேரி நதிநீர்ப் பிரச்சினையை பொறுத்தவரை, சுமார் 15 ஆண்டு காலம் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற வாய்ப்பு உங்களுக்கு கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டு இருக்கலாம். அதைத்தான் அவர் சொல்கிறார். மிகப் பெரிய வாய்ப்பு உங்களுக்கு கிடைத்தது, அந்தக் காலக்கட்டத்தில் தவற விட்டதன் காரணமாக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தின் மூலமாக பல்வேறு தீர்ப்புகளை பெற்று நாம் அமல்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது என்ற அடிப்படையிலே தான் அவர் பேசினாரே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அந்த வாய்ப்பு உங்களுக்கு கிட்டியது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி காவேரி நதிநீர் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்பட்டு இருந்தால், இந்த பிரச்சினைக்கு இடம் இருந்திருக்காது. 2007இல் நடுவர்மன்ற இறுதி தீர்ப்பு வந்து 2 மாதம் ஆயிற்று. அந்த 2 மாத இடைவேளையில், நீங்கள் அனைத்தும் செய்து இருந்தால் கர்நாடகாவோ, கேரளாவோ, பாண்டிச்சேரியோ நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது. அதை தவறவிட்டவர்கள் நீங்கள் தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சத்தமாக பேசினால் ஒன்றும் நடக்காது. நடந்தது நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரியும். காவேரி நதிநீர்ப் பிரச்சினை பற்றி நம்மைவிட வெளியில் இருப்பவர்களுக்கு அதிகமாக தெரியும். ஏழை எளிய பாசன

விவசாயிகளுக்கு முழுமையாக தெரியும். 2007இல் நடுவர்மன்ற இறுதி தீர்ப்பு வந்தது. 2 மாத காலம் இருந்தது. நீங்கள் ஆட்சி அதிகாரத்திலே, மத்தியிலே இருந்தீர்கள், மாநிலத்திலும் இருந்தீர்கள். நீங்கள் நினைத்திருந்தால் அந்த 2 மாத காலத்திலே நமக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றி இருக்கலாம். தேவையான அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசிதழில் வெளியிட்டு, அதற்கு ஒரு வடிவம் கொடுத்து இருந்தால், நமக்கு இந்த பிரச்சினையே வந்திருக்காது. அந்த நேரத்திலே, தவறவிட்டு விட்டீர்கள். உச்சநீதிமன்றத்தில் கேரளா, கருநாடகா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்கள் வழக்கு தொடர்ந்தார்கள் என்று சொன்னீர்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பலமுறை அப்பொழுது இருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.மன்மோகன் சிங் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். அப்பொழுது நீங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வருகின்றபோது, இந்த நடுவர்மன்ற இறுதி தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று எவ்வளவோ முறை கடிதம் எழுதினார்கள், நேரடியாக போய் கொடுத்தார்கள். எதுவும் நடக்காத காரணத்தினால், உச்சநீதிமன்றம் போய் தான் நடுவர்மன்ற இறுதி தீர்ப்பை பெற்றதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அம்மா தான். இதை எல்லாம் கோட்டைவிட்டுவிட்டு, பிறகு நடுவர்மன்ற தீர்ப்பின்படி நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலே மீண்டும் உச்சநீதிமன்றத்திற்கு சென்று தான் நாம் இறுதி தீர்ப்பினை பெற்று இருக்கிறோம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டத்தை நடத்தி பெற்ற வெற்றி, வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால், இது ஒரு உணர்வுபூர்வமான பிரச்சினை. கிடைக்கின்ற வாய்ப்பை தவறவிட்டுவிட்டீர்கள் என்று தான் சொல்கிறோம். வேறு ஒன்றும் கிடையாது.

அதிகாரம் ஒருமுறை தான் கிடைக்கும். அதை பயன்படுத்துவது தான் உண்மையாக மக்களுக்கு தொண்டு செய்கின்ற நிலை. அதை நீங்கள் தவறவிட்டுவீட்டீர்கள். இரண்டு மாதங்கள் இருந்தது. அமைச்சரவை இலாகா பெறுவதற்கு எத்தனை முறை நீங்கள் டெல்லி போய்விட்டு வந்தீர்கள். ஏன் இதை நிறைவேற்ற முடியாது. இதுவே திரு.வாழப்பாடி இராமமூர்த்தி இருந்தார். அவர் காவேரி பிரச்சினைக்காக தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். ஆகவே, அதற்கு நீங்கள் ஏதாவது குரல் கொடுத்தீர்களா? இந்த இரண்டு மாத இடைவெளி இருக்கும்போது தானே, நம்முடைய உரிமையைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் தானே அவர்கள் நீதிமன்றத்திற்கு போனார்கள். நீதிமன்றத்திற்கு போன காரணத்தினாலே பல ஆண்டு காலம் தீர்ப்பு கிடைக்கப் பெறாமல் இருந்தது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய வாத திறமையால் எந்த உண்மையையும் மறைக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்கள் சமாளிக்கிறார். தவறவிட்டுவீட்டீர்கள், தவறவிட்டுவிட்ட பிறகு அதை நியாயப்படுத்தி பேசுவது எந்த விதத்திலும் சரியாக இருக்காது. நமக்கு கிடைக்கின்ற வாய்ப்பை, அதை பயன்படுத்தி இருந்தால் தமிழக விவசாய பெருமக்கள் நன்மை பெற்று இருப்பார்கள். டெல்டா பாசன விவசாய மக்களுக்கு தேவையான நீர் கிடைத்திருக்கும். 2007லிருந்து 2019 வரை போராட வேண்டிய அவசியம் இருந்திருக்காது என்பதைத் தான் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

அணை பாதுகாப்பு சட்ட மசோதா குறித்து அளித்த விளக்கம் (20.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அணைப்பாதுகாப்பு சட்ட மசோதா சம்பந்தமாக அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார். அதற்கு பதிலளிக்கின்றேன்.

மத்திய அரசு 12.12.2018 அன்று அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா, 2018 ஐ நாடாளுமன்ற மக்களவையில் அறிமுகம் செய்தது. இது தொடர்பாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 14.12.2018 அன்று நான் எழுதிய கடிதத்தில், இந்த சட்ட மசோதாவை திரும்பப் பெறுமாறு நீர்வள அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும் வரை இம்மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இந்த மசோதாவிற்கு முன்பாக, மத்திய அரசு ஏற்கெனவே வரைவு அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா, 2016 ஐ நாடு முழுமைக்கும் பொருந்தும் வகையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்பாக அனைத்து மாநிலங்களின் ஆலோசனை / கருத்துகளை கோரியது. ஒரு மாநிலத்திற்கு சொந்தமானதாக இருந்தும் வேறொரு மாநிலத்தில் அமைந்திருக்கும் அணைகளுக்கென தனிப்பட்ட சட்டப்பிரிவு ஏதும் இந்த மசோதாவில் இடம் பெறாததால், இந்த மசோதா தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதல்ல. எனவே, 11.09.2016 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு இந்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி கடிதம் எழுதப்பட்டது. 15.06.2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மீண்டும் இது தொடர்பாக கடிதம் எழுதப்பட்டது.

மேலும், இதே கருத்தினை வலியுறுத்தி **26.06.2018** அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **26.06.2018** அன்று தமிழ்நாடு மக்களின் கருத்துகளை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று **14.12.2018** நாளிட்ட கடிதத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா, **2018**இன் பிரிவு **23(1)**இன் படி ஒரு மாநிலத்திற்கு சொந்தமான அணை வேறொரு மாநிலத்தில் அமைந்திருக்கும் பட்சத்தில், அந்த அணை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரும். தமிழ்நாட்டிற்கு சொந்தமான முல்லைப்பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளும் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்களின் அடிப்படையில், தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டு, இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்த அணைகளை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ், கொண்டு வந்து அணையின் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் அமைந்துள்ள மாநிலங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழுவை அமைப்பது தமிழ்நாட்டின் உரிமைகளில் தலையிடுவதாகும். இது அரசியல் சாசன அமைப்பிற்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் முரணானதாகும். எனவே, அணைப் பாதுகாப்பு மசோதா, **2018**இன் பிரிவு **23(1)**ஐ, அணை வேறு மாநிலத்தில் அமைந்திருந்தாலும் அந்த அணை எந்த மாநிலத்திற்கு சொந்தமோ அந்த மாநிலத்தின் மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும்படி திருத்தம் செய்ய வேண்டும் எனவும், முல்லைப் பெரியாறு

அணையின் மீதான தமிழ்நாட்டின் உரிமை உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு 07.05.2014 அன்று வழங்கிய தீர்ப்பில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 14.12.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், அணையை பராமரிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு, அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, அணை அமைந்துள்ள காடுகள்/ வன விலங்குகள் சரணாலயத்திற்குள் சென்று வர முழு உரிமை அளிக்கும் வகையில் பிரிவு 23இன் கீழ் ஒரு துணைப் பிரிவினை கூடுதலாக இந்த மசோதாவில் சேர்க்க வேண்டும் எனவும் 14.12.2018 நாளிட்ட கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் 27.01.2019 அன்று அளித்த கோரிக்கை மனுவில் உள்ள பல்வேறு கோரிக்கைகளில் ஒன்றான அணைப் பாதுகாப்புச் சட்ட மசோதா, 2018 குறித்து தனது 15.06.2018 மற்றும் 14.12.2018 நாளிட்ட கடிதங்களைச் சுட்டிக்காட்டி, தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் அமைப்பது மாநிலங்களின் உரிமையில் தலையிடுவதாகும் என்பதைக் குறிப்பிட்டு, அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும் வரை அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா, 2018ஐ நிறைவேற்றக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதே கருத்து மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் 15.06.2019 அன்று அளித்த கோரிக்கை மனுவிலும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

அணைப் பாதுகாப்பு சட்ட மசோதா, 2018ஐ திரும்பப்பெற வைத்து தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

அண்மையில் மத்திய அமைச்சரவையின் பொருளாதார கமிட்டி அணை பாதுகாப்பு மசோதாவிற்கு அனுமதி அளித்தாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. முன்பு இம்மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தும்போது தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிர எதிர்ப்பினை தெரிவித்தனர். அதனால் அந்த மசோதா சட்டமாகவில்லை.

முல்லைப்பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளின் மீதான தமிழ்நாட்டின் உரிமையினை நிலைநாட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுக்கும் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

மேகதாது அணை குறித்து அளித்த பதிலுரை (20.07.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரி பிரச்சினை குறித்த தமிழ்நாட்டினுடைய நிலைப்பாட்டை 2017–2018ஆம் ஆண்டில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்திலேயே நான் பேசியபொழுது, அப்போது கர்நாடகத்தின் முதலமைச்சராக இருந்த திரு.சித்தராமைய்யா அவர்கள் அதற்கு எதிர்ப்பும் தெரிவித்தார்கள். நம்முடைய நிலைமையை அந்த நிதி ஆயோக் கூட்டத்திலே அதற்கு முந்தைய ஆண்டே தெரிவிக்கப்பட்டு விட்டது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு நிரந்தர ஆணையம் நியமிக்கப்பட வேண்டும் என்று இங்கே தெரிவித்தீர்கள். இதுகுறித்து நீதிமன்றத்திலே வழக்கும் நாம் தொடர்ந்திருக்கிறோம். உச்சநீதிமன்றத்திலே நிரந்தர மேலாண்மை ஆணையம் அதற்கு ஒரு தலைவரை நியமிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசால் வழக்கும் தொடரப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மேகதாது அணை கட்டுகின்ற செய்தி வந்தவுடன், 18.11.2014லேயே உச்சநீதிமன்றத்தில் இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளோம். ஏற்கனவே, இதே அவையில் பலமுறை மேகதாது அணை கட்டுகின்ற விவகாரம் குறித்து நாம் பேசியிருக்கின்றோம். இப்போதுகூட, மேகதாது அணை நீங்கள் சொன்னது போல, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளது பற்றி சொன்னீர்கள், இதையும் நாங்கள் மேற்கோள்காட்டி உச்சநீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களுக்கும், இதற்கு எந்தவிதமான

அனுமதியும் கொடுக்கக்கூடாது, நிராகரிக்க வேண்டுமென்றும் நாம் கடிதம் எழுதி இருக்கின்றோம். நான் கடந்த முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்திக்கின்றபோதும் சரி, புதிதாக ஜலசக்தி அமைச்சராக பதவி ஏற்றிருக்கும் புதிய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை நானும், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களும் சந்திக்கின்ற போதும், இதைப்பற்றி எடுத்து சொல்லி இருக்கின்றோம். மேகதாது அணை கட்டக்கூடாது, கட்டப்பட்டால் தமிழகம் வறட்சியாக ஆகிவிடும், பாலைவனமாக ஆகிவிடும். எனவே, அதை கைவிட வேண்டுமென்று அழுத்தந்திருந்தமாக அவரிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றோம் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

வெங்காய விலை உயர்வு, பணிஓய்வு மூலமாக ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் மற்றும் விவசாயிகளுக்கு அரசு செயல்படுத்திய திட்டங்கள் குறித்து அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடுமையாக தொடர்ந்து மழைபெய்த காரணத்தினாலே வெங்காயத்தினுடைய விளைச்சல் குறைந்தது. வெங்காயம் நிலத்திலேயே அழுகி போய்விட்டது. அதனால் வெங்காய விலை உயர்ந்தது. வெங்காய விலை உயர்வு நிரந்தரம் கிடையாது. 95 நாட்களில் விளையக்கூடிய ஒரு விவசாயப் பொருள். ஆகவே, தொடர்ந்து மழை பெய்த காரணத்தினாலே, அந்த விளைநிலத்தில் உள்ள வெங்காயம் அழுகிய காரணத்தினால் தான், விலை உயர்ந்ததே தவிர இயற்கையாக விலை உயரவில்லை. இப்போது வெங்காய விலை படிப்படியாக குறைந்து கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பணிஓய்வு பெறுகின்றபோது, அதற்கு முன்பாகவே தேர்வு செய்து வைத்திருந்தால், அந்த காலிப்பணியிடங்களை நிரப்பலாம் என்று சொன்னீர்கள். அதை இப்பொழுது இந்த அரசு நடைமுறைப்படுத்தி கொண்டு இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித்துறை, காவல்துறைகளில் எல்லாம், எப்பொழுது பணிஓய்வு பெறுகிறார்களோ, அதற்கு முன்பாகவே அந்த காலிப் பணியிடங்களுக்கு தேவையான நபர்களை தேர்வு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு, அதன் அடிப்படையிலே இப்பொழுது பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.பிச்சாண்டி அவர்கள் பேசுகின்ற போது, விவசாயிகளுக்கு எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். விவசாயிகள் குறிப்பிட்ட காலத்தில் பயிர் செய்ய வேண்டும் என்பதற்காக, வட்டியில்லாமல் அதிக அளவில் பயிர்க்கடன் வழங்கிய அரசு அம்மாவுடைய அரசு. அதேபோல், புயல் வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை பெற்றுத்தந்ததும், வழங்கிய அரசும் அம்மாவுடைய அரசு தான். இதுவரை வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உங்களுடைய அரசு எதுவுமே கொடுக்கவில்லை. அம்மாவுடைய அரசுதான் இழப்பீட்டுத் தொகையை தந்தது. அதற்கும் மேலாக, விவசாயிகள் பயிர் செய்து, அது கருகிபோகின்ற போது, அதனால் இழப்பு ஏற்படுகிறது. அதை பயிர்க்காப்பீட்டு மூலமாக இன்றைக்கு இந்தியாவிலேயே, பயிர்க் காப்பீட்டு திட்டத்திலே அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சுமார் 3 ஆண்டுகளில் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்ததும் அம்மாவுடைய அரசு தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, கடந்தமுறை அமெரிக்கன் படைப்புழுவால் தாக்கப்பட்டு மக்காச்சோளம் கடுமையாக பாதிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு.பெரியசாமி அவர்கள் கூட, நம்முடைய திண்டுக்கல் மாவட்டத்திலே அதிகளவில் பாதிக்கப்பட்டது என்று கடந்த ஆண்டு அவையிலே தெரிவித்தார்கள். இந்த ஆண்டும்கூட, பல்வேறு இடங்களிலே தமிழகத்திலே மக்காச்சோளம் அமெரிக்கன் படைப்புழுவால் தாக்கப்பட்டது. இது குறித்து அரசுக்கு தகவல் கிடைத்தவுடன், உடனடியாக வேளாண்துறை அதிகாரிகளை அனுப்பி, எந்தளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று ஆய்வு செய்து, அரசாங்கமே எங்கெங்கெல்லாம் மக்காச்சோளம் அமெரிக்க படைப்புழுவால் தாக்கப்பட்டதோ, அங்கெல்லாம் மருந்து தெளித்து, விவசாயிகளுக்கு உதவிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

சட்டமன்ற விதி 110இன் கீழ், அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து அளித்த பதில் (07.01.2020)

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், 2011–2012 முதல் 2016–2017 முடிய 6 ஆண்டுகளில் சட்டமன்ற விதி எண். 110இன் கீழ் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட மொத்த அறிவிப்புகள் 1055, அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 822 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். 230 அறிவிப்புக்கான திட்டப்பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன, 2 அறிவிப்புகளின் திட்டம் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையிலும், ஒரு அறிவிப்பு மத்திய அரசின் பரிசீலனையிலும் உள்ளன.

அதேபோல, 2017–2018 முதல் 2019–2020 முடிய மூன்றாண்டுகளில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, சட்டமன்ற விதி எண்.110இன் கீழ் மொத்தம் 453 அறிவிப்புகளில் 417 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 114 அறிவிப்புகளின் திட்டங்கள் முழுமையாகநிறைவேற்றப்பட்டுள்ளன, 303 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் இருக்கின்றன. 26 அறிவிப்புகளுக்கு திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 9 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும், 1 அறிவிப்பு சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும்

உள்ளன. மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை, ரூபாய் 34,853 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டில் 47,828 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ரூபாய் 24,090 கோடியே 88 இலட்சம் மதிப்பீட்டில் 7,950 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, 110–விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட பெரும்பாலான அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது குறித்து அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காலையிலிருந்து நான் கேட்டுக்கொண்டு தான் இருக்கின்றேன். இலங்கை அகதிகள் பற்றி பேசினீர்கள். இப்பொழுது நான் நேரடியாகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை கேட்கின்றேன். எத்தனை ஆண்டு காலம் மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இருந்தீர்கள். அப்பொழுது எல்லாம் இவர்களுக்கு குடியுரிமை பெற்று தருவதற்கு உங்களுக்கு ஞாபகம் வரவில்லையா. ஏன் மறந்தீர்கள். உங்களுக்கு அதிகாரம் கையில் இருந்தது. அதைத்தான் இன்று மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் சொல்லிக் கொண்டு இருக்கிறார். 12 ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்தீர்கள். அதற்கான வாய்ப்பை தமிழ்நாடு மக்கள் கொடுத்தார்கள் எதற்காக, ஆட்சியிலிருந்து செய்வதற்கு தான். ஏன் அதை தட்டிக் கழித்தீர்கள்? இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை பெற்று தரவில்லை, தரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, 12 ஆண்டு காலம் மத்தியிலே அமைச்சராக இருந்தீர்களா இல்லையா? அந்த அதிகாரம் எதற்காக கொடுத்தார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு பாதிப்பு வருகின்றபோது, அந்த பாதிப்பிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகத்தானே கொடுத்தார்கள். நீங்கள் செய்தீர்களா? குடியுரிமை பெற்றுத் தந்தீர்களா? இல்லையே. இன்றைக்கு மட்டும் வக்காலத்து வாங்கி கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் எங்களை பொறுத்தவரைக்கும், மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இல்லை என்றாலும், எங்களுடைய கொள்கையிலிருந்து எப்பொழுதும் விலக மாட்டோம். உறுதிபட இருப்போம். அதுமட்டுமல்ல, இலங்கையிலிருந்து வந்து தமிழகத்தில் இருக்கின்ற அந்த தமிழர்களுக்கு அனைத்து உதவிகளும் நாங்கள்

செய்து வருகின்றோம். உங்களுடைய ஆட்சிக்காலத்திலே, மத்திய அரசாங்கம் கொடுத்த உதவியைத் தான் நீங்கள் செய்தீர்கள். வேறு எந்த உதவியையும் நீங்கள் செய்யவில்லை. ஆனால், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற, தமிழ்நாட்டு மக்களுக்கு அரசின் சார்பில் கொடுக்கப்படுகின்ற அனைத்து உதவிகளும் அந்த இலங்கை வாழ் தமிழர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, அண்மையிலே நான் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களை சந்தித்த போது, இதை நான் தெரிவித்தேன். இந்த NRC எங்களுக்கு சம்மதம் அல்ல. ஒரு அகதியாக இங்கே வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நிச்சயம் நீங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பரிகாரம் செய்யப்படும் என்ற வார்த்தையையும் அவர் சொல்லி இருக்கிறார் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, நீங்கள் செய்யத்தவறியதை, நாங்கள் செய்து கொடுக்கின்றோம். அந்த இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இரட்டை குடியுரிமை வேண்டும் என்று கேட்கின்றார்கள். அவர்களுக்கு எங்களுடைய அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும். அதை பெற்றுத் தருகின்ற வரை நாங்கள் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி கொண்டு இருப்போம்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கும் பொங்கல் தொகுப்பு 1000 ரூபாயும், அரிசி, என்னென்ன தமிழ்நாட்டு மக்கள், அரசு நலத்திட்ட உதவிகள் பெறுகிறார்களோ அத்தனையும் அந்த மக்களுக்கு கொடுக்கின்றோம். காலையில்கூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக சொன்னார்கள், அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்குக் கூட அதிலே BC, MBC என்று இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட பிரிவு இல்லாமல், இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதியாக வந்திருக்கின்ற படிக்கின்ற மாணவர்களுக்குக் கூட Scholarship–ம் அம்மாவுடைய

அரசு வழங்கி கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நல்ல அனுபவம் வாய்ந்தவர், திறமையாக பேசக்கூடியவர், எந்த நேரத்திற்கு எப்படி பேச வேண்டுமோ, அப்படி அழகாக பேசி சமாளிக்க திறமையுள்ள மூத்த உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள். ஆகவே, எங்களைப் பொறுத்தவரைக்கும், எங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்பு மூலமாக மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி இலங்கை வாழ் தமிழருக்கு நன்மை செய்வதற்காக பாடுபடுவோம் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம்.

❖ ❖ ❖

ஜல்லிக்கட்டு போராட்டம் விசாரணை, ஸ்டெர்லைட் விசாரணை மற்றும் புதிய நெல் ரகம் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு குறித்து அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜல்லிக்கட்டுபோராட்டம்நடைபெற்றபோதுதமிழகத்தில்பல்வேறு இடங்களிலே போராட்டங்கள் நடைபெற்றது. வன்முறைகளும் நடைபெற்றது. அதை எல்லாம் விசாரிப்பதற்காகத் தான் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நியமிக்கப்பட்டு, அவர் தலைமையிலே இன்றைக்கு விசாரணை கமிஷன் நடைபெற்று வருகிறது. ஒரு இடத்தில் நடைபெறவில்லை. தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களை விசாரித்து கொண்டு இருக்கிறார்கள். அதுதான் காலதாமதம் ஆகின்றது. அதுவும் விரைவாக கமிஷனுடைய அறிக்கையை வழங்க வேண்டும் என்று அவர்களிடத்திலே நாங்களும் தெரிவித்திருக்கின்றோம். ஆகவே, விரைந்து அந்த கமிஷன் தனது அறிக்கையை வழங்கும் என்று நாங்களும் எதிர்பார்த்து கொண்டு இருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர், ஒரு மூத்த உறுப்பினர், சிறந்த வழக்கறிஞர். அவர் அந்த வழக்கறிஞர் தோரணையிலே இங்கே கருத்துகளை எடுத்து வைக்கின்றார். ஸ்டர்லைட் பிரச்சனை குறித்து நீதிமன்றம் வரை சென்று, நீதிமன்றம் சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்து, விசாரிக்கப்பட்டு வருகிறது. மாநில அரசும் அங்கே நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை நியமித்து, விசாரணை கமிஷனை நியமித்து, விசாரணை நடைபெற்று கொண்டு இருக்கிறது. ஆகவே, உண்மைதன்மையை அறிந்து தான் அதற்குண்டான

நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே, எடுத்த உடனே எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இது ஒரு மிகப் பெரிய பிரச்சனை. நீதிமன்றத்திற்கு சென்று, நீதிமன்றத்தின் மூலமாக நடைபெற்று கொண்டிருக்கின்ற சம்பவம், இப்பொழுது கூட நீதிமன்றத்திலே இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய நெல் ரகத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்று இங்கே கருத்தை சொல்லி இருக்கின்றார்கள். கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகத்திலே ஆராய்ச்சி நிறுவனத்திற்காக 5 கோடி ரூபாய் இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். புதிய நெல் ரகம், புதிய தானிய வகைகளை கண்டுபிடிப்பதற்காக, அதிக விளைச்சல் தரக்கூடிய தானியத்தை கண்டுபிடிப்பதற்காக கோவை வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையத்திற்கு அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

குடிமராமத்துத் திட்டம் குறித்து அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து விவசாய பெருங்குடி மக்களும் தூர் வார வேண்டும் என்று கோரிக்கை வைத்து கொண்டு இருக்கிறார்கள். பொதுமக்களும் கோரிக்கை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் தூர்வாருது சரியில்லை என்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார். அவரும் விவசாயம் செய்து கொண்டு தான் இருக்கிறார் என்று நினைக்கிறேன். நானும் விவசாயம் செய்து கொண்டு தான் இருக்கின்றேன். ஆகவே, தூர்வாருகின்ற பொழுது, அந்த வண்டல் மண்ணை தான் அகற்றுகின்றார்கள். அதில் படிந்த வண்டல் மண் தான் அகற்றப்படுகிறது. அப்படி வண்டல் மண் அகற்றுகின்ற பொழுது, பெய்கின்ற மழைநீர் முழுவதும் அந்த ஏரியில் சேமித்து வைக்கப்படுகின்றது, ஊரணியில் சேமித்து வைக்கப்படுகின்றது, குட்டையில் சேமித்து வைக்கப்படுகின்றது. ஆகவே, பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு நீர்கூட வீணாகக்கூடாது என்பதற்காக தான் இந்த தண்ணீர் சேமிப்பை அரசு செயல்படுத்தி கொண்டு இருக்கிறது.

ஏனென்றால் 2 வருடங்களுக்கு முன்பு எவ்வளவு கடுமையான வறட்சி என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். அதுவும் டெல்டா பாசன விவசாயியாக இருக்கின்றீர்கள். அந்த நெற்பயிர் முதிர்ச்சி அடைந்தபோது, 2 வருடத்திற்கு முன்பு பார்த்தீர்களானால் தண்ணீர் இல்லாததால் 2 இலட்சம் ஏக்கர் காய்ந்துபோய் விட்டது. ஆகவே, குளங்கள் தூர் வாரப்பட்டு இருந்தால், அங்கே கொள்ளளவு அதிகமாகி நீர் அதிகமாக தேக்கி வைத்திருக்க முடியும். அப்படி நீர் அதிகமாக தேக்கி வைத்திருந்தால், இந்த 2 இலட்சம் ஏக்கரை காப்பாற்றி இருக்கலாம். ஆகவே, இதையெல்லாம் தெரிந்து தான்,

விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, விவசாயிகளின் பங்களிப்போடு தான் குடிமராமத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கொண்டு இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி, அந்த விவசாயிகளே பயன்படுத்துகிறார்கள். ஒன்று ஏரி ஆழமாகிறது, மற்றொன்று விவசாயிகளுடைய நிலத்திற்கு இயற்கை உரமாக வண்டல் மண் பயன்படுகிறது. இது அரசாங்கம் செய்கின்ற ஒரு தனி திட்டம். முழுக்க முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு தான் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மேட்டூர்அணை கட்டப்பட்டு **83** ஆண்டு காலம் ஆகிறது. இந்த **83** ஆண்டு காலத்திலே, இந்த வண்டல் மண் எல்லாம் தேங்கி, கொள்ளளவு குறைகின்றது. நீர் தேக்கத்தில் வருகின்ற நீர், அதிகமாக தேக்கக்கூடிய சூழ்நிலை மாறி, குறைவான நீர் தேங்குகிறது. அணை முழு கொள்ளளவை எட்டுகின்ற விதமாக, அந்த வண்டல் மண் அள்ளுவதற்கு தான் நம்முடைய அரசு இந்த திட்டத்தை கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

இது ஒரு மகத்தான திட்டம். குடிமராமத்துத் திட்டம் என்பது ஒட்டுமொத்த மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற திட்டம். அதுவும் நான் விவசாயியாக இருக்கின்ற காரணத்தினாலே, நீரினுடைய அருமை தெரிந்த காரணத்தினாலே, நீர் மேலாண்மை திட்டத்தை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். அதற்காக **5** பொறியாளர்கள், ஓய்வு பெற்ற **2** தலைமைப் பொறியாளர்கள், **3** கண்காணிப்புப் பொறியாளர்களை ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நியமிக்கப்பட்டு, தமிழகத்திலே எங்கெங்கு எல்லாம் நீர் வீணாக ஓடையின் வழியாக, நதியின் வழியாக, கடலில் போய் கலக்கின்றதோ, அந்த நீரை ஆங்காங்கே தேக்கி வைத்து, அந்த

நீர் சேமிக்கின்ற திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றோம். அதன்மூலமாக அதிகமான தடுப்பணைகளைக் கட்டிக் கொண்டு இருக்கின்றோம். அதிகமான ஏரிகள், குளங்கள், ஊரணிகள் எல்லாம் தூர் வாரப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இதில் எந்தவொரு தவறும் கிடையாது. வண்டல் மண்ணை தான் அள்ளுகிறார்கள். அதற்கு மேல் அள்ள அனுமதி கொடுப்பதில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு Grand Anaicut Canal பற்றி சொல்லி இருக்கிறீர்கள். டெல்டா பாசனத்தில் இருக்கின்ற அந்த கால்வாய்கள் எல்லாம் சீரமைக்கப்படும் என்பதற்காக ஒரு திட்டத்தை திட்டி மத்திய அரசிடம் அனுமதியை கோரியிருக்கின்றோம். கிட்டத்தட்ட 35,000 மேற்பட்ட கிலோ மீட்டர் தூரம் உள்ள கால்வாய்கள் இருக்கின்றன. அந்த கால்வாய்களில் நீர் செல்லுகின்றபோது, 20 சதவிகித நீர் வீணாகின்றது. அப்படி அந்த 20 சதவிகித நீரை மிச்சப்படுத்துவதற்காக நவீன முறையிலே கால்வாய் அமைக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் வீணாகக் கடலில் கலக்கிறது. அப்படி அந்த உபரிநீரை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, கரூர் – மாயனூர் கதவணையிலிருந்து விருதுநகர் – குண்டாறு வரை இணைக்கும் மிகப்பெரிய திட்டத்தை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். அந்த திட்டத்தின் மூலம் திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, குண்டாறு வரை செல்ல இருக்கின்றது. இதன்மூலமாக 6,000 கனஅடி தண்ணீர் கொண்டு செல்கின்ற அளவிற்கு கால்வாய் அமைக்கப்படும். அப்படி கால்வாய் அமைக்கின்ற போது, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர்

உபரியாக செல்கின்ற போது, 6,000 கனஅடி தண்ணீரை எடுத்து இந்த மாவட்ட மக்களுக்கு தேவையான நீரை சேமித்து, பாசனத்திற்கு தேவையான நீரை வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நிறைய திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி கொண்டு இருக்கின்றோம். அந்த புள்ளி விவரங்கள் எல்லாம் என்னுடைய பதிலுரையில் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் அணையை பற்றி சொன்னார்கள். மேட்டூர் அணையை பொறுத்தவரைக்கும் 5 கிலோ மீட்டர் தள்ளிதான் நாம் தூர் வாரினோம். அரசாங்கம் அள்ளவில்லை. விருப்பப்படுகின்ற விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக் கொண்டு போகிறார்கள். அரசாங்கம் அள்ளுவது கிடையாது. விவசாயிகள் ஒரு நாளைக்கு 2,500 லாரி முதல் 3,000 லாரி வரை அள்ளுகிறார்கள். ஆகவே, 50 கிலோ மீட்டர் ஏன், என்னுடைய நிலத்தில் கூட அங்கிருந்து தான் அந்த மண் கொண்டு வந்து இயற்கை உரமாக பயன்படுத்துகிறோம். ஆகவே, சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற விவசாயிகள், சுமார் 50 அல்லது 60 கிலோ மீட்டர் இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 5 கிலோ மீட்டருக்கு அப்பால், எந்தவித சேதாரமும் பாதிப்பும் இல்லாமல் அரசு அதிகாரிகள், பொறியாளர்களை வைத்து அங்கே இருக்கின்ற வண்டல் மண்ணை தான் விவசாயிகள் அள்ளுகிறார்கள். அரசாங்கம் அள்ளவில்லை. அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றது. அதுவும் அந்த அனுமதி கூட, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்து அனுமதி வாங்கினால் தான் அதையும் அள்ள முடியும். இல்லை என்றால் அந்த மண்ணை அள்ளி விற்றுவிடுவார்கள். அதையும் தடை செய்யப்பட்டு இருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் எந்தெந்த நிலம் வைத்திருக்கிறார்களோ, அந்த நிலத்தினுடைய உரிமையாளர்கள்,

சம்பந்தப்பட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகளிடம், வட்டாட்சியர்களிடம் அதற்குண்டான அத்தாட்சியை வாங்கி, அதை கொண்டு போனால், அங்கே இருக்கின்ற பொறியாளர்கள் அனுமதிக்கின்றார்கள். அந்த அனுமதியின் பெயரிலே மேட்டூர் அணையில் இருக்கின்ற வண்டல் மண் படிந்த இடங்களிலே அந்த மண்ணை அள்ளிக் கொண்டு வந்து விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக இடுகிறார்கள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி – குண்டாறு பற்றி சொல்லி இருக்கின்றார்கள். அது ஒரு மிகப் பெரிய நீண்ட திட்டம். எடுத்த உடனே செய்ய முடியாது, 20 ஆயிரம் கோடி ரூபாய் திட்டம். அந்த அளவிற்கு தமிழக அரசிற்கு நிதி வசதி கிடையாது. மத்திய அரசை அணுகி, மத்திய அரசு – மாநில அரசும் இணைந்து இரண்டும் சேர்ந்து செயல்படுத்துவதற்காக இன்றைக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சரிடத்திலே நான் எடுத்து சொன்னேன், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே எடுத்து சொல்லி இருக்கிறேன். அவர்களும் நமக்கு உதவி செய்வதாக இருக்கின்றார்கள். இந்த ஆண்டு இறுதியில் அந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டத்தை Open Panel மூலமாக கொண்டு போகிறோம். விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு நவீன முறையிலே இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. அதுவும் அதிகமான தண்ணீரை கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு இந்த கால்வாய் அமைக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் புதிதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள் குறித்து அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மரியாதைக்குரிய அண்ணன் திரு. இராமசந்திரன் அவர்கள் இன்று காலை பேசுகின்ற போது, விவசாயிகளுக்கு புதியரக நெற்பயிரோ, தானியங்களோ அறிமுகப்படுத்தவில்லை என்று சொன்னார். இன்றைக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் புதிதாக வெளியிடப்பட்டபயிர் ரகங்களை சுருக்கமாக சொல்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில், நெற்பயிற்களில் 4 இரகங்களும், மணிலாபயிரில் 2 இரகங்களும், உளுந்துபயிரில் 2 இரகங்களும், கரும்பில் 3 இரகங்களும், வாழையில் 3 இரகங்களும், சூரியகாந்தி, சாமை, ஆமணக்கு, பூண்டு, உருளைக்கிழங்கு, தட்டைப்பயறு, பாசிப்பயறு ஆகிய பயிர்களில் தலா ஒரு இரகமும், இதரப் பயிர்களில் 13 இரகங்களும், ஆக மொத்தம் 34 புதிய இரகங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட இத்தகைய இரகங்களை விதைப் பெருக்கம் செய்து, வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு கிடைக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் புதியரகங்கள் கண்டுபிடித்து, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ❖

சட்டம் ஒழுங்கில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது குறித்தும், உள்ளாட்சி தேர்தல் குறித்தும் அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எந்த ஆதாரத்தை வைத்து சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொல்கிறீர்கள். புள்ளி விவரத்தோடு மத்திய அரசு கொடுத்திருக்கிறது. அந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான் தமிழ்நாடு சட்டம் ஒழுங்கில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது என்று கூறுகிறோம். உங்களுடைய ஆட்சியிலே எப்படி நடந்தது, புள்ளி விவரமாக தெரிவிக்கட்டுமா ? உங்கள் மேல் என்ன குற்றச்சாட்டு இருக்கிறது என்பது எங்களுக்கு தெரியும். திருப்பூரில் என்னென்ன செய்தீர்கள் என்பது எங்களுக்கு தெரியும். அதை எல்லாம் பேசுவது என்றால் சரியான முறையாக இருக்காது. நீங்கள் உள்நோக்கத்தோடு பேசுவதை விட்டுவிட்டு, உண்மை நிலையை எடுத்து சொல்லுங்கள்.

சட்டம் ஒழுங்கில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்று நாங்கள் சொல்லவில்லை, மத்திய அரசு ஆய்வு செய்து கொடுத்திருக்கிறது. “இந்தியா டுடே” என்ற ஆங்கிலப் பத்திரிகை கொடுத்திருக்கிறது. நாங்களே சொல்லவில்லை. சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று மற்றவர்கள் சொல்லியதை தான் நாங்கள் சொல்கிறோம்.

வேண்டுமென்றே திட்டமிட்டு ஏதாவது ஒரு பிரச்சனையை உருவாக்க வேண்டும் என்று தான் வருகிறார்களே தவிர, உண்மை நிலையை எடுத்துச் சொல்லவில்லை. சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதற்கு பல்வேறு காரணிகளை ஆய்வு செய்து மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு முதலிடம் கொடுத்திருக்கிறது. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு, வேறு ஒரு நோக்கத்தின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். கவர்னர் உரைக்கு நீங்கள் வாருங்கள், நீங்கள் பேசுங்கள், நாங்கள் பேசினால் இன்னும் அதிகமாக இருக்கிறது.

உங்களை பற்றி பேசுவதற்கு எங்களுக்கு அதிகமாக இருக்கிறது ஆதாரம். அதை பற்றி நாங்கள் பேசினால் தேவையில்லாத விவாதம் தான் ஏற்படும்.

மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களும் பல்வேறு சமயங்களிலே விளக்கம் கேட்டு பேசினார்கள். அதை எல்லாம் அனுமதித்து இருக்கின்றோம். அதை எல்லாம் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றோம். ஆனால் இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் ஒரே ஒருவர் தான் பிரச்சனைக்குரியவர். அவர் தான் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு.ஜெ.அன்பழகன் அவர்கள். எப்பொழுது அவையில் பேசினாலும், அவர் சொல்லுகின்ற கருத்திற்குத் தான் பிரச்சனையே உருவாகிறது. இது அனைவருக்கும் தெரியும். தெரியாதது ஒன்றுமே கிடையாது. இங்கே இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றாக தெரியும். ஆகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு தவறான தகவலை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அது இப்பொழுது நிஜமாகிவிட்டது. நான் ஏற்கனவே சொன்னேன். கவர்னர் உரை மீது பேசியிருந்தால் எந்த பிரச்சனையும் கிடையாது. அதற்கு மீறி பேசும் போது தான் இந்த பிரச்சனையே உருவாகின்றது. அவர் தனிப்பட்ட முறையிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை விமர்சனம் செய்யும் போது தான் இந்த பிரச்சனையே உருவாகின்றது. அவர் நேரடியாக குறிப்பிட்ட காரணத்தினால் தான், அவர் எழுந்து பேசினார். யாராக இருந்தாலும் உணர்ச்சிகள் உண்டு. அந்த உணர்ச்சியின் அடிப்படையில் தான் எழுந்தாரே தவிர வேறு எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆகவே, கவர்னர் உரையிலே பேசியிருந்தால் எந்த பிரச்சனையும் எழுந்திருக்காது. ஆகவே, நீங்கள் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு மறுப்பு கருத்தை ஆளுங்கட்சியிலிருந்தும் சொல்லப்படுகிறது. அந்த உண்மைநிலை தெரிந்து அடுத்த தலைப்பிற்கு போனால் சரியாக இருக்கும். அதையே திருப்பி திருப்பி பேசி, பிரச்சனையை உருவாக்கி, அவை சுமுகமாக நடைபெற்று கொண்டு இருக்கின்ற சூழ்நிலையை மாற்றி

திசைதிருப்ப பார்க்கிறார் என்பது தான் என்னுடைய கருத்து என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற போது கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டார் என்று தெரிவித்தார். தனிப்பட்ட முறையிலே விமர்சனம் செய்கின்ற போது தான் பிரச்சனையே வருகின்றது. பொதுவான பிரச்சனைகளை சொல்லுகின்ற போது யாருக்கும் எந்தவித உணர்வும் ஏற்படாது. தனிப்பட்ட முறையிலே அவர்கள் குற்றத்தை சாற்றுகின்ற போது, யாராக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, அது வரத்தான் செய்யும். ஆகவே, அதை தவிர்த்துவிட்டு, அதற்கு ஏற்றவாறு அவையினுடைய மரபை கடைப்பிடித்து பேசினால் இந்த பிரச்சனை எழாது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே உள்ளாட்சித்தேர்தல் சரியான முறையிலே நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டை சொன்னார். நான் உண்மையாக சொல்லுகின்றேன், எந்த இடத்திலும், எந்த தவறும் நடைபெறவில்லை. அரசு ஊழியர்கள் தான் இந்த வாக்குகளை எண்ணினார்கள். அப்படி என்றால் அரசு ஊழியர்கள் தவறு செய்தார்களா ? ஆசிரியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் வாக்குகளை எண்ணினார்கள். காலை 8 மணிக்கு தொடங்கி, அடுத்த நாள் காலை 10 மணி வரை நின்று கொண்டே வாக்குகளை எண்ணினார்கள். தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். அத்தனை முகவர்களுமே, தடுப்பு அமைக்கப்பட்டு, வெளியே நின்று தான் பார்க்கிறார்கள். அது எந்த கட்சியாக இருந்தாலும் சரி. சுயேட்சையாக இருந்தாலும் சரி. ஆகவே, இதில் எந்த தவறும் நடைபெறவில்லை. என்னுடைய தொகுதியிலே, நங்கவள்ளி ஒன்றியத்திலே 2 ஒன்றிய கவுன்சிலர், ஒருவர் 11 வாக்குகளிலே தோல்வியுற்றார், மற்றொருவர் 17 வாக்குகள் வித்தியாசத்திலே தோல்வியுற்றார். அதற்கு மறுவாக்கு எண்ணிக்கை கூட எண்ணப்படவில்லை. இரண்டு பேரும் மனு கொடுத்தனர், பிறகு கூட எண்ணப்படவில்லை. எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்ற போது, பத்திரிகையிலே வெளிவருகிறது. ஆகவே, இதில்

பணியாற்றிய அதிகாரிகளுக்கு எல்லாம் ஒரு அவப்பெயர் ஏற்பட்டுவிடும் என்பதால் தான் இதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இந்த தேர்தலை பொறுத்தவரைக்கும், தேர்தல் ஆணையம் முறையாக செயல்பட்டு இருக்கிறது. அந்த தேர்தல் பணியில் ஈடுபட்ட அதிகாரிகள் அனைவரும் நேர்மையோடும், நீதியோடும், தர்மத்தோடும், நடுநிலையோடும் செயல்பட்டு இருக்கின்றார்கள். அதனால் தான் சுமார் 450 சுயேட்சைகள் இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அது சாதாரண விஷயம் இல்லை. அவர்கள் எந்த கட்சியும் சேராதவர்கள். ஆளுங்கட்சியும் கிடையாது, எதிர்க்கட்சியும் கிடையாது. உங்கள் கூட்டணிக் கட்சியிலே இடம் பெற்றவர் கிடையாது, எங்கள் கூட்டணி கட்சியிலே இடம் பெற்றவர் கிடையாது. ஆகவே, எந்த பின்பலமும் இல்லாத சுயேட்சை வேட்பாளர்கள் கூட வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த தேர்தல், தேர்தல் ஆணையம் மூலமாக எவ்வளவு சிறப்பாக, நடுநிலையோடு நடைபெற்று இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சிஒன்றிய உறுப்பினர்களை பொறுத்தவரைக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணி 43.73 சதவிகிதம் வாக்குகளை பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 45.32 சதவிகிதம் பெற்றிருக்கிறது. நீங்கள் 1.59 சதவிகிதம் வாக்குகள் தான் வித்தியாசமாக இருக்கிறீர்கள். அதேபோல மாவட்ட ஊராட்சி உறுப்பினர், 39.60 சதவிகிதம் வாக்குகள் அண்ணா திமுக கூட்டணி பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40.35 சதவிகிதம் வாக்குகள் பெற்றிருக்கிறது. 0.75 சதவிகிதகம் தான் நீங்கள் அதிகமான வாக்குகளை பெற்றிருக்கிறீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

❖ ❖ ❖

குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான கோலம் குறித்தும், நெல்லை கண்ணன் கைது குறித்தும் அளித்த விளக்கம் (07.01.2020)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோலம் போட்டதை குறித்து பேசினார்கள். கோலம் அவர்கள் வீட்டின் முன்பு போட்டிருந்தால் பிரச்சனை இருக்காது. வேறு ஒருவர் வீட்டின் முன்பு போடுகின்ற போது தான் பிரச்சனை துவங்குகின்றது. அந்த வீட்டின் உரிமையாளர் புகார் செய்கிறார். புகார் செய்தால் அரசாங்கம் என்ன செய்யும். வேறு வழி கிடையாது. அவரவர்கள் வீட்டின் முன்பு கோலம் போட்டால் பிரச்சனை கிடையாது, வேறு ஒருவர் வீட்டின் முன்பு போட்டது தான் பிரச்சனை.

மாண்புமிகு உறுப்பினர் ஒரு மூத்த உறுப்பினர், ஒரு வழக்கறிஞர். ஒரு பொதுக்கூட்டத்திலே என்ன பேசுவதென்று அந்த பேச்சாளருக்கு தெரிய வேண்டும். யாராக இருந்தாலும் சரி, எந்த கட்சி தலைவராக இருந்தாலும் சரி, அது மாதிரி பேசக் கூடாது. “போய் சோலியை முடிச்சரணும்” என்றால் என்ன அர்த்தம். இதை எப்படி நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? சொல்லுங்கள் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? யாராக இருந்தாலும் சரி. அது எந்த கட்சி தலைவராக இருந்தாலும் சரி. சட்டம் தன் கடமையை செய்யும். அது யாராக இருந்தாலும் சரி. அப்படி போய் பொதுக்கூட்டத்தில் பேசினால் இதை யார் ஏற்றுக் கொள்வார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையோ, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களையோ, யாரைப் பற்றி இருந்தாலும் சரி. பேச்சு சுதந்திரம் உண்டு, அதற்கு ஒரு எல்லை உண்டு, ஒரு வரம்பு உண்டு. அந்த வரம்பை மீறி பேசுகின்ற போது தான், இந்த பிரச்சனை உருவாகிறது. ஆகவே அதையொட்டிதான் காவல்துறை தன் கடமையை செய்திருக்கிறதே தவிர, யார் மீதும் வீண்பழி சுமத்தி தவறான வழக்கை தொடரவில்லை என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ❖

மேகதாது அணை விவகாரம் குறித்து அளித்த பதில் (08.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்பெண்ணை ஆறு குறித்த மூல வழக்கு ஏற்கனவே இருக்கிறது. அப்படி மூல வழக்கு இருக்கும்பொழுதே அவர்கள் கட்டிக் கொண்டிருந்தார்கள், நாமும் வாதாடிக் கொண்டிருந்தோம், இருந்தாலும் உச்சநீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளோம். மேகதாது அணையையும் கட்டக்கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே இதற்கு முன்பு கருநாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்படி காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, நேற்றையதினமே சொன்னேன், காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கும் போது, அப்போது அங்கு நீர்வளத்துறை அமைச்சராக இருந்தவர் அந்த இடத்திற்கே நேரில் சென்றார். நீங்கள் கூட்டணியில் இடம் பெற்றிருந்தீர்கள். இருந்தாலும் நம்முடைய கொள்கையிலிருந்து மாறுபடாமல் மேகதாது அணை கட்டினால் தமிழகம் வறண்டு போய்விடும். அதை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி கொண்டு இருக்கின்றோம். எந்த வகையிலும் மத்திய அரசு சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்கக்கூடாது, நாம் இடைக்கால மனு அளித்திருக்கின்றோம், மூல வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, உங்களுடைய நோக்கமும், எங்களுடைய நோக்கமும் ஒன்றாக இருக்கின்றது. மேகதாது அணை கட்டக் கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். நீதிமன்றத்தின் மூலமாக சட்டப் போராட்டம் நடத்தி நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

சிறந்த நல்லாட்சிக்கான பல்வேறு குறியீடுகளில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மத்திய அரசு தெரிவு செய்து அறிவித்தது தொடர்பாக அளித்த விளக்கம் (08.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எல்லா துறைகளையும் கணக்கிட்டு தான் இதிலே முதன்மையாக கொடுக்கிறார்கள். எல்லாவற்றிலும் முதன்மையாக வருவதற்கில்லை. 25.12.2019 அன்று நல் ஆளுமை தினத்தை முன்னிட்டு, மத்திய இணை அமைச்சர் திரு.ஜீதேந்திர சிங் அவர்கள் வெளியிட்ட நல் ஆளுமை குறியீட்டில் தமிழ்நாடு அரசு முதல் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் முயற்சியாலும், கடின உழைப்பாலும் இந்த நிலை எட்டியிருக்கின்றது.

★ வேளாண்மை – வேளாண் பொருட்கள் உற்பத்தி, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, தோட்டப் பயிர், இறைச்சி மற்றும் பயிர் காப்பீடு.

★ வர்த்தகம் மற்றும் தொழில்துறை – தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, தொழில் தொடங்க அனுமதி பெறுதல், குறு மற்றும் சிறு தொழில்கள் வளர்ச்சி.

★ மனிதவள மேம்பாடு – பள்ளி மற்றும் உயர்கல்வி, துவக்க கல்வி இடைநிற்றல், ஆண் பெண் பிறப்பு விகிதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பதிவு செய்தல், கைத்திறன் கற்பித்தல், சுயவேலைவாய்ப்பு.

★ பொது சுகாதாரம் – ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை, வேலை நேரம் மற்றும் பணிபுரியும் மருத்துவர்கள், மருத்துவர்களின் எண்ணிக்கை, தாய்–சேய் பிறப்பு விகிதம், பேறுகால இறப்பு விகிதம், மொத்த பிறப்பு விகிதம், நோய் தடுப்பு சாதனைகள்.

★ உட்கட்டமைப்பு வசதிகள் – மக்களுக்கு குடிநீர் வசதி, திறந்தவெளி கழிப்பறை இல்லா நகரம் மற்றும் கிராமங்கள், கிராமங்களில் மின்வசதி, 24 மணிநேர மின்வசதி, தேவைக்கேற்ற மின்சாரம் வழங்குதல், தனிநபர் வருமானம்.

★ பொருளாதார ஆளுமை – மாநில மொத்த உற்பத்தி மற்றும் வளர்ச்சி விகிதம், தனிநபர் வருமான வளர்ச்சி, நிதி பற்றாக்குறை, மாநிலத்தின் வரி வருவாய் மற்றும் இதர வருவாய், மாநிலக் கடன்.

★ சமூகநலம் மற்றும் சமூகவளர்ச்சி – ஆண் பெண் பிறப்பு விகிதம், மருத்துவ காப்பீடு, கிராம வேலைவாய்ப்பு உறுதி, வேலையில்லாதோர் எண்ணிக்கை, அனைவருக்கும் வீடு, பெண்களின் பொருளாதார முன்னேற்றம், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான குற்றங்கள்.

★ நீதி மற்றும் பாதுகாப்பு – சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற விகிதம், பெண் காவலர்களின் எண்ணிக்கை, முடிவு காணப்பட்ட நீதிமன்ற வழக்குகள் மற்றும் நுகர்வோர் வழக்குகள்.

★ சுற்றுச்சூழல் – மாநிலத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மாநில வனத்தின் பரப்பளவு மாற்றம்.

மக்களை மையமாகக்கொண்ட நிருவாகம், சேவை சட்டங்களை மாநிலத்தில் நடைமுறைப்படுத்துதல், உதாரணமாக ஆட்சியை

கணினி மற்றும் மொபைல்போன் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் பணிகள், உதாரணமாக உழவன் செயலி, காவலன் செயலி, இ–சேவை மையம், ஒற்றைசாளர முறை போன்றவை என மொத்தம் பத்துப் பிரிவுகளில், 50 தரவுகளை ஆய்வு செய்து இந்தக் குறியீடு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் அடிப்படையில் தான், இந்த தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது. இதனை வெளியிட்டுள்ள நிருவாக சீர்திருத்தம் மற்றும் பொதுகுறைதீர் துறையானது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் மத்திய அரசுத் துறையாகும். இத்துறை தான் பிரதம மந்திரி விருதுகளும், மின் ஆளுமை விருதுகளும் பல வருடங்களாக வழங்குகின்றன. இதில் இடம்பெறுகின்ற அமைப்புகள் எல்லாம் இந்த விருதுகளை தேர்வு செய்கின்ற அமைப்புகள்.

❖ இந்திய ரிசர்வ் வங்கி

❖ இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு நிறுவனம் (Census of India)

❖ தேசிய குற்ற ஆவண காப்பகம் (NCRB) – மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கூட இதில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

❖ தேசிய குடும்ப நல கணக்கெடுப்பு (NHS)

❖ மத்திய அரசின் புள்ளிவிவரம் ஆண்டு புத்தகம் (Statistical Year Book)

❖ தேசிய மாதிரி கணக்கெடுப்பு (NSSO)

❖ இந்திய பொது நிதி புள்ளிவிவரங்கள் (Indian Public Finance Statistics)

❖ கல்விக்கான மாவட்ட தகவல் அமைப்பு (DISE)

போன்ற அதிகாரபூர்வமான, நம்பத்தகுந்த மத்திய அரசுத் துறை புள்ளி விவரங்கள் மற்றும் பல்வேறு அரசு துறைகளின் ஆய்வறிக்கைகள் ஆகியவை ஆய்வு செய்து இக்குறியீடு வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய, இந்தியாவின் தலைசிறந்த நிறுவனங்களின் புள்ளிவிவரங்கள் செயற்கையானதா ? என்பதை தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இக்குறியீட்டின் உட்பிரிவுகளான நீதி மற்றும் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் தமிழ்நாடு முதலிடமும், பொது சுகாதாரத்தில் இரண்டாவது இடமும் பிடித்துள்ளது. சுற்றுச்சூழலில், மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. மனிதவள மேம்பாட்டில் மற்றும் பொருளாதார ஆளுமையில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது. மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல, இது செயற்கையான குறியீடு என்றால், எல்லா தரவுகளிலும் தமிழ்நாடு முதலாவதாக வந்திருக்கும். அப்படி அல்ல. எல்லா தரவுகளையும் கணக்கிட்டு தான், அதில் ஒவ்வொன்றிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கிறார்கள். அந்த மதிப்பெண் அடிப்படையில் தான், தரவரிசையில் நாம் முதலிடம் வகிக்கின்றோம்.

திமுகவுடன் கூட்டணியில் உள்ள காங்கிரஸ், புதுச்சேரியில் ஆட்சி அமைத்துள்ளது. நல் ஆளுமைக்கான குறியீட்டில், புதுச்சேரி யூனியன் பிரதேசங்களில் முதலிடத்தை பெற்றுள்ளது. இதில் இருந்தே, எந்தவித விருப்பு, வெறுப்பின்றி, உள்ளது உள்ளபடியே நல் ஆளுமை குறியீடு மத்திய அரசால் வெளியிடப்பட்டு உள்ளது என தெளிவாகிறது. அதேபோல புதுச்சேரியும் அப்படித்தான், புள்ளி விவரத்தின்படி தான் அவர்கள் மதிப்பெண்ணை கொடுத்து தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே, இந்தியா டுடே இதழ், உங்களுக்கு தெரியும் ஒரு புகழ்பெற்ற பத்திரிகை, அவர்களும் அதைத்தான் தெரிவித்திருக்கிறார்கள்.

சர்வதேச நிறுவனமாகிய பிராஸ்ட் அண்ட் சல்லிவன் தொடர்ந்து மூன்றாவது முறையாக வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் தலைமை பண்பு குறியீட்டில் இந்தியாவிலேயே இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தேர்வு செய்துள்ளது.

தேசிய பொருளாதார ஆய்வு நிறுவனத்தின் ஆய்வறிக்கை (NCAER), பொது விவகாரங்கள் குறியீடு (Public Affairs Index) உள்ளிட்ட பல்வேறு அரசு சாரா அமைப்புகளும், தமிழ்நாட்டை இந்தியாவின் இரண்டாவது சிறந்த மாநிலமாகவும், நல் ஆளுமை மற்றும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு இனங்களில் முதல் மாநிலமாகவும் அறிவித்துள்ளன.

மத்திய அரசின் பல்வேறு துறை புள்ளிவிவரங்களையும் ஆராய்ந்து, மத்திய அரசால் வெளியிடப்பட்ட இந்த நல் ஆளுமைக் குறியீடும், பல்வேறு இந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஆய்வு முடிவுகளைப் போலவே மாண்புமிகு அம்மாவின் அரசால் தமிழ்நாடு பெற்றுள்ள பல்துறை வளர்ச்சியைப் உரக்கப் பறைசாற்றும் விதமாக அமைத்துள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் குறித்து அளித்த விளக்கம் (08.01.2020)

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே,

நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, அந்தப் பொருளைப் பற்றி பேசுவது மரபு அல்ல என்று நீங்கள் பதில் சொல்லி இருக்கிறீர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களே பதில் சொல்லி இருக்கிறீர்கள். அது அவைக்குறிப்பில் இருக்கிறது. வேண்டுமென்றால் எடுத்துக் கொண்டு காட்ட சொல்கிறேன். அதைத்தான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி, நேற்றையதினம் முழு அளவில் விவாதம் நடத்தப்பட்டு விட்டது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றபோது, அதில் பல்வேறு வாதங்கள், விவாதங்கள் நடைபெறும். அப்போது நாம் சொன்ன கருத்துக்களெல்லாம் வெளியில் போகும். அது வழக்கிற்கு தேவையில்லாத இடையூறாக இருக்கும் என்பதைத்தான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலிலே இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றீர்கள் என்று குரல் கொடுத்து கொண்டு இருந்தீர்கள். அதற்கு தான் இந்த புள்ளி விவரத்தை நான் கொடுத்தேன். நாடாளுமன்ற தேர்தலிலே நீங்கள் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம், மக்களெல்லாம் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று குரல் கொடுத்துக்

கொண்டிருந்தீர்கள், அது இல்லை. இந்த உள்ளாட்சித் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தைத் தான் நான் சொல்லியிருக்கிறேன். அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை ஒப்பிட்டுத்தான் அதைப் பேசியிருக்கிறேன், சட்டமன்றத் தேர்தல் இல்லை. அண்மையில் தான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த நாடாளுமன்றத் தேர்தலிலே, அதிகமான வாக்குகளை உங்களுடைய கூட்டணி பெற்று, அதிகமான வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் அது இப்போது தலைகீழாக மாறி விட்டது. அண்மையிலே நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலே இவ்வளவு வாக்குகள் தான் பெற்றிருக்கிறீர்கள், இவ்வளவு உறுப்பினர்களைத்தான் பெற்றிருக்கிறீர்கள் என்ற விவரத்தைத்தான் நேற்றையதினம் நான் குறிப்பிட்டேன்.

அப்படித்தான் கனவு கண்டு கொண்டிருந்தீர்கள், நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. நாடாளுமன்றத் தேர்தலிலே போட்ட கணக்குப்படி உங்கள் கணக்கு சரியாக இருக்கும் என்று நினைத்தீர்கள். ஆனால் உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே மக்கள் தலைகீழாக மாற்றிவிட்டார்கள். ஆகவே, நாடாளுமன்றத் தேர்தலிலே கிராமப்புறங்களிலே எவ்வளவு வாக்குகள் வாங்கியிருக்கிறீர்கள் என்று அத்தனை பேருக்கும் தெரியும். ஆனால் இப்பொழுது உள்ளாட்சி மன்றத் தேர்தலில் உங்களுடைய நிலை என்ன? தலைகீழாக மாற்றப்பட்டுவிட்டது. இன்னும் 9 மாவட்டங்கள் இருக்கிறது. அந்த 9 மாவட்டங்களிலும் அதிக அளவிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்கள் அதிக அளவு வெற்றி பெறுவார்கள், அதுவும் மாறத்தான் போகிறது. ஏனென்றால், நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலையே சொல்லிக் கொண்டு இருந்தீர்கள்.

22 தொகுதிகளுக்கான சட்டமன்ற இடைத்தேர்தலிலே, நாங்கள் அதிக இடங்களை பெற்றுவிடுவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். ஆனால், அதற்குப் பிறகு, இடைத்தேர்தல் வந்தது. இரண்டும் உங்கள் கையிலே தான் இருந்தது. ஒன்று திமுக வசம் இருந்தது விக்கிரவாண்டி, மற்றொன்று, நாங்குநேரி காங்கிரஸ் வசம் இருந்தது. எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெற்றோம் என்பதை நாட்டு மக்கள் எங்களுக்கு அங்கீகாரத்தை கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோலத்தான், நாடாளுமன்றத் தேர்தலிலே, கிராமப்புறத்திலே நீங்கள் அதிகமான வாக்குகளை பெற்றீர்கள். அதை வைத்து ஒவ்வொரு வேட்பாளரும் நாங்கள் இலட்சக்கணக்கான வாக்குகளை பெற்றோம் என்று சொன்னீர்கள். அண்மையில், வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதற்கு முன்பு ஒரு எதிர்க்கட்சி தலைவர் சொன்னார். ஏற்கெனவே நாங்கள் திண்டுக்கல்லிலே அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். அதைவிட கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று சொன்னார்கள். என்ன ஆகியது ? வேலூர் தொகுதியில் வெறும் 0.70 சதவிகிதம் தான் வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றீர்கள். வெறும் 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றீர்கள். ஆக, நீங்கள் பெற்ற வெற்றியை நான் மறுக்கவில்லை. நீங்கள் சொல்கிறீர்களே அதற்கு தான் நான் பதில் சொல்லி கொண்டு இருக்கின்றேன். மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்ன கருத்துக்கு நான் பதில் சொல்கின்றேன். அப்பொழுது நடைபெற்ற தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல். அந்த நாடாளுமன்றத் தேர்தலிலே அதிக வாக்குகளைப் பெற்றோம், அதனால் அதிக இடங்களைப் பெற்றோம் என்று சொன்னீர்கள். இப்பொழுது நிலைமை மாறிவிட்டது, அந்தக் குறிப்பைத்தான் நான் குறிப்பிட்டேன்.

❖ ❖ ❖

விபத்துகளினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி அறிவித்தது குறித்தும், கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனைச் சாவடியில் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் அவர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு உயிரிழந்தது குறித்தும் ஆற்றிய உரை (09.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலை விபத்து மற்றும் வன விலங்கினால் தாக்கப்பட்டு உயிரிழந்தோர் குடும்பங்களின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர் மற்றும் திரு.உ.மதிவாணன் ஆகியோர் கோரிக்கை வைத்தனர்.

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பென்ஜமின் அவர்களும் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற விபத்தில் இறந்த திரு.ஏகேஸ் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வேண்டியும் கோரிக்கை வைத்தார்.

இக்கோரிக்கைகளை பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கின்றேன்:–

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி கிராமம், கொல்லம்–திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் காவல் வாகனத்தின் டயர் வெடித்ததில், கட்டுப்பாட்டை இழந்த வாகனம் பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்தவர்கள் மீது மோதியது. இவ்விபத்தில், திருமதி ஆயிஷாபானு என்கிற மல்லிகா என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும், திரு.தீன்ஒலி

என்பவரின் மகள் செல்வி. கன்சால் மகரிபா மற்றும் திரு.மைதீன் பிச்சை என்பவரின் மகள் செல்வி. இர்பானா ஆஷியா ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை அறிந்த உடனேயே, உயிரிழந்த திரு.மைதீன் பிச்சை என்பவரின் மனைவி திருமதி ஆயிஷாபானு என்கிற மல்லிகா அவர்களின் குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த திரு.தீன் ஒலி என்பவரின் மகள் செல்வி. கன்சால் மகரிபா மற்றும் திரு.மைதீன் பிச்சை என்பவரின் மகள் செல்வி. இர்பானா ஆஷியா ஆகியோரின் குடும்பத்திற்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு.மதிவாணன் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், ஆத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட தெத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.வேலுச்சாமி என்பவரின் மகன் திரு.முருகன் என்பவர் யானை தாக்கி உயிரிழந்தார். அன்னாரது குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் வனத்துறை மூலம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கூட்டுச்சாலையில், இரவு பணி முடிந்து வீடு செல்வதற்காக 25.12.2019 அன்று ஆட்டோவில் சென்று கொண்டிருந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்பதூர்வட்டம், மாரிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி பவானி என்பவர், ஆட்டோ ஓட்டுநர் வழி மாறி, வேறு பாதையில் செல்வதையும், ஆட்டோ ஓட்டுநரின் அத்துமீறலாலும் தன்னை காப்பாற்றும்படி கூச்சலிட்டதில், அலறல் சத்தம் கேட்டு சாலையோரம் நின்றிருந்த இளைஞர்கள் திரு.ஏகேஸ், திரு.எஸ்தர் பிரேம்குமார், திரு.வினீத், திரு.துரைராஜ் மற்றும்

திரு.பிரிஸ்டன் பிராங்களின் ஆகியோர், இருசக்கர வாகனத்தில், ஆட்டோவைத்துரத்திச் சென்று திருமதி பவானியை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இளைஞர்கள் ஆட்டோவை துரத்திக்கொண்டு வருவதை அறிந்த ஆட்டோ ஓட்டுநர், ஆட்டோவை விரைவாக ஓட்ட, திருமதி பவானி ஆட்டோவிலிருந்து குதித்தார். இதனைப் பார்த்த பொதுமக்கள், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆட்டோவில் இருந்து குதித்ததால் சிறு காயமடைந்த திருமதி பவானி சிகிச்சை முடிந்து, மறுநாளே வீடு திரும்பினார்.

இந்நிகழ்வில், மேற்படி இளைஞர்கள் இரு சக்கர வாகனத்தில், ஆட்டோ ஓட்டுநரை பிடிக்கச்சென்ற போது, ஏற்பட்ட விபத்தில், திரு.ஏகேஸ் என்பவருக்கு பலத்த காயமும், மற்றவர்களுக்கு சிறு காயமும் ஏற்பட்டது. பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயரிய சிகிச்சை அளித்தும், சிகிச்சை பலனின்றி திரு.ஏகேஸ் என்பவர் 27.12.2019 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இச்சம்பவத்தில், ஆட்டோ ஓட்டுநர் கைது செய்யப்பட்டு, அவர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார். இளைஞர்கள் திரு.ஏகேஸ், திரு.எஸ்தர் பிரேம்குமார், திரு.வினீத், திரு.துரைராஜ் மற்றும் திரு.பிரிஸ்டன் பிராங்களின் ஆகிய ஐந்து பேரும் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல், திருமதி பவானியை ஆபத்திலிருந்து காப்பாற்றிய வீரத்தையும், சமூக பொறுப்புணர்வையும் நான் மனதார பாராட்டுகின்றேன்.

இதுபோன்ற நிகழ்வுகளில் காவல்துறையினருடன் இணைந்து, இளைஞர்களும் பொதுமக்களும், தவறை தட்டிக்கேட்கவும், போராடவும், துணிச்சலுடன் செயல்படுவது மிகவும் பாராட்டிற்குரியது.

இச்சம்பவத்தில் தனது உயிரை துச்சமென மதித்து, ஆபத்திலிருந்த பெண்ணை காப்பாற்றியதோடு மட்டுமின்றி, தவறு செய்த ஆட்டோ ஓட்டுநரைப் பிடிக்கப் போராடி உயிரிழந்த திரு.ஏகேஸ் அவர்களின் தீரச்செயலையும், சமூக அக்கறையையும், அவரது குடும்ப நிலையையும் கருத்தில் கொண்டு சிறப்பினமாக, அவரது குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபாயும்; இவ்விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் திரு.பிரிஸ்டன் பிராங்களின் என்பவருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும்; லேசான காயமடைந்த திரு.எஸ்தர் பிரேம்குமார், திரு.வினீத் மற்றும் திரு.துரைராஜ் ஆகியோருக்கு தலா 25,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை சோதனை சாவடியில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வில்சன் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு உயிரிழந்தார்.

தமிழ்நாடு—கேரள மாநில எல்லையான கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை சோதனை சாவடி அமைத்து காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

இச்சோதனை சாவடியில் நேற்று (08.01.2020) இரவு 8 மணி முதல் களியக்காவிளை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வில்சன் என்பவர் பணியில் இருந்தார். அப்போது இரவு சுமார் 9.30 மணியளவில் அங்கு வந்த அடையாளம் தெரியாத

இரண்டு நபர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வில்சனை கைத்துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்திவிட்டும் தப்பிச் சென்றுள்ளனர். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வில்சன் காயங்கள் ஏற்பட்டு, நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார்.

இது குறித்து தகவலறிந்த காவல் துறையினர் உடனடியாக சம்பவ இடம் சென்று, காயமடைந்த திரு.வில்சனை மீட்டு, குழித்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர், திரு.வில்சன் உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி அறிந்த தெற்கு மண்டல காவல் துறை தலைவர், மாவட்ட காவல்கண்காணிப்பாளர் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், எனது உத்தரவின் பேரில் காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களும் சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்று விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

சம்பவ இடத்தில் இரண்டு தோட்டாக்கள் மற்றும் இரண்டு காலி தோட்டாக்கள் ஆகியவற்றை காவல் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக களியக்காவிளை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வழக்கில் எதிரிகளை அடையாளம் கண்டு கைது செய்ய, நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனிப்படையினர், அப்பகுதியிலுள்ள கடைகள் மற்றும் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள CCTV பதிவுகளை ஆய்வு செய்து வருகின்றனர். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. குற்றவாளிகளை

விரைவில் கண்டுபிடித்து, அவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுத் தர அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

மறைந்த திரு.வில்சனுக்கு மனைவி மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.வில்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்படும். மேலும் அன்னாரது குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கு ஏற்றாற்போல், கருணை அடிப்படையிலான அரசுப் பணி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 06.01.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய பதிலுரை (09.01.2020)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 06.01.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலுரை ஆற்றுகிறேன்.

அறமும், தமிழும் வளர்த்த நற்றமிழ் நாயகி!

அறிவும், ஆளுமையும் மிக்க அன்னைத் தமிழரசி !

அகிலம் போற்றும் அன்பின் திருஉருவம் !

'அம்மையே' என்று வணங்கத் தோன்றும் 'அம்மா' என்னும் தெய்வம் !

சமூக நீதி காத்த சரித்திர வீராங்கனை!

காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி!

தமிழர்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து "விஷன் 2023" தந்த தீர்க்கதரிசி !

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் குலச்சாமி!

மக்கள் மனதில் என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்தும் மறையாத மக்கள் தலைவி!

இசைபட வாழ்ந்த ஏழிசை ராகம்!

சுவைபட பேசிய அறுசுவை அமுதம்!

மக்களை அரவணைக்கும் ஐவகை நிலம்!

நல்லதைப் போதித்த நான்கு மறை!

நாட்டைக் காக்கும் முப்பெரும் சக்தி!

வாழ்க்கையை நெறிப்படுத்தும் இருவரிக் குறள்!

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து எங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடியிருக்கும் ஒப்பற்ற ஒரே உன்னதத் தலைவி!

எங்கள் அம்மா தெய்வதை போற்றி வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் திருமுகத்தால் இன்னமும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் இந்த மாமன்றம்; மாண்புமிகு அம்மாவின் உரை வீச்சால் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தப் பேரவை; எளியவர்களையும் வலியவர்களாக மாற்றி இப்பேரவையில் அமர வைத்த வல்லமை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களையும், இம்மாமன்றத்தையும் வணங்கி என் பதிலுரையை துவக்குகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 06.01.2020 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்ட இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். பாராட்டியும், குறை கூறியும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மீண்டும் அம்மாவின் ஆட்சி மலர்ந்தபோது, "துயரத்தை மறந்து விடுங்கள், இனி சிரித்துக் கொண்டே இருங்கள், உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும், அதை நான் உறுதி செய்கிறேன்" என்றும், "எங்கள் மீது

மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை, அளித்துள்ள பொறுப்புகளை கட்டாயமாக நிறைவேற்றுவோம்'' என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அவர்கள், தன் ஆட்சிக் காலத்தில் சொன்னதை மட்டுமல்ல, சொல்லாமல் விட்ட நல்ல பல மக்கள் நலத்திட்டங்களையும் செயல்படுத்தினார்கள்.

சங்க காலத்தில் நெடுஞ்செழியன் என்னும் மாமன்னர், பல மன்னர்களை போர்க்களத்தில் வென்றவர். போர் முனையில் மட்டுமின்றி, ஏர் முனையிலும் மன்னர் சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணிய புலவர் ஒருவர்,

''நிலன் நெறி மருங்கின் நீர்நிலைப் பெருக'' என்று மன்னருக்கு அறிவுரை கூறினார். அதாவது, பகைவரை வென்று, அவர்களை சிறையில் இடுவதை விட, மழையால் பெருகும் நீரை ஏரிகளிலும், குளங்களிலும் தேக்குவதே ஒரு நாட்டிற்கு நலன் பயக்கும். அவ்வாறு நீரை தேக்கி வைத்தவர்களின் பெயர்தான் புகழோடு உலகத்தில் நிலைக்கும் என்றார். அப்புலவரின் கூற்றுக்கு இணங்க, நீண்ட நாட்களாக தூர்வாரப்படாமலும், சீரமைக்கப்படாமலும் இருந்த பெரிய ஏரிகள், சிறு பாசன ஏரிகள், குளங்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகள் போன்ற 34,871 நீர்நிலைகளை 2017 முதல் இன்று வரை 2,182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள், குடிமராமத்துத் திட்டத்தின் கீழ், விவசாய சங்கங்கள் மூலமாக அவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் பராமரிப்பில் உள்ள 1,315 நீர்நிலைகள் 811.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர ஆறுகள், ஓடைகள், கால்வாய்கள் போன்றவற்றில் 1,141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 59 பெரிய தடுப்பணைகள் பொதுப்பணித்துறையின் மூலமும், 40 ஆயிரம் சிறிய தடுப்பணைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமும் கட்டப்பட்டுள்ளன.

வேளாண் பெருமக்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென அக்கறையுடன் செயல்படுத்தி உண்மையாக உழைக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை இயற்கையே அங்கீகரிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் பருவ மழை பொழிந்து, தூர்வாரப்பட்ட பெரும்பாலான நீர்நிலைகள் நீர் நிறைந்து ததும்பி நிற்கின்றன.

காவேரி ஆற்றுப் பாசன பகுதிகளில், கடைமடை வரை தண்ணீர் செல்ல கடந்த காலங்களில் பல நாட்கள் ஆகும். ஆனால் தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து திட்டமும், காவேரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டதால், இந்த ஆண்டு 15 முதல் 20 நாட்களுக்குள் கடைமடை வரை தண்ணீர் தங்குதடையின்றி சென்றடைந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பயிர் சாகுபடி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

“கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கு ஏற்ப, நமது விவசாயிகளை பேணிப்பாதுகாத்து, அவர்களுக்குத்தேவையான அனைத்து பணிகளையும் சரியான நேரத்தில் செய்து கொடுத்த காரணத்தால் தான், தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு இதே நாளில் 85 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் என இருந்த வேளாண் பயிர் சாகுபடி பரப்பு, இந்த ஆண்டில் இதுவரை 7 இலட்சம் ஏக்கர் கூடுதலாக, அதாவது 97 இலட்சத்து 31 ஆயிரம் ஏக்கரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்தாண்டு, தமிழ்நாடு உணவு தானிய உற்பத்தியில் ஒரு புதிய மைல் கல்லை அடையும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், நன்னீர் தேவையை குறைக்கவும்,

நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்கவும், கழிவு நீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும், நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கம் சென்ற ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, சென்னை மாநகரில் பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் வகையில், கோயம்பேடு, கொடுங்கையூர் பகுதிகளில் நாளொன்றுக்கு தலா 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டன. இவ்விரண்டு நிலையங்களின் உற்பத்தித் திறன் தலா 60 மில்லியன் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது. இதன் மூலம் இந்தியாவிலேயே 20 சதவீதம் கழிவுநீர் மறுசுழற்சி செய்யப்படும் ஒரே நகரமாக சென்னை திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சென்னை மாநகரில் உள்ள கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீரோடைகளில் கழிவு நீர் கலப்பதை முற்றிலும் தடுத்திட 2,371 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும், சென்னை குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களால் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் தலா 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதேபோன்று, 27.06.2019 அன்று நெம்மேலியில் 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட ஒரு புதிய திட்டத்தினை நான் துவக்கி வைத்துள்ளேன். பேரூரில், 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டங்களினால் வரும் காலத்தில் பருவமழை பொய்த்தாலும் சென்னை நகர மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்க முடியும் என்பதை திடமாக இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், கடந்த 3 ஆண்டுகளில், பொதுமக்களின் குடிநீர்த் தேவைகளுக்காக புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 57.81 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் சுமார் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கூட்டுக்குடிநீர்த்திட்டங்களும், தேனி, திண்டுக்கல், தென்காசி, விழுப்புரம், நீலகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 12.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 373 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 நகர்ப்புர தனி குடிநீர்த் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதேபோன்று கிருஷ்ணகிரி, தேனி, விருதுநகர், அரியலூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 5.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 407 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பாதாள சாக்கடைத்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்போம். “சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு” என்றார் திருவள்ளுவர். “சேற்றில் உழவன் கால் வைத்தால் தான் மக்கள் சோற்றில் கை வைக்க முடியும்” என்பதை ஒரு விவசாயி என்ற முறையில் நான் நன்கு உணர்ந்தவன். கடந்த 8 ஆண்டுகளில் ஆறாவது முறையாக உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி தமிழ்நாடு சாதனை புரிந்துள்ளது. மேலும், கடந்த 8 ஆண்டுகளில், 5 முறை மத்திய அரசின் கிருஷி கர்மான் விருதினை பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக 7 ஆயிரத்து 283 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டு இழப்பீட்டு நிதியை பெற்றுத் தந்துள்ளது. இது தேசிய அளவில் ஒரு சாதனையாகும்.

2018ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு 186 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கியது மாண்புமிகு அம்மாவுடைய அரசு. இவ்வாண்டு அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசே, 47 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்க நடவடிக்கை எடுத்து, மக்காச்சோளம் பயிரிட்ட வேளாண் பெருமக்கள் இப்பயிர் பாதுகாப்பு நடவடிக்கையை பெரிதும் வரவேற்பை பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக நடப்பு நிதியாண்டில் 31.12.2019 வரை சுமார் 9 இலட்சம் குறு, சிறு விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. பருவ மழை சிறப்பாக இருந்ததாலும், சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு நெல் உற்பத்தி அதிகரிக்கும் என்பதால், வேளாண் பெருமக்களுக்கு உரிய விலை கிடைக்க, தேவைப்படும் இடங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும்.

பல்வேறு தரப்பு மக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, சர்க்கரை குடும்ப அட்டைகளை, அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றுவதற்கு நான் உத்தரவிட்டேன். இதன்மூலம், மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப, அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு போதிய மழையும், விவசாயத்திற்கு தேவையான தண்ணீரும் உள்ள காரணத்தாலும், அதிக பரப்பிலான பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருவதாலும், வேளாண் பெருமக்கள்

இடுபொருட்கள் மற்றும் பிற பணிகளுக்காக கணிசமான பணத்தை செலவழித்திருப்பதாலும், மக்கள் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட 1,000 ரூபாயுடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்க நான் உத்தரவிட்டு, அதன்படி அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இன்றையலிருந்து வழங்கப்பட்டு வருகிறது என்று இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்த விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றினால் சமீபத்தில் வெளியான கால்நடை மற்றும் பறவை இனங்களுக்கான கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 7.6 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. மாநில பொருளாதார வளர்ச்சியில் கூட கால்நடைத் துறை வளர்ச்சியின் பங்கு கூடியுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக, கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது.

வேளாண் பெருமக்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் சென்றடையும் நோக்குடன், தலைவாசல் கூட்டு ரோட்டுக்கு அருகில், நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது நான் அறிவித்தேன். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க நாட்டில் உள்ள உலகப் புகழ் பெற்ற பஃபலோ கால்நடைப் பண்ணையை பார்வையிட்டு அங்கு பயன்படுத்தப்படும் நவீன யுக்திகளை தமிழ்நாட்டில் உள்ள வேளாண் பெருமக்களும் பயன் அடையும் வகையில், தலைவாசலில் புதியதாக உருவாக்கப்பட உள்ள கால்நடைப் பூங்காவில் பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வளாகத்தில் தமிழ்நாட்டின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசாணை

வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல திட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் நமது மாநிலத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையைப் போலவே, கால்நடைகளின் அவசர சிகிச்சைக்கென 'அம்மா ஆம்புலன்ஸ்' சேவையை துவக்கி வைத்து, மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகள் பயன்பெற செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் 200 கோடி ரூபாய் செலவில் திருவற்றியூர் குப்பம், 120 கோடி ரூபாய் செலவில் தரங்கம்பாடி மற்றும் 100 கோடி ரூபாய் செலவில் கடலூர் முதுநகர் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க மத்திய அரசின் மீன்வளம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், மேற்கண்ட மீன்பிடி துறைமுகங்களுக்காக தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் 420 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துள்ளது. மத்திய அரசின் இத்திட்டத்தின் கீழ், இதுவரை அதிக அளவு நிதி உதவி பெற்ற மாநிலம் தமிழ்நாடு ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிபடுத்திட தமிழ்நாடு அரசு முன் உதாரணமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆழ்கடல் மற்றும் அண்மைக்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு 25,000 VHF கருவிகள், 160 செயற்கைக்கோள் கருவிகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் மூலம் 507 டிரான்ஸ்பான்டர் கருவிகள் மற்றும் 200 நாவிக் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்து மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பல்வேறு முன்னேற்றங்களையும், தொழில் நுட்பங்களையும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து கொண்டு தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் பிற

முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடுகளைப் பெற்று தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு 26.08.2019 முதல் 10.09.2019 வரை நான் அரசுமுறை பயணம் மேற்கொண்டேன்.

இங்கிலாந்திலுள்ள சர்வதேச அளவில் புகழ்பெற்ற கிங்ஸ் மருத்துவமனையின் கிளையினை தமிழ்நாட்டில் துவக்கிட அந்நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன் அடிப்படையில், அந்நிறுவனத்துடன் பல்வேறு நிலையிலான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் தமிழ்நாட்டில் கிங்ஸ் கிளை மருத்துவமனை அமைக்கப்படும்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கவும், உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளை பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடுவாழ் தமிழ்மக்களையும், பிற முதலீட்டாளர்களையும் வரவேற்கும் வகையில் "யாதும் ஊரே" என்ற முன்னோடித் திட்டத்தை கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் நான் அறிவித்து, இத்திட்டத்தை அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

இந்தப் பயணத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிலும், துபாயிலும் உள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, அதன் மூலம் 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளை ஈர்த்து 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதனால் 35 ஆயிரத்து 520 க்கு மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. மேற்படி ஒப்பந்தங்களில் 5 நிறுவனங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், குறிப்பாக தமிழ் இளைஞர்கள், தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளைச் செய்ய அதிக

ஆர்வம் காட்டி வருவதும் இந்த அரசுமுறைப் பயணத்தின்போது நான் அறிந்தேன்.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட எனது தலைமையில் ஒரு தனிக்குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீடு செய்வதை எளிதாக்குதல் பிரிவு, பாதுகாப்பு மற்றும் வானூர்தி தொழில் பூங்கா, மின்சார வாகனப் பூங்கா, Start-Up எனப் புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை என தொழில் துறை மேம்பட பல்வேறு கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றி கண்டு வருகிறது.

2015ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்ற ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 இலட்சம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. இவற்றில் 272 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. இது, கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் ஏறக்குறைய 90 சதவீதமாகும். இது மாண்புமிகு அம்மாவின் அரசு மீது தொழில் முதலீட்டாளர்கள் கொண்ட திடமான நம்பிக்கையை காட்டுவதாக உள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 3,592 தொழில் திட்டங்கள், தங்கள் பணிகளைத்துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பிறகு, இதுவரை 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 63 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 83 ஆயிரம் வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில் சிக்கல்கள் காரணமாக மூடப்பட்ட நோக்கியா நிறுவன தொழிற்சாலையினை வாங்கி, மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ள சால்காம் நிறுவனம் உடன்பாடு செய்துள்ளது.

இது தவிர, உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நோக்கியா சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் மின்னணு சாதன உற்பத்திக்கான பணிகளை துவக்கியுள்ளது. இதன் மூலம் 20,000 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இவ்வாறு, முந்தைய காலங்களில் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் நின்ற தொழில் நிறுவனங்கள் கூட, தற்போது இந்த மக்கள் நல அரசின் தொடர் முயற்சிகளால் புத்துயிர் பெறும் சிறப்பான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதார ஆராய்ச்சிக்கழகம் (NCAER) வெளியிட்டுள்ள 2018ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், முதலீட்டை ஈர்க்கும் ஆற்றல் மிக்க மாநிலங்கள் பட்டியலில், தமிழ்நாடு 2ஆம் இடத்தை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு கடந்த ஆண்டுகளில் 1 இலட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாய் என இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் அது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது சுமார் 47 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய நேரடி முதலீட்டினை மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதலாக ஈர்த்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

‘‘கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்,
கவலை உனக்கிலை ஒத்துக்கொள்’’

என்ற நாமக்கல் கவிஞர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, திறன்மிகு மனித வளத்தை உருவாக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு அம்மாவின் அரசு திறன் மேம்பாட்டிற்கான குறைந்த மற்றும் நீண்ட கால பயிற்சிகளை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 28 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்துள்ளதும், இயங்கி வரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 53 புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளதும் இதற்குச் சான்றாகும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம், அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து, இதுவரை சுமார் 7 இலட்சம் இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இந்தியாவிலுள்ள தலைசிறந்த 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. முதன்முறையாக சுகாதாரத்துறை, ஆட்டோமொபைல் மற்றும் சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்துக்காக மூன்று உயர்திறன் பயிற்சி மையங்கள் அமைக்க சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாகச் செயல்படும்.

இத்தருணத்தில் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான திறன் போட்டியில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டது.

‘‘ஒரு தாய் மக்கள் நாம் என்போம்,
ஒன்றே எங்கள் குலம் என்போம்’’

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்பவும், அனைத்து சமுதாயத்தினரின் நலனையும் பேண வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்தினர் முன்னேற்றத்திற்காக "வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் சட்டம் 2018" என்கிற புதிய சட்டத்தினை மாண்புமிகு அம்மாவின் அரசு இயற்றியது. அச்சட்டத்தை செவ்வனே செயல்படுத்திட ஒரு வாரியம் அமைத்து, அவ்வாரியம் திறம்பட செயலாற்ற போதுமான அளவு நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

பிறமலைக்கள்ளர் உள்ளிட்ட பல்வேறு சீர்மரபினருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் மத்திய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவின் கீழும், அதே நேரத்தில் தமிழ்நாடு அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இட ஒதுக்கீட்டின் கீழும் பயன்களைப் பெறும் வகையில் உரிய அரசாணை வெளியிடப்பட்டு, அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும் இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், பாதை வசதிகள், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த இரண்டரை ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்களாக விளங்கிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் வகுத்துத்தந்த பாதையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாக்கும் அரணாக விளங்கி வருகிறது. இந்த பேரியக்கத்தின் தலைவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி செய்யும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாப்பதில் எக்காலத்திலும் உறுதியாக இருக்கும்.

ஹஜ் புனிதப் பயணத்திற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு ஆண்டுதோறும் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதனை தொடர்ந்து வழங்கி வருகிறது. ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியத்தை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் அரசு மானியம் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாயிலிருந்து 2.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 3 ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாசல்களுக்கு நோன்புக்கஞ்சி தயாரிக்க 5,145 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் தர்கா சந்தனக்கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக் கட்டைகளை அரசே ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. மாவட்ட காஜிக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களின் மாதாந்திர ஒய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் வஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலமாக 215.22 கோடி ரூபாய் அளவிற்கு குறைந்த வட்டியில் கல்விக் கடன், தனி நபர் மற்றும் சிறுகடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை தடைசெய்து, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. வருங்கால சந்ததியினர் நெகிழியினால் பாதிப்பு அடையாமல் இருக்க வேண்டுமெனில் இதைத் தொடர்ந்து முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும், இதற்கு மக்கள் தங்கள் முழுமையான ஒத்துழைப்பினை நல்க வேண்டும் என்றும் அனைவரையும் இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை ஏராளமான மக்கள் பார்வையிட்டு, பயன்பெற்று வருகின்றனர். இப்பூங்காவை நானே மூன்று முறை நேரில் சென்று பார்வையிட்டுள்ளேன். இப்பூங்காவில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் நிதி ஒதுக்கீடு செய்து சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்.

தமிழ்நாடு அரசு நீடித்த நிலையான வளர்ச்சியினை குறிக்கோளாகக் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத, எலக்ட்ரிக் பேருந்துகள், எலக்ட்ரிக் கார்கள் மற்றும் ஆட்டோக்களை உற்பத்தி செய்வதற்கும், அதற்கான முதலீட்டிற்கும், அதை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் போதிய ஊக்கமளித்து வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக பொதுப் போக்குவரத்துக்கு மின் பேருந்துகளை கடந்த ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி நான் துவக்கி வைத்துள்ளேன். அதே போல, 16.09.2019 அன்று மின் வாகனக் கொள்கை 2019ஐ வெளியிட்டுள்ளேன்.

கடந்த நவம்பர் மாதம் 29ஆம் நாளன்று சுற்றுச்சூழலுக்கு உகந்த, மின் ஆட்டோக்களையும் நான் துவக்கி வைத்தேன். இது, அரசுமுறை பயணமாக நான் துபாய் சென்றிருந்த போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆனதாகும் என்பதை பெருமையுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு கேரள மாநிலங்களுக்கு இடையே, முல்லைப் பெரியாறு, ஆழியாறு – பரம்பிகுளம், பாண்டியாறு – புன்னம்புழா, செண்பகவல்லி அணை, நெய்யாறு பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றன. “எங்களுடைய மக்களுக்கு தண்ணீர் வேண்டும், விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும்”, என்று மாண்புமிகு கேரள முதலமைச்சருக்கு கடிதம் எழுதினேன். “நீங்கள் நேரில் வாருங்கள் இது குறித்து பேசுலாம்”, என்று அழைப்பு

விடுத்தார் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்கள். அந்த அழைப்பினை ஏற்று, நானே நேரடியாக சென்று கேரள முதலமைச்சரை சந்தித்தேன். நான் கேரள முதலமைச்சரை சந்திக்க சென்ற போது, மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களும் என்னோடு வந்தனர். இதைத் தொடர்ந்து செயலாளர்கள் அளவில் ஒரு கூட்டமும் நடத்தப்பட்டது. வருங்காலத்தில் இம்மாதிரி சந்திப்புகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்பட உள்ளன. இதன் மூலம் இரு மாநிலங்களுக்கு இடையே நிலவும் தண்ணீர் பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, கடந்த கோடை காலத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் போது, எனது உத்தரவின் பேரில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, தெலுங்கு கங்கை திட்டத்தில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீரினை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதன் அடிப்படையில், பெறப்பட்ட நீரினைக்கொண்டு சென்னை பெருநகர மக்களின் குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்தருணத்தில் மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்திட கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்திற்கு ஆந்திரா மற்றும் தெலுங்கானா முதல்வர்களின் கூட்டத்தினை விரைவில் நடத்தி, மத்திய அரசு தயாரித்த கோதாவரி–காவேரி இணைப்பு திட்டத்திற்கான வரைவு திட்ட அறிக்கையின் மீது அவர்களின் ஒப்புதலை விரைவில் பெற வேண்டும் என நான் கடிதங்கள் மூலமாகவும், மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தியுள்ளேன்.

இதன் ஒருபகுதியாக, தமிழ்நாட்டிலுள்ள வறட்சியான பகுதிகளுக்கு நீர்வள ஆதாரத்தினை ஏற்படுத்தி, அங்குள்ள

வேளாண் பெருமக்களின் துயர் துடைக்க, காவேரி–குண்டாறு திட்ட முதற்கட்ட பணிகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் உதவியை எதிர்நோக்கி மாநில அரசு நிதியிலேயே வரும் நிதியாண்டில் இத்திட்டம் தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதியில் ஏற்படும் மாசுகளை நீக்கி, காவேரி நதியை தூய்மையாக்க “நடந்தாய் வாழி காவேரி” திட்டத்தினை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஏற்கெனவே கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கும் மற்றும் நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கு பாசன வசதி அளிப்பதற்காகவும், அத்திக்கடவு–அவிநாசி கால்வாய் திட்டம் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 57 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் தாமிரபரணி–கருமேனி ஆறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின் நில எடுப்பு பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும், விரைவில் இத்திட்டம் நிறைவு பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதிநீர் மற்றும் முல்லைப்பெரியார் அணை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டது மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் தான். தற்போது தென்பெண்ணையாற்றின் பாசன விவசாயப் பெருமக்களின் உரிமையை நிலைநாட்டவும் மாண்புமிகு அம்மாவின் அரசு **03.07.2019** அன்று ஒரு இடைக்கால மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் பேரில்

இப்பிரச்சினைக்கு தீர்வு காண நடுவர் மன்றத்தினை அமைக்க மத்திய அரசை வலியுறுத்தியும், உச்சநீதிமன்றத்தில் தொடர் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

காவேரி மற்றும் முல்லை பெரியார் பிரச்சினைக்கு ஓர் தீர்வு கண்டது போல் இந்த பிரச்சினைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு தீர்வு காணும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 12,524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகளில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" என்ற அற்புதமான திட்டம் விரைவில் துவக்கப்பட உள்ளது. இதற்காக இந்த ஆண்டு 76 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுக் குழுக்கள் அமைத்தல், அக்குழு உறுப்பினர்களுக்கு வாலிபால், கபடி, கிரிக்கெட், பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், திறந்த வெளி உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல், போட்டிகள் நடத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில், தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமை மூலமாக மக்களுக்கு சிறந்த சேவை புரியும் அரசு தான் ஒரு நல்ல அரசாகத் திகழ முடியும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் நல்ல பலனை தந்துள்ளன. பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின் படி, இந்தியாவில் அதிக புதுமைகளை

படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 899 கோடி ரூபாயாகும். இதனால் 6 இலட்சத்து 60 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்றிட இல்லந்தோறும் இணையம் என்ற கொள்கையை செயல்படுத்தும் வண்ணம், அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்களும் அடையும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளும், பாரத்நெட் திட்டத்தை 1,815 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும், கண்ணாடி இழை கட்டமைப்பு மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் அனைத்து கிராமங்களுக்கும் 1 Gbps அளவிற்கு குறையாமல் இணையதள வசதி வழங்கப்படும். இத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் "தமிழ்நெட்" திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நகரப்பகுதிகளுக்கும் அதிவேக இணையதள வசதி விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்த திட்டங்கள் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து

957 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ள அரசு அம்மாவுடைய அரசு.

கல்வித்துறை சிறக்க வேண்டும் என்பதற்காக கடந்த 8 ஆண்டுகளில் 43,587 புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் துரிதமாக நிரப்பப்பட்டு வருகின்றன. புதிதாக 248 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திய அரசு அம்மாவுடைய அரசு.

இந்த சாதனைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், **முக்கிய பாடங்களை எளிதாக புரியும் வகையில் ஒளிபரப்பவும், பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித் தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணாக்கர்களிடைய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் "கல்வி தொலைக்காட்சி" என்ற பெயரில் ஒரு புதிய தொலைக்காட்சி என்னால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இந்த தொலைக்காட்சியில் 24 மணி நேரமும் மாணாக்கர்களுக்கு பயன்படக்கூடிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு மிகுந்த வரவேற்பை பொதுமக்களிடத்திலும் மாணாக்கர்களிடத்திலும் பெற்றுள்ளது என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.**

''கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி, பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்'' என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கியது. இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 என உயர்ந்து, இந்தியாவிலேயே

உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர் 7 ஆக இருந்த சட்டக்கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 14 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர திருச்சிராப்பள்ளியில் ஒரு தேசிய சட்டப்பள்ளியும் மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையினை ஏற்று 227 புதிய நீதிமன்றங்கள் திறப்பதற்கான அரசாணையை வெளியிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர, பெண்கள் வன்கொடுமை, குழந்தைகள் பாலியல் தொல்லை போன்ற வழக்குகளில் விரைந்து நீதி கிடைக்க ஏதுவாக 16 போக்சோ (POCSO) நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டு, தற்போது 3 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 13 போக்சோ நீதிமன்றங்களும் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் தொன்மையை உலகத்திற்கு பறைசாற்றும் கீழடியில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை, மக்கள் பார்வையிடும் பொருட்டு, மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தொல் பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அதனை நிரந்தரமாக காட்சிப்படுத்த, சிவகங்கை மாவட்டம் கொந்தகை கிராமத்தில் உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அருங்காட்சியம் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏற்கெனவே மாண்புமிகு அம்மாவின் அரசு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் நிதி வழங்கியது போல, தற்போது அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்திலும் தமிழ் இருக்கை அமைக்க ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''காலத்தை வென்றவர், காவியமானவர்,
வேதனை தீர்த்தவர் – நம் விழிகளில் நிறைந்தவர்''

பாரதரத்னா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, புரட்சித்தலைவரின் நினைவைப் போற்றிடும் வகையில், கடந்த 27.2.2019 அன்று காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது நூற்றாண்டு வளைவு என்னால் திறந்து வைக்கப்பட்டு, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு புகழ் சேர்க்கப்பட்டுள்ளது.

''பிறந்த நாடே சிறந்த கோவில்
பேசும் மொழியே தெய்வம் – இதை
மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்
கோபுரமாகும் கொள்கை''

என்று புரட்சித்தலைவர் பாடிய பாடலுக்கு ஏற்ப, தமிழுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் சேவை செய்த தியாகிகளை நினைவு கூருவதிலும், அவர்களுக்கு சிறப்பு செய்வதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், தமிழ்நாட்டில் 7 மணி மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டு மறைந்த தலைவர்களுக்கு பெருமை சேர்த்துள்ளோம். அதுமட்டுமன்றி, இதே சட்டமன்றப் பேரவையில், விடுதலைப் போராட்ட வீரரும், சமூக நீதிப் பாதுகாவலருமான திரு.ராமசாமி படையாச்சியார்

அவர்களின் திருவுருவப் படமும் இங்கே திறக்கப்பட்டு அவருக்கு பெருமை சேர்த்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

கடந்த 9 ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு 75 ஆயிரத்து 268 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 17இல் இருந்து 16ஆகவும், பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில், 2030இல் அடைய வேண்டிய நீடித்த நிலையான இலக்குகள், நாம் எடுத்த பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளால் இப்போதே அடைந்துவிட்டோம் என்பது ஒரு சரித்திர சாதனையாகும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த ஆண்டு ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒரே ஆண்டில் 9 மருத்துவக் கல்லூரிகளை பெற்ற ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசுதான். இப்படி 9 மருத்துவக் கல்லூரிகள் துவங்குவதன் மூலம் கூடுதலாக 900 பேர் மருத்துவர்களாக படிக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு அம்மாவின் அரசு தான் உருவாக்கித் தந்துள்ளது.

மேலும் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் இதுவரை 32,660 பணியிடங்களை நிரப்பியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக மத்திய அரசின் தேசிய விருதுகளை தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து பெற்று சாதனை படைத்த அரசு அம்மாவின் அரசு.

மருத்துவர்கள் தங்கள் கோரிக்கைகளை பல்வேறு கால கட்டங்களில் வலியுறுத்தி வந்தனர். அவர்களது கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு கவனத்துடனும் கனிவுடனும் பரிசீலனை செய்யும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

“தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தொழில் அல்லது வணிக நிறுவனமும் நிலையான தரமுள்ள தடையற்ற மின்சாரத்தை பெற வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக பல்வேறு திட்டங்கள் மூலமும், புதிய மின் நிலையங்களை இயக்கியதன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் மின் கொள்முதல் செய்வதன் மூலமும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமும், கூடுதல் மின்சாரம் மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டு அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் என்ற நிலையை தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 2,600 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சூரிய எரிசக்தி அதிகம் கிடைக்கக்கூடிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சூரிய எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க “சூரிய எரிசக்தி கொள்கை 2019” வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையின்படி சுமார் 9,000 மெகாவாட் திறனுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொடர்ந்து மின் மிகை மாநிலமாகவும், தரமான தடையில்லா மின்சாரத்தை வழங்குவதன் காரணத்தினாலும், புதிய தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டு கோடை காலத்தில் ஏற்பட்ட உச்சக்கட்ட மின் தேவைகள் எந்தவிதமான மின் தடையும் இன்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

“சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவதும், மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் ஒரு அரசின் தலையாய கடமையாகும். மக்களின் முக்கிய பிரச்சினைகளையும், அவர்களின் உணர்வுகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளும் தன்மையே நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைக்க செய்கிறது” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அவர்களின் “அமைதி, வளம், வளர்ச்சி” என்ற கோட்பாட்டின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் மாமல்லபுரத்தில் மாண்புமிகு பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங் அவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு பெரும் உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வுக்கு சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த காவல் துறையினரை மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களும், சீன நாட்டு அதிகாரிகளும், அதிபர் அவர்களும் வெகுவாக பாராட்டினார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நான் சட்டமன்றத்தில் அறிவித்தபடி, காவல் துறையின் பணிகளை மேலும் சிறப்பாக்கும் வகையிலும், நமது காவல் துறை இந்திய அளவில் முதன்மை இடத்தை தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து

ஆராய்ந்து, பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்க ‘‘நான்காவது போலீஸ் கமிஷன்’’ அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதை தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமையுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் தமிழ்நாடு முழுவதும் முழுவீச்சில் பொருத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் மட்டும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் கேமராக்களும், சென்னை உட்பட மாநிலம் முழுவதும் சுமார் 4 இலட்சத்து 40 ஆயிரம் CCTV கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது பெருமளவில் குறைக்கப்பட்டதுடன், குற்றவாளிகளை மிக விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இத்திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது.

மகளிர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக ‘‘அம்மா ரோந்து வாகனம்’’ மற்றும் எளிதில் புகார் அளிக்க வாட்சப் எண் மற்றும் ‘‘காவலன்’’ செயலி ஆகியவை சென்னை பெருநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **‘‘காவலன்’’ செயலியைப் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது இலட்சக்கணக்கான மகளிர் இச்செயலியை பதிவிறக்கம் செய்து பெரும் வரவேற்பை நல்கி உள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் தேசிய அளவில் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் மிகக்குறைவாகவே உள்ளதாக சமீபத்தில் வெளியான தேசிய குற்றப் பகுப்பாய்வு அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் தேனியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களில் 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2018–2019ஆம் ஆண்டில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தொடர்ந்து 2ஆவது முறையாக தேர்வு செய்து பிரபல ஆங்கிலப் பத்திரிகையான “இந்தியா டுடே” விருது வழங்கியுள்ளது. தமிழ்நாடு காவல் துறையினரின் சிறப்பான செயல்பாடுகளினால், மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி தீவிரவாத இயக்கங்கள் மற்றும் நக்ஸல் அமைப்புகளின் சட்ட விரோதமான செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டு அமைதியான மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்பிற்குப் பிறகு, உலகமே மாமல்லபுரத்தை நோக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், மாமல்லபுரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் தனியே கருத்துரு ஒன்று தயாரித்து மத்திய அரசின் நிதி உதவியுடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக, பெண்களின் நல்வாழ்வுக்காக அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 2011ஆம் ஆண்டு முதல் 2017–2018ஆம் ஆண்டு வரை 61,675 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். 2018–2019ஆம் ஆண்டில் 2,95,612 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மிகுதியாக 11 ஆயிரத்து 449 கோடி ரூபாய் வழங்கிய அரசு அம்மாவின் அரசு என்பதை பெருமையுடன்

சொல்லிக் கொள்கிறேன். 2019–2020ஆம் நிதியாண்டில் இதுவரை, 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 9 ஆயிரத்து 45 கோடியே 88 இலட்சம் கடனுதவிகள் 2,16,965 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைப்பெண்களின் திருமணத்திற்காக 5 வகையான திருமண நிதியுதவித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தாலிக்குத்தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 1,04,795 பயனாளிகளுக்கு 838.36 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. 415.21 கோடி ரூபாய் நிதி உதவியும் திருமண திட்டத்தின் கீழ், வழங்கப்பட்டுள்ளது. மேலும், குழந்தை பிறப்பில் பாலின விகிதத்தை உயர்த்தியதற்காக தமிழ்நாட்டிற்கு ‘‘நாரி சக்தி புரஸ்கார்’’ விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. முதியோர் நலனை பாதுகாப்பதற்கென சிறந்த முறையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டதற்காக ‘‘வயோசே ரேஷ்ட்ரா சம்மான்’’ விருதும் மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையினை முன்னேற்றுவதற்கு பிரதமரின் ஊட்டச்சத்து ஒருங்கிணைப்புத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்கான தேசிய விருதினை இவ்வாண்டு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் உயர பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவீத இட ஒதுக்கீடு அளித்து, அவர்களுக்கு உகந்த பணியிடங்களை கண்டறிந்து இது வரை 1,483 நபர்களை பணியமர்த்தி உள்ளது. மூன்றாம் பாலினத்தவரும் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழும் வண்ணம், அவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்களும், மாவட்ட அமைச்சர்களும் கிராமங்களுக்கே சென்று, மனுக்களைப்பெற்றுத் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக 9,77,265 மனுக்கள் வரப்பெற்றன.

அவற்றில், தகுதியான 5,18,946 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 6,152 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக் கொள்ளப்படாத மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறேன். தீர்வு காணப்பட்ட மனுக்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தில் முதியோர் ஓய்வூதிய மனுக்கள் மட்டும் 1,54,888 மனுக்கள் ஆகும்.

பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமத்திற்கு செல்கின்ற போது வயது முதிர்ந்தவர்கள், உழைக்கும் திறனற்று இருக்கின்ற அந்த முதியவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே 5 இலட்சம் முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்து எல்லா அமைச்சர்களும், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நேரடியாக சென்று அந்த முதியவர்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்களை ஆய்வு செய்து, தகுதியான மனுக்களுக்கு இன்றையதினம் முதியோர் உதவித் தொகை வழங்குகின்ற அரசு அம்மாவுடைய அரசு. மேலும், விடுபட்டிருந்தால் இதுவரை 1,54,888 பேருக்கு தான் கொடுத்திருக்கிறார்கள், எஞ்சியவர்கள் இன்னும் கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர்களுக்கு முதியோர் ஓய்வூதியத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட குறைப்பாட்டை நீக்க வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்திலே 5 இலட்சம் முதியவர்களுக்கு இந்த ஓய்வூதியம்

வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே மாவட்டந்தோறும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று அந்த மனுக்களை பெற்று அதற்கு பரிகாரம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் முதியோர் உதவித் தொகை பெற, தகுதி வாய்ந்த நபர்களை கொடுத்தால் நிச்சயமாக அவருக்கு வழங்கப்படும். ஆகவே, இப்படி நீங்கள் சொன்ன காரணத்தினாலே தான், இதையெல்லாம் ஆய்வு செய்து கூடுதலாக 5 இலட்சம் முதியவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற உத்தரவை நான் வழங்கி இருக்கின்றேன். அந்த அடிப்படையில் தான், 1,54,888 பேர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த மனுக்கள் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கிட்டத்தட்ட 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்களை வாங்கினேன், அந்த மனுக்களை ஆய்வு செய்து, தகுதியான மனுக்களின் அடிப்படையிலே தான் 1,54,888 நபர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். மீதி இன்னும் இருக்கிறது. கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர்களுக்கு கொடுக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அதை நீங்கள் குறையாக நினைக்க வேண்டாம், நீங்கள் எப்படி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றீர்களோ, அதே நோக்கத்துடன் தான் நான் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்றேன்.

இதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுவிட்டது. 5 இலட்சம் முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. அதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. ஒன்றரை இலட்சம் பேருக்கு தான் வந்திருக்கிறது, மீதம் மூன்றரை இலட்சம் பேருக்கு கொடுக்கலாம். அதுமட்டுமல்ல, முதியோர் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு 50,000 ரூபாய் வரை தான் சொத்து இருக்க வேண்டும். அதையும் 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தி நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அந்த முதியோரே நேரடியாக கொண்டு போய் கொடுத்தால் கூட அதை நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் உத்தரவு வழங்கி இருக்கின்றோம். இது முதியோர் உதவி பிரச்சினை. இதில் அரசியலே கிடையாது. உழைக்கும் திறனற்ற முதியவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தை நாங்கள் துவக்கி இருக்கின்றோம். பாகுபாடே கிடையாது. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று கிடையாது. முதியோர் என்பவர்கள் பொதுவானவர்கள், உழைக்கும் திறனற்றவர்களான அவர்கள் ஒவ்வொருவருக்கும் செய்யும் சேவை நோக்கத்தோடு தான் இந்த திட்டத்தை அறிவித்திருக்கின்றோம். நீங்கள் சொன்னதை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, நீங்கள் அடுத்த கூட்டத்திற்கு வருகின்ற போது, ஏற்கெனவே நீங்கள் புகழ்ந்து பேச மாட்டீர்கள் என்று நேற்றே சொல்லிவிட்டீர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்லி விட்டார்கள், நாங்கள் எப்பொழுதுமே எதிர்த்து தான் பேசுவோம் என்று இருந்தாலும், இந்த திட்டத்தையாவது புகழ்ந்து பேச வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைந்து கிடைக்க வகை செய்யும் நோக்குடன், மாண்புமிகு அம்மாவின் அரசு வரலாற்றுச் சாதனையாக 5 புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. அதற்கான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமனம் செய்து முழு வீச்சில் மாவட்டங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இப்புதிய மாவட்டங்களுக்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை வெற்றிகரமாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தியதால், மத்திய அரசிடமிருந்து குறைந்த அளவில் இழப்பீட்டுத்தொகை பெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது.

தமிழ்நாடு வணிக மற்றும் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை ஜி.எஸ்.டி. மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று, பல வகையான சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வரி விலக்கும், வரி குறைப்பும் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு பொருட்களுக்கான விலை, தொடர்ந்து மக்கள் பயன்பெறும் வகையில் குறைப்பு செய்யப்பட்டது. மேலும், சில சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு விரி விலக்கு பெறவும், வரி குறைப்பு செய்யவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, இட மாறுதல்கள் போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி, பணியாளர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசு அவ்வப்போது அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வினை மாநில அரசு ஊழியர்களுக்கும் உடனுக்குடன் வழங்கி வருகின்ற அரசு அம்மாவின் அரசு.

குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்க, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமுதாய நலப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. கடந்த **8** ஆண்டுகளில், **1.92** இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் **8,222.91** கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை தியாகராய நகர், பாண்டி பஜார் பகுதியில் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ், சுமார் 40 கோடி ரூபாய் செலவில் நடைபாதை வளாகம், வை–ஃபை வசதி, சிசிடிவி கேமராக்கள், ஸ்மார்ட்பைக்குகள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் போன்ற நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறக்கப்பட்டுள்ளது. இதற்கு முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

மத்திய அரசின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், நாட்டிலேயே அதிகபட்சமாக 11 நகரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டு, 11,000 கோடி ரூபாயில் 413 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 72 பணிகள் முடிவடைந்தும், 206 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

2019–2020ஆம் நிதியாண்டில், நெடுஞ்சாலைத் துறை மூலம் 9,211 கி.மீ. நீளத்திற்கு சாலைகள், 2,582 எண்ணிக்கையில் சாலை பாதுகாப்புப்பணிகள், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் தாங்கு சுவர் அமைக்கும் பணிகள் உட்பட 6,664 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 5,451 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 65 ஆற்றுப் பாலங்களும், ஒரு சாலை மேம்பாலமும், 4 இரயில்வே மேம்பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 10,563 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 328 ஆற்றுப் பாலங்களும், 19 சாலை மேம்பாலங்களும், 42 இரயில்வே மேம்பாலங்களும், 2 நடை மேம்பாலங்களும் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

2017–2018 முதல் 2019–2020 முடிய 3 ஆண்டுகளில் சட்டமன்ற விதி எண் 110–இன் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தம் 453 அறிவிப்புகளில், 419 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 118 அறிவிப்புகளுக்கான திட்டங்கள்

முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன, 301 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 25 அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 8 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும், ஒரு அறிவிப்பு சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 34 ஆயிரத்து 893 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 829 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்கு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், 24 ஆயிரத்து 90 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 909 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் நேற்று, நாலடியாரில் இருந்து ஒரு பாடலை குறிப்பிட்டுப் பேசினார். இத்தருணத்தில், நன்னூலில் இருந்து கீழ்க்கண்ட பாடலை நான் குறிப்பிட விரும்புகிறேன்:–

“மன்னுடைய மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையிலும்
மன்னிய அவையிடை வெல்லுற பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தல்நம் தகும் புலவோர்க்கே”

அதாவது, தன்னுடைய புலமைத் திறனை அறியாதவரிடத்தும், அவையில் வாதிட்டு வெற்றி பெற வேண்டிய சூழ்நிலையிலும், எதிரி தன்னைப்பழித்துரைக்கும் போதும், தன்னைத்தானே புகழ்ந்து கொள்வது தவறாகாது. இருந்தாலும், நாங்கள் எங்களைப் பற்றி தற்பெருமையாக ஆளுநர் உரையில் எதையும் குறிப்பிடவில்லை. மாறாக, இந்த அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், சாதனைகளையும், நிகழ்த்தப்பட்ட சாதனைகளுக்காக பெற்ற

விருதுகளையும் தான் குறிப்பிட்டுள்ளோம். இது தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.

எல்லா ஆட்சிக்காலத்திலும், ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில், ஆளுநர் உரையில் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி கோடிட்டுக் காட்டப்படுகின்றது. இதைத் தான் நீங்களும் செய்தீர்கள்; நாங்களும் செய்கின்றோம்.

‘‘அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை. துன்பமும், துயரமும் வரும் பொழுதெல்லாம், அதனை எதிர்கொண்டு வெற்றிகண்டது, சுடர் முகம் ஏந்தும் உங்களைப் போன்ற உடன் பிறப்புகளைப் பெற்றதால் தான்’’ என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது ஆசியுடன் ஆட்சியை நடத்தி வரும் நாங்கள் மிகவும் சாதாரணமானவர்கள் தான். ஒரு முதலமைச்சரின் வாரிசாகவோ, அரசியல் பின்புலம் உள்ள குடும்ப வாரிசாகவோ நான் இந்த இருக்கையில் அமரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவரும் அப்படித்தான். விவசாய குடும்பத்தில் பிறந்த நான், மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், அவரது தொண்டர்களை ஒருங்கிணைத்து பல்வேறு வகையிலும் மக்கள் நலனைப் பற்றியே சிந்தித்து ஆட்சி நடத்தி வருகிறேன். அதன் மூலம் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இதன் பலனாக இன்று மத்திய அரசும், பல்வேறு தனியார் ஆய்வு நிறுவனங்களும், முன்னணி பத்திரிகை நிறுவனங்களும் தகுந்த ஆய்வுகளுக்குப் பின்னர் இந்தியாவிலேயே தமிழ்நாடு, பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு, முன்னணியில் இருப்பதாக அறிவித்துக் கொண்டே உள்ளன.

2018–2019ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.17 சதவீதமாக உள்ளது. இது 2018–2019ஆம் ஆண்டின் தேசிய வளர்ச்சி விகிதமான 6.81 சதவீதத்தைவிட அதிகமாக உள்ளது என்று ஒரு ஆங்கில நாளிதழ் தமிழ்நாட்டை பாராட்டியுள்ளது.

அதேபோல, மாண்புமிகு அம்மாவின் அரசு எத்தனையோ விருதுகள் வாங்கியிருந்தாலும், அதன் நல்லாட்சிக்கு ஒரு அத்தாட்சியாக வேளாண்மை, தொழில், மனிதவள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூகநலத் திட்டங்கள் உள்ளிட்ட பத்து துறைகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், 2019க்கான மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை அனைத்தும் மாண்புமிகு அம்மாவின் ஆசியினாலும், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழகத்தின் உண்மைத் தொண்டர்களாலும், எங்களது நிருவாகத் திறமையினாலும் மற்றும் மக்களின் ஒத்துழைப்பினாலும், கிடைக்கப் பெற்றது என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி மாலைகள். இந்த வெற்றி மாலைகளைக் கண்டு பொறுக்க முடியாமல், சில எதிர்க்கட்சியினர் இந்த ஆட்சியின் காலத்தை இன்று, நாளை, 10 நாள், 100 நாள் என்று குறைத்து மதிப்பிட்டார்கள். அவர்களின் எண்ணத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இன்று விருதுகள் ஒன்று பத்தாகி, பத்து நூறாகி பெருகிக்கொண்டு, தமிழ்நாட்டில் விருது மழையாய் பொழிந்து கொண்டிருக்கிறது.

சிலர், இயற்கைப் பேரிடர் என்றாலும், குடிநீர் பற்றாக்குறை என்றாலும், உள்ளாட்சித்தேர்தல்கள் என்றாலும், எல்லாப் பிரச்சினைகளிலும், மக்களை திசைத் திருப்பி போராட்டங்கள்

நடத்துவதிலும், நீதிமன்றங்களில் வழக்குகளைப் போட்டு, அரசின் வேகத்திற்கு ஒரு வேகத்தடையாக இருக்கிறார்களே தவிர, வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கப்பூர்வமான எந்த ஒரு நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு அளிப்பதில்லை.

“எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த வழியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை நாங்கள் வைத்திருக்கின்றோம். அதேபோல அண்ணா அவர்களின் பெயரிலே, நம்முடைய இயக்கம் இன்றைக்கு இங்கே நடந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, நம்முடைய இயக்கம் மக்களுக்கு சேவை செய்வதிலே முதலிடத்தை பிடித்துக்கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நம்முடைய இயக்கம் நனவாக்கிக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எனவே, சோதனைகளை எல்லாம் தாண்டி சுடச் சுட ஒளிவிடும் தங்கத்தைப் போல ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கி பீடு நடை போடுவோம்” என்றார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கூற்றுப்படி, இந்த அரசு வெற்றி மேல் வெற்றி பெற்று, வெற்றி வாகை சூடி வருகிறது.

அண்மையில் நடைபெற்ற விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரியில் சட்டமன்ற இடைத்தேர்தலில் நமது கழகம் மிகப்பெரிய வெற்றி பெற்று, மக்கள் நம் பக்கம் உள்ளதை தெளிவாக்குகின்றது. ஊரக உள்ளாட்சித்தேர்தல்களில் தமிழ்நாடு மக்கள் நமக்கு அளித்த ஆதரவு இதனை உறுதிபடுத்தியுள்ளது. விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி இடைத்தேர்தலில் வாக்களித்து வெற்றிபெற வைத்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் 27 மாவட்டங்களில் நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களில் வாக்களித்த

வாக்காளர் பெருமக்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இதே போன்று, வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலிலும், 2021 இல் நடைபெறும் சட்டமன்ற பொதுத் தேர்தலிலும் மக்களின் பேராதரவை தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பெற்று மூன்றாவது முறையாக கழகம் வெற்றிபெற்று, “வீட்டுச் சுவற்றின் இடுக்கிலே முளைத்திருக்கும் செடிகளை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, கழகத்திற்கும், கழக ஆட்சிக்கும் இடையூறு செய்பவர்களை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்.

கடந்த இரண்டு நாட்களாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் NRC–ஐ பற்றி, நீண்ட விவாதம் செய்தனர். அதற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினர் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதை தெளிவாகவும், விளக்கமாகவும் அறுதியிட்டும், உறுதியிட்டும் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு மாண்புமிகு அம்மாவின் அரசும், தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக, சிறுபான்மையின மக்களுக்கு அரணாக இருந்து பாதுகாத்து வருகின்றது. இருபெரும் தலைவர்களின் வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறுபான்மையின மக்களை தொடர்ந்து பாதுகாக்கும் அரணாக விளங்கும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அரசியல் உள்நோக்கத்துடன், உண்மைக்குப் புறம்பாக பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், சிறுபான்மையின மக்கள் எள்ளளவும் ஐயப்படவோ, அச்சப்படவோ தேவையில்லை என்பதையும் திடமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

“நல்லவர் இலட்சியம் வெல்வது நிச்சயம்
என்றும் அது தான் சத்தியம்” என்று கூறி,

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உரிய பதிலை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவர்களது கோரிக்கை ஏதேனும் விடுபட்டிருப்பின், அதையும் அரசு கவனத்தில் கொண்டு, விதிகளின்படி, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த இனிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கும் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத்தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

“அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்“ என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை